# திருவருட்பா

[illegible] 2 [illegible]

JL
Y15m,N37
N38.2
134087.

238

Regd. No. M-3660

1st SEPTEMBER 1938

# கிரஹலக்ஷ்மி



# GRIHALAKSHMI

KING OF TONICS




அமிருதா நரம்புகளுக்கு வலு
வளிக்கும் மருந்து.

SEP 1938
MADRAS
329

GRIHALAKSHMI

# கிரஹலக்ஷ்மி

ஸ்திரீகள் சித்திர மாதப் பத்திரிகை

பிரசுரிப்பவர்

டாக்டர் எஸ். சேஷகிரி ராவ்.

பத்திராதிபர்

எஸ். கிருஷ்ணன், பி. ஏ. (ஆனர்ஸ்).

மலர் 2] செப்டம்பர் 1938 [இதழ் 9

PRINTED AT THE LODHRA PRESS, ROYAPETTAH, MADRAS.

134087
சென்னை-600 008

# கிரஹலக்ஷ்மி

## சந்தா விகிதம்

[illegible] ஆறு மாதம் 1-8-0. 6 மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பர்மாவுக்கு வருட சந்தா ரூ. 3-6-0. தனிப்பிரதி விலை அணு 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணு போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு $12\frac{1}{2}\%$ கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிரிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினுல் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனுவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை


பத்திரிகை கிடைக்கப் பெருத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா


சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோருகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே. என். கேசரி, 15, வெஸ்ட்காட் ரோட், ராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும்.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 SEP 1938
MADRAS



# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

பெங்களூர் : மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.
கோலார் கோல்ட் பீல்ட்ஸ் : திரு. ஏ. எம். ஏ. தாஸ், கண்ணபிரான் தெரு, ராபர்ட்ஸன் பேட்டை, கோலார் கோல்ட் பீல்ட்ஸ்.
திருப்பதி : மெஸர்ஸ் ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்சென்ட்.
சேலம் : எம். எஸ். ராஜகோபால், கோபால்ஸ் நியூஸ் மார்ட், சின்னக்கடைத் [தெரு.
மதனபள்ளி : என். ராதாகிருஷ்ணய்ய செட்டி, நியூஸ் ஏஜன்ட்.
திண்டிவனம் : திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.
சித்தூர் : திரு. வி. வெங்கடரமணய்ய செட்டி, 163, பஜார் ரோட், சித்தூர்.
வேலூர் : திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.
திருச்செங்கோடு : திரு. டி. ஏ. செல்லமுத்து, நியூஸ் ஏஜண்ட், அம்மன்கோயில் [தெரு.
கோயமுத்தூர் : திரு. கே. பழனிக்கவுண்டர், முனிசிபல் மிடில்ஸ்கூலுக்கு எதிர்புறக் [கடை.
மதுரை : திரு. ஏ. கே. ராமஸ்வாமி, 71, தெற்கு ஆவணிமூல வீதி.
திருவண்ணாமலை : மெஸர்ஸ் மணி புரொவிஷன் ஸ்டோர்ஸ், ஜெனரல் மெர்ச்சென்ட்ஸ் அண்டு கமிஷன் ஏஜண்ட்ஸ்.
காரைக்குடி : மெஸர்ஸ் பாரதிபிக்சர் பாலஸ்.
திருநெல்வேலி டவுன் : திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழரத வீதி.
தூத்துக்குடி : மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட், கதர்ஸ்டோர், 25, கிரேட் காட்டன் ரோட்.
பீமாவரம் : திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் [பார்மஸி.
நிடதவோல் : திரு. கே. வி. சென்ன கேசவய்யர், வியாபாரி.
ஹனுமகொண்டா : திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.
சென்னை : மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.
கொழும்பு : திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, நார்ரிஸ் ரோட்.
யாழ்பாணம் : திரு. ஏ. எஸ். அந்தோனி பிள்ளை, நார்த் ஸிலோன் நியூஸ் ஏஜன்ஸி, இரண்டாவது கிராஸ் தெரு.
கண்டி : திரு. வி. ஏ. நடராஜா, ஜாப்னுஸ்டோர், 77 & 78, பிரௌன்ரிக் தெரு.
ரங்கூன் : திரு. வி. பகவதி சாஸ்திரி, 248, பேர் தெரு.
கோலாலம்பூர் : திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.
தாராபுரம் : நாகராஜ நாயுடு, நியூஸ் ஏஜண்ட்.

ஹிக்கின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
**ராயப்பேட்டை, : : சென்னை.**


## சாஸ்திரி ஹோட்டல்

தம்பதிகள் தங்குவதற்கு தகுந்த இடம்—சுவை மிகுந்த உண்டிகள் இன்பமான பானங்கள்—இணையற்ற தயாரிப்பு—வகையான உபசாரம்—நல்ல காற்றோட்டமுள்ள உல்லாச பவனம்—முதல்தரமான வசதிகள் கிடைப்பது

**எங்கே?**

# சாஸ்திரி ஹோட்டல்

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**

## வாஜீகர

(REGD.)

**ஓர் வரப்பிரஸாதம்**

ஆச்சரியமாக சீக்கிரத்தில் யௌவனம் தரும்.

இதற்கு நிகர் வேறொன்றில்லை.

பெரிய புட்டி 1-க்கு ரூ. 5 0 0
சிறிய புட்டி 1-க்கு ரூ. 2 8 0

மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்,
107, பிராட்வே, சென்னை.

## சௌந்தரியத்திற்கு

### கேஸரி போமேட்

இதை தலை வாருவதற்கு முன் கொஞ்சம் கையிலெடுத்து தலையில் தடவி வாரிக்கொண்டால் மயிர் ரேகைகள் மினுமினுப்பாகவும், அழகாகவும், மிருதுவாகவும் இருக்கும். இது இந்த தேச பேர்போன அத்தர் சேர்த்து தயார் செய்யப்பட்டது. வாசனையுள்ளதும், வாசனை யில்லாததுமாக இரண்டு விதங்களில் கிடைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 4.

**கேஸரி குடீரம்,**
**ராயப்பேட்டை - மதறாஸ்**

# பொருளடக்கம்


1. வளையல் அழகு .... .... .... 577
2. ஸ்ரீமதி ராதாபாய் மசோதா — ஸ்ரீமதி எஸ். கமலா .... 579
3. ஹிந்து மதமும், பலதார மணமும் — டாக்டர் ஏ. எஸ். அல்டேகர் ... 585
4. இல்லறமும், மனத்துறவும் — திரு. ஜே. வெங்கட்ராம அய்யர் .... 590
5. ஸ்ரீகாளஹஸ்தி — ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் .... 593
6. சண்பகம் — டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை .... 597
7. கூந்தலழகு — திரு. சி. கனகசுந்தர தேசிகன் .... .... 599
8. அனந்த பத்மனாப விரதமகிமை — ஸ்ரீமதி டி. வி. ரத்னம் .... 602
9. பணப் பெட்டி — ஸ்ரீமதி கே. கமலா .... .... 606
10. 'பர்தா'வில் வாழும் ஆடவர்கள் — திரு. கே. பி. மத்தாய் .... 609
11. வசந்தா — "தாமரை" .... .... .... 612
12. மலேரியா ஜுரம் — திரு. டி. கே. கோவிந்தய்யர் .... 617
13. பெண்ணுலகு! — "பட்டோன்" .... .... 621
14. பலாப்பழ பக்ஷணங்கள் — "ஜனககுமாரி" .... .... 622
15. நரதேவதைக்குப் பெண் பலியா? — ஸ்ரீமதி ராஜம் .... 626
16. ஜியார்ஜியா — ஸ்ரீமதி ஜி. கிரிஜா .... .... 633
17. பத்மினி — ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள் .... .... 635
18. முடக்கொற்றான் — திரு. ஸி. எஸ். ஜகதீசசுந்தரம் .... 637
19. செய்தித்திரட்டு .... .... .... 638
20. கதம்பம் .... .... .... .... 640
21. விசித்திரம் ஆனால் வாஸ்தவம் .... .... .... 642
22. சினிமா செய்திகள் .... .... .... 644
23. ஆசிரியர் குறிப்புகள் .... .... .... 645
24. பஞ்சாங்கம் .... .... .... .... 647
25. பிரசவ அட்டவணை .... .... .... 648


**மூவர்ணப்படங்கள்**


1. வளை அடுக்கும் அழகு
2. ரஜபுத்ர கன்னிகை


OFFICE OF THE REGISTRAR



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS
OCT. 1958


## வளையழகு

இரங்கு மேகலை சிலம்பு அன்றி ஏனைய
விரும்பிய குழை தொடி மின்செய் கண்டிகை
மருங்கிறச் சுமப்பினும் வளை கைக்கில்லெனி
னரும்பிய முலையினர்க் கழகுண்டாகுமோ?

செல்வ நல்வணிகீர்! எஞ்செங்கைக் கேற்பன
நல்வளை தெரிந்திடும் என்று நாயகர் முன்
வல்வளர் இளமுலை மகளிர் மின்உமிழ்
கல்வளர் கடகமென் காந்தள் நீட்டினர்.

இவ்வளை போல்வன யாம் முன்கண்டிலே
மெய்வளை வணிகிரிவ்வரிய வெள்வளை
எவ்வயின் உள்ள இன்று இனிய ஆகியெம்
மெய்ம்மயிர் பொடிப்பெழ வீக்கஞ் செய்தவே.

—பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்.



# வளையல் அழகு

எவ்வளவு விலையுயர்ந்த ஆபரணங்களை அணிய சக்தியுள்ள மங்கையர்களுக்கும் வளையல்களை அணிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை இருக்கின்றது. அது பற்றியன்றோ பரஞ்சோதி முனிவரும் "மங்கலஞ் செய்தற்குறியது வளையன்றி ஏனைய அணியின்மையால் வளைகைக்கில்லெனில்—அரும்பிய முலையினார்க் கழகுண்டாகுமோ!" வென்று பாடியிருக்கின்றார். ஒலிக்கு மேகலையுஞ் சிலம்புமல்லாமல் அவை ஒழிந்த விரும்பப்பட்ட குண்டலம், சூடகம், விளங்கும் கண்டிகை போன்ற ஏனைய ஆபரணங்களை இடுப்பு ஒடிந்துபோகும் அவ்வளவு அதிகமாக அணிந்திருந்தபோதிலும் மங்கையர்க்கு பூரண அழகைக் கொடுப்பது வளையல்களே யென்பது தாத்பர்யம். இந்த உண்மையை நடைமுறையில் நாம் தினசரி வாழ்க்கையில் காண்கின்றோம். ஸ்திரீகளுக்கு தங்கள் மென்கரங்களை பலவித வர்ணதினுசு வளைகளால் பிரகாசித்து விளங்கச் செய்ய வேண்டுமென்ற அவா வுக்கு மட்டு உண்டு என்று சொல்ல முடியாது. அதிலும் நாகரிகம் முற்றிப்போயிருக்கும் இந்தக் காலத்தில் வளையல் தினுசுகளுக்கும், மோஸ்தருக்கும் கணக்கில்லை. கண்ணாடி வளையல்கள், சங்குவளையல்கள், 'எனாமல்' வளையல்கள், "ஐவரி" வளையல்கள், பொன்வளையல்கள், இன்னும் தங்க வளைகளைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை! எத்தனை வகைகள்! அவல்வளை, புஷ்பவளை என்று என்ன என்னமோ தினுசுகள் கிளம்பியிருக்கின்றன.

பெண்களுக்கு வளையல்கள் மீதுள்ள வாஞ்சை நல்லதுதான். மடமங்கையர்கள் தங்கள் நிற உடை அந்தஸ்துகளுக்கேற்ற பொருத்தமான வளைகளைத் தொடுத்து அடுக்கிக்கொண்டால் தங்கள் காதலருள்ளம் பூரிக்குமென்பதில் சந்தேகமில்லை. அவர்களது வனப்பும் பெருகும். ஆனால்

கண்டா கண்டவளைகளை ஒரேயடியாக தொடுத்துக் கொள்வதால் பணவிரயமாவது மன்னியில் பார்ப்பதற்கு கைகள் வளையல் அட்டைபோல விருக்கும். வடநாட்டு வனிதாரத்னங்கள் பலர் ஏதோ ஓரிரண்டு தந்த வளையல்களைமட்டுமே அணிந்திருந்தாலும் அவர்களது மென்கரங்களின் அழகு எவ்வளவு பிரகாசிக்கின்றன? உலக்கைக்குப் பூண்பிடித்தார்போல் தங்களுக்குத்தான் பணமிருக்கின்றது என்று பிறர் உணரும்படி செய்வதற்காக பலமாதர்கள் மிக பருத்தகண்ட வளையல்களைச் செய்து போட்டுக் கொள்ளுகிறார்கள். அவைகள் அழகு கொடுக்காமல் ஏற்கனவே உள்ள சிறிது அழகையும் கெடுக்கின்றன. ஆகையால் மங்கையர்கள் தங்கள் கரங்களின் தன்மைக்கேற்ப வளையல்களை அணிந்து கொள்ளல்வேண்டும்.

மேலும் சிற்சில வளையல்களுக்கு பற்பல தோஷங்களைப் போக்கும் குணங்களுண்டென்று சொல்லப்படுகிறது. அதை உத்தேசித்தே நாம் "வளைகாப்பு" என்ற ஒரு சடங்கை தலைக்குழந்தை யுண்டாயிருக்கும் பெண்களுக்கு ஏழாம் மாதம் செய்கின்றோம். இச்சடங்கு ஹிந்துக்கள் "வளையிடுதல்" என்ற வழக்கத்தை எவ்வளவு முக்கியமாகக் கருதி வந்திருக்கின்றனர் என்பதைக் காட்டுகின்றது. குழந்தைகள் பிறந்தபின்னரும் "காப்பிடும் தினம்" என ஒருநாள் குறிப்பிட்டு நம் அரும் குழந்தைகட்கு செப்புக்காப்பு, வெள்ளிக் காப்பு, பொற்காப்பு முதலியன தொடுத்து காப்பரிசி வழங்கிக் களிப்படைகிறோம்.

வளையல் அணிதலும், விற்றலும் மிகவும் பெருமையுடையதோர் வழக்கம் என்பதை உலகினருக்கு எடுத்து விளக்குதல் பொருட்டுத்தான் வேதமே தனது திருஉருவமென்று கூறியருளி விண்ணுலகினின்றும் வந்த இந்திர விமானத்திலெழுந்தருளிய சாமவேத கீதனாகிய சோமசுந்தரக்கடவுள் மதுரையம்பதியாகிய அந்த நான்மாடகூடலில், தானே தன் தோள் மேல்பட்டு நூல்களிலே அடுக்கிக் கோர்க்கப்பட்ட அழகிய வளைகளைச் சுமந்து வந்து, "மன்னும் மறையின் பொருள் (கண்ணுவர் முதலிய முனிசிரேஷ்டர்கட்கு) உரைத்த மணிவாய்திறந்து 'வளைகொண்மின்!" என்று கூவினாரென்றும், அவ்வினிய கூவலைக்கேட்டு, கார்காலத்திற் சூல்கொண்ட மேகம் ஒலிக்குமினிய ஒலியைக் கேட்டு ஆடச்சிறை விரித்தெழும் மயில்போல, தங்கள் சிலம்பொலிசிதற களங்கமில்லாக் குலப்பெண்கள் வாசலுக்கோடிவந்து எம்பெருமானால் வளைதொடுக்கப் பட்டனரென்றும், அவர்கள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு "எமக்கிடும், எமக்கிடும்," என்று உமாபங்கனைச் சூழ்ந்து கொண்டு அவர் மீது தங்களுக்குள்ள அன்பைத்தெரிவித்தனர் என்றும் திருவிளையாடல் புராணத்திலுள்ள "வளையல் விற்ற படலம்" தெரிவிக்கின்றது. நம் முகப்புச் சித்திரத்திலும் இரு இள மங்கையர்கள் வளையல் அடுக்கிக்கொள்ளும் காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் மங்கலம் அளிக்கும் நன்கலனாகிய வளையல்களை ஒவ்வொரு மெல்லியலாரும் உவந்து பூட்டி இன்புற்று வாழ்வார்களாக! அவர்களின் வளை ஒலி மக்களின் உளமகிழ்ச்சியை வெளிப்படுத்துமாக!



# ஸ்ரீமதி ராதாபாய் மசோதா

ஸ்ரீமதி எஸ். கமலா

●

நான் மாதர்களின் முன்னேற்றத்துக்கும், உரிமைகளுக்கும், சுதந்திரத்துக்கும் ஊக்கத்துடனும் உண்மையாகவும் பாடுபட்டு வந்திருக்கிறேன்; இனியும் நம்முடைய குறைகள் தீர்ந்து "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே" என்ற பாரதியாரின் கனவை நனவாகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனேயே என்னாலியன்ற வழிகளிலெல்லாம் நம் சமூகத்துக்காக சேவை செய்து வருகிறேன். நான் வைதீக பிச்சுவல்ல; "பழமை, பழமை" என்று அர்த்தமற்ற ஆதி ஆசார பழக்க வழக்கங்களை கட்டிக்கொண்டு இருக்க வேண்டுமென்று நினைப்பவளல்ல. இருந்தபோதிலும் சமூக சீர்திருத்த காரியங்களை மிகவும் நிதானத்துடனும், ஆழ்ந்த விசாரணையின் பேரிலும் தான் செய்ய வேண்டுமென்று நான் துணிவுடன் கூற முன்வந்துள்ளேன். நமது ஊக்கம் உண்மையாக இருக்கலாம். நாம் அடைய வேண்டிய நோக்கம் உன்னதமானதாகவே இருக்கலாம். ஆனால் இந்த ஊக்கம் ஆத்திரமாக மாறி நம்முடைய அளவுக்கு மிஞ்சிய ஊக்கம், ஆத்திரம், (Righteous indignation should not blind us to real facts) நமக்கு சில உண்மைகளை மறைத்து விடும்படி செய்து விட்டோமானால் நாம் அபேட்சிக்கும் நோக்கம் நிறைவேறுதது மட்டுமின்றி அந்த லட்சியத்துக்கு நாம் நம்முடைய அளவுக்கு மிஞ்சிய ஊக்கத்தால் கெடுதலே செய்தவராவோம். ஆகையால் எதற்கும் நிதானமாகப்போவது மிகவும் நல்லது.

ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் அவர்கள் மத்திய சட்டசபையில் "ஹிந்து பலதார மணத்தடைச் சட்டம், 1938" என்ற பெயருடன் ஒரு மசோதாவை ஹிந்துக்களிடை ஒரு சிலரால் கையாண்டு வரப்படும் பலதாரமண வழக்கத்தைத் தடைசெய்யும் நோக்கத்துடன் கொண்டு வந்துள்ளார். இது பற்றி பலரும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். யானும் இம்மசோதாவைப்பற்றி விவரமாக ஆராய்ச்சி செய்து பாரபட்சமின்றியும், உண்மையை உணர்ந்தும் என் அபிப்பிராயத்தை ஸ்பஷ்டமாக ஒவ்வொருவரும் அறியும்படி செய்ய விரும்புகிறேன். சீர்திருத்த உத்வேகம் உள்ளவர்கள் மசோதாவை அப்படியே ஆதரிக்க முன் வருவதில் ஆச்சர்யமில்லை. நானும் மசோதாவின் அடிப்படையான நோக்கமாகிய பலதாரமணத் தடையைப் பூர்ணமாக ஆதரிக்கின்றேன். அதுமட்டுமல்ல. எந்த உண்மையான ஹிந்துவும் மசோதாவின் லட்சியத்தை பிசகு என்று கூற முன்வரமாட்டான். அதாவது பலதாரமணம் ஏகபத்னி விரதத்தைவிட உயர்ந்தது என்று எந்த ஹிந்துவும் கருதமாட்டார். ஹிந்து மதத்தின் புராண, இதிகாசங்களும், சாஸ்திர சம்பிரதாயங்களும் எக்காலத்திலும் ஏக

பத்னி விரதத்தையே இல்லற வாழ்க்கையின் உயர்ந்த லட்சியமாகக் கருதுகின்றன. விவாக மந்திரங்களின் உட்பொருளை நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போமேயானால் அவைகள் பலதாரமணங்களுக்கு இடம் அளிக்கவில்லை என்று புலப்படும். எனவே ஹிந்துமதம் ஏகபத்னி விரதத்தையே லட்சியமாக எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் நடைமுறையில் சிற்சில சந்தர்ப்பங்களில் (அசந்தர்ப்பங்கள்?) பலதாரமணம் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. அதாவது சந்தான விருத்திக்காக, புத்ரசந்தானத்துக்காக புருஷன் வேறு மனைவியை விவாகம் செய்து கொள்ள ஹிந்து விவாக விதிகள் அனுமதி யளிக்கின்றன. இவ்விதியும் ஆண்மக்களின் நன்மையை உத்தேசித்து ஏற்பட்டதல்ல வென்பதை நாம் ஒப்புக்கொண்டு தான் ஆகவேண்டும். குடும்ப விர்த்தி யென்ற பொது நோக்குக்காகவே இந்த அனுமதி, அதுவும் முதல்மனைவியின் சம்மதத்தின் பேரிலேயே சுமார் 10 முதல் 15 ஆண்டு இல்லற வாழ்க்கைக்குப் பின்னரும் புத்திர சம்பத்து உண்டாகாவிட்டால், அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அனுமதி ஒரு சில ஆண்மக்களால் தங்கள் சுய இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் ஒரே நோக்கத்துக்காக துஷ்பிரயோகம் செய்யப் பட்டிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. மேலும் அற்ப சொற்ப காரணங்களுக்காகவும் ஒரு சில புருஷர்கள் முதல் மனைவி யிருக்கும்போதே வேறு ஒருவளை மணம் செய்து கொண்டிருக்கிறார்களென்பதும் உண்மையே. இம்மாதிரிச் செய்வது வன்மையாகக் கண்டித்துத் தடை செய்ய வேண்டிய விஷயமே.

ஆனால் நம் சமூகத்திடை இன்று இருந்துவரும் ஊழல்கள் ஒரு சில ஆண்டுகளுக்கு முன் புகுந்தவைகள் அல்லவென்பதையும், அவைகள் பல நூற்றாண்டுகளாக நம் மிடை இருந்து வந்திருக்கின்றன வென்பதையும் அவற்றை போக்க முரட்டு வழிகளைக் கையாளுவது அவ்வளவு நல்லதல்ல வென்பதையும் நாம் மறந்து விடக்கூடாதென்று நான் எச்சரிக்கை செய்கிறேன். ஸ்ரீமதி ராதாபாய் சமூகத்தின் மிகச் சிறுபான்மையோரால் (Microscopic minority) கையாளப்பட்டு வரும் ஒரு விஷயத்தை பிரமாதமாக நினைத்து அதை ஒழிக்க ஒரு அகில இந்திய சட்டம் வேண்டுமென்று நினைத்துவிட்டாரென்றே நினைக்கிறேன். ஹிந்து சமூகத்தின் ஜனத்தொகையுடன் பலதாரமணம் செய்துகொண்டிருக்கும், அல்லது செய்து கொள்ளப்போகிறவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் கடலுக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமிருக்கும். லட்சத்தில் ஒருவர் செய்யும் ஒரு காரியத்தை சட்டம் மூலம் தடைசெய்வது அவ்வளவு பொறுத்தமான வழியென்று நினைக்க முடியாது. அதிலும் சமூக சீர்திருத்தங்கள் கூடியவரையில் சட்டத்தின் வற்புறுத்தலின்றியே ஏற்படவேண்டும். அவ்வித சீர்திருத்தங்களே உண்மையில் நிரந்தரவெற்றியை அளிக்கும். இதற்கு அத்தாட்சியாக சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நான் உதாரணமாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமையளிக்க வேண்டுமென்று காங்கிரஸ் மஹாசபை வெகுகாலமாக பிரசாரம் செய்து வந்திருக்கிறது. அதற்காக பல





காங்கிரஸ் வாதிகள் உண்ணாவிரதங்கள்கூட அனுஷ்டித்தார்கள். தேசமெங்கும் அதற்கு பொதுஜன ஆதரவு இருக்கின்றது என்று மஹாத்மா காந்தியடிகள் முதல் பலரும் குருவயூர் சத்யாகிரஹம், பூனா ஒப்பந்த சமயம், கேலப்பன் உண்ணாவிரத காலங்களில் பறையறைந்தனர். பூனா ஒப்பந்தத்துக்குப்பின் மத்திய சட்ட சபையில் "ஹரிஜன ஆலயப்பிரவேச அனுமதி மசோதா" ஒன்று நமது பிரதம மந்திரி ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் மதிவன்மையை அடிப்படையாகக் கொண்டு திரு. எம். ஸி. ராஜாவை ஆயுதமாக அடைந்து பிரேரிக்கப்பட்டுப் பின் நழுவவிடப்பட்டது. அதே பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரியார் சென்னை சட்ட சபையில் "ஹரிஜன ஆலயப்பிரவேச அனுமதி மசோதாவை" எதிர்த்து, "இப்பொழுது அவ்வளவு அவசரமில்லை" என்று கூறிவிட்டார். பல சமஸ்தானங்களில் ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச அனுமதி யளிக்கப்பட்டிருக்கையிலும், பொதுஜன ஆதரவு பூரணமாயிருப்பதாகக் கூறப்படும் ஒரு சமூக விஷயத்தில் சட்டத்தைப் புகுத்த மதியூகி மந்திரியாரே தயங்கும்போது அவ்வளவுதூரம் பொதுஜன ஆதரவு தேடப்படாததும், பிரசாரத்தின் மூலம் தடைசெய்ய முயற்சிக்கப் படாததுமான இந்தப் பழங்காலத்து ஊழலை திடீரென்று சட்ட பூர்வமாய் தடைசெய்ய முற்பட்டது சரியான வழியல்லவென்று நான் நினைக்கிறேன். ஸ்ரீமதி ராதாபாய் சென்னையிலும் பிரபல சட்ட நிபுணர்களைக் கலந்ததில் அவர்களும் அவ்வளவு ஆதரவளிப்பதாகத் தெரியவில்லை. பம்பாயிலும் பல பிரபலஸ்தர்களையும், சட்ட நிபுணர்களையும், அவர் பேட்டி கண்டபோதும் அவர்களும் ஆதரவு கொடுக்கவில்லையென்று தெரிகிறது. பலர் எதிர்க்கின்றனர். காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் தலைவர் இம் மசோதாவை கட்சியின் சார்பாக ஆதரிக்க முன்வராமல் மழுப்பிவிட்டாரென்றே சொல்ல வேண்டும். காங்கிரஸின் சார்பாக இன்று ஆங்காங்கு சட்ட சபைகளில் வீற்றிருக்கும் ஸ்திரீ பிரதிநிதிகளும் காங்கிரஸ் கட்சி இம் மசோதாவை கட்சி விஷயமாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று வற்புறுத்த முன்வந்ததாகத் தெரியவில்லை. இதனின்றும் நம் ஸ்திரீ சட்டசபை பிரதிநிதிகளே இவ்விஷயம் அவ்வளவு அவசரமானதும் அவசியமானதுமான பிரச்சினை அல்லவென்று கருதுகிறார்களென்றே உணரவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் பலதாரமணத்தை சட்ட பூர்வமாக தடைசெய்ய வேண்டியது அவ்வளவு அவசரமான விஷயமென்றோ அல்லது அத்தியாவசியமான காரியமென்றோ சொல்லமுடியாது. அதிலும் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் இரண்டாவது உட்பிரிவின் ஷரத்தான, இச் சட்டம் 1939-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரவேண்டுமென்பதை எவ்வளவு தீவிர சீர்திருத்தவாதியும் ஒப்புக்கொள்வது இயலாது. சமூகத்தில் பலதாரமணத்தை அடியோடு வெறுக்கும்படியான மனப்பான்மை இன்னும் உண்டாகவில்லையென்பதை நாம் அங்கீகரிக்கத்தான் வேண்டும்.

தவிரவும் இம்மசோதாவில் பல குறைபாடுகள் உள்ளனவென்பதை மசோதா

வின் கர்த்தாவே ஒப்புக்கொண்டிருக்கிறார். அது மட்டுமன்று. இதை ஆதரிக்கும் பல சங்கங்களும், பிரபலஸ்தர்களும்கூட இதிலுள்ள சில பிரிவுகளுக்கு ஆட்சேபனைகள் கிளப்பியுள்ளார்கள். இந்த மசோதா இதற்கு முன்னரே பலதாரமணம் செய்து கொண்டவர்களை எவ்வழியில் பாதிக்கும் என்பது தெளிவாகவில்லை. இதன் மூன்றாவது பிரிவில் ஒரு மனைவியோ கணவனோ தங்கள் கணவன் அல்லது மனைவியின் ஆயுள்காலத்தில் ஏழாவது பிரிவிற்குறிப்பிட்டபடிக்கன்றி மறுவிவாஹம் செய்து கொள்ள அனுமதிக்கக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அதாவது இந்தப் பிரிவில் ஆண்பெண் என்ற இருபாலாரும் சட்டத்தின்முன் ஒன்றாகவே கருதப்படுவதாக மசோதாகர்த்தா பொதுமக்களை நம்பும்படி செய்ய முயற்சிசெய்கிறார். ஆனால் ஏழாவது பிரிவைப்படித்த உடனே ஸ்ரீமதி ராதாபாய் மசோதாவில் ஆண் பெண் வித்தியாசம் பாராட்டாமலிருப்பது போல மசோதாவை வரைய (Drafting) முயற்சிசெய்திருப்பது ஆடவர்களின் எதிர்ப்புக்கு வாய்ப்பூட்டு இடவே என்பது புலனாகும். ஏழாவது பிரிவு "சட்டப்படியோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வழக்கப்படியோ ஒரு புருஷனிருக்கும்போதே வேறு புருஷனை மணம் புரிய தற்சமயம் பாத்தியதையுள்ள எந்த ஹிந்து மனைவியின் உரிமையையும் இச்சட்டம் எவ்விதத்திலும் பாதிக்காது" (Nothing in this Act shall be deemed to restrict the right of a Hindu wife to marry another husband, if by law or valid custom she is entitled to do so) என்றிருப்பது ஹிந்து மனைவியருக்கு மசோதாவின் லட்சியமாகிய பலதார மணத்தடைக்கே மாறுபாடாக பலதார மண உரிமை வழங்குவதாகக் காணப்படுகிறது. மேலும் மூன்றாவது பிரிவின்முற்பகுதிக்கும் ஏழாவது பிரிவுக்கும் முன்னுக்குப்பின் முரண்பாடுகள் உள்ளனவென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகின்றது. எனவே மசோதா தெளிவாக இல்லை. அதன் வாக்கிய அமைப்புகள் சரிவர அமையவில்லை. "The bill is not properly drafted and it contains contradictions."

தவிரவும் இம்மசோதா பலதார மணத்தை அடியோடு தடைசெய்வதாயும் காணோம். இதன் நாலாவது பிரிவில் கூறிய நிபந்தனைகளின்பேரில் பலதார மணம் அனுமதிக்கப்பட்டால் பலதாரமணமும், பலபுருஷ விவாஹங்களும் அதிகரிக்கூடும் (Not only will polygamy in a restricted form continue but also there may come into existence another more serious evil such as bigomy or polyandry) என்று இந்திய மாதர் சங்கத்தாரே அபிப்பிராயப்படுகின்றனர்.

இம்மசோதாவின் மூன்றாவது பிரிவின் 2வது உட்பிரிவு, இச்சட்டத்துக்குட்பட்டு இராமல் மீறி முதன் மனைவி இருக்கும் போதே வேறு மனைவியை மணம் செய்து கொள்ளுபவர் இந்தியன் பீனல் கோட் 494 அல்லது 495 வது பிரிவுப்படி குற்றம் செய்தவர்களாகக் கருதப்பட்டு அதற்குரிய தண்டனைக்கும் உள்ளாக்கப்படவேண்டுமென்று கூறுகிறது. இது ரொம்பவும் அதிகமென்று நான் சொல்லவேண்டியதில்லை. சமூக ஊழல்களை இவ்வளவு கடூரமான முறையில் ஒழிக்க முயற்சிப்பது





சிலருடைய மனத்தாங்கலை அனாவசியமாக எழுப்புவதாகும். மேலும் அந்த மாதிரி நடக்கும் விவாகத்தையும் சந்தர்ப்பா சந்தர்ப்பங்களையும் கவனிக்காது, செல்லுபடி யாக்காமல் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதும் ஏற்கக்கூடியதல்ல.

இம்மசோதாவின் 4வது பிரிவும் அதன் உட்பிரிவுகளும், எந்த எந்த சமயங்களில் மனைவியோ புருஷனோ உயிருடனிருக்கும் போது மறுமணம் செய்து கொள்ள ஒரு ஆசாமி கோர்ட்டுக்கு மனு செய்து கொள்ளலாம் என்பதை விவரிக்கின்றன. முதலாவது நம் ஹிந்து வனிதையரிடம் உள்ள பதி பக்தி மிகவும் வேரூன்றி யுள்ளது என்பதையும் அவர்களின் ரத்தத்தில் பதி விச்வாசம் பரம்பரையாக ஊறிப்போய்க்கிடக்கின்றது என்பதையும் கட்டின கணவனை விட்டு விலகி வாழவோ அன்றி அவனிருக்கும் போதே வேறு ஒருவனை மணந்து இன்புறவோ ஹிந்து மாதர் சிரோன்மணிகளும், ஸ்திரீரத்னங்களும் லகுவில் துணிந்து முன்வரமாட்டார்களென்பதையும் மசோதா கர்த்தா உணராமல், இதில் முதல் நிபந்தனையை புகுத்தியிருக்கிறார். சேர்ந்தாப்போல் புருஷன் அல்லது மனைவி ஐந்து வருஷங்களுக்கு தொத்து நோய் அல்லது தீராத பிணியால் பீடிக்கப்பட்டால் ஒருவருக்கு மறு விவாஹம் செய்ய மனுப்போடும் உரிமையுண்டு என்ற பிரிவு ஒப்புக்கொள்ளத்தக்க தல்ல. ஒரு வியாதி தீராததென்று நிச்சயமாக எந்த வைத்தியனும் கூறமுடியாது. அதிலும் ஐந்து வருஷ சிகிச்சைக்குள்ளாகவே அது அடியோடு தீராத நோய் என்று கூறி முடிவு செய்து கொள்ளலாம் என்று நினைப்பது மிகவும் விபரீதத்துக்குள்ளாகும். இந் நிபந்தனைப்படி ஒரு ஸ்திரீயோ புருஷனோ கோர்ட்டுக்கு மனுப்போட்டு இன்னொரு விவாஹம் செய்து கொள்ள உத்தரவு வாங்கி விவாஹமும் செய்து கொண்டதாக வைத்துக்கொள்வோம். அம்மாதிரி விவாகம் நடந்த பின் தீராதவியாதி என்று கூறப்பட்ட பிணி தீர்ந்து விட்டால் அப்புருஷனோ மனைவியோ என்ன பரிகாரத்துக்கு ஆளாவது? இரண்டாவது செய்து கொண்ட மணம் தள்ளுபடிசெய்யப்படுமா? (Will the second marriage be cancelled?) இதுமாதிரியான விசித்திர சம்பவங்கள் நடைபெறும். சேர்ந்தாப்போல் ஐந்து வருஷம், யாராவது ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருந்தாலும் மறுவிவாக உரிமை கோரலாம் என்ற உட்பிரிவும் அவ்வளவு அனுபவ சாத்தியமானதல்ல. சேர்ந்தாப்போல் ஐந்து வருஷம் பிரிந்திராமல் நான்கு வருஷம் பிரிந்த வாழ்க்கை, ஒரு மாத சேர்ந்த வாழ்க்கையின்பின் நான்கு வருஷம் பிரிந்து வாழ்வது இதுபோன்ற கேஸ்களில் இப் பிரிவு என்ன பயன்படும்? நாலாவது பிரிவின் 'ப்ரொவிஸோ' (Proviso) க்களும் ஸ்திரீகளினிடம் பாரபட்சம் காட்டுவதாகவே யிருக்கின்றது. மனுப்போடுபவர் புருஷராயிருந்தால் ஸ்திரீக்கு ஸ்திரீதன சொத்து முதலியவற்றைக் கொடுத்துவிடவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. புருஷன் அவற்றை (ரொக்கமாகவும், நகைகள் ரூபமாகவும் கொடுக்கப்பட்ட வற்றை) குடும்ப சம்ரட்சணைக்காக பொதுச் செலவு செய்திருந்தால் அவன் கதி என்ன? கணவன் ஏழையாயிருந்து மனைவி பணக்காரியாக இருந்து அவள் மறுவிவாக மனுபோட்டால் அவள் சொத்தில் புருஷன் பங்கு பெறவேண்டுமென்ற

நிபந்தனை யில்லையே. ஆண்டவனால் தீராத நோய் அளிக்கப்பட்டு மேலும் கட்டின மனைவியும் கைவிட்டுத் தெருவில் திரியும் நிலைமையை ஒரு ஏழை கணவன் அடையவிடுவது சமூக சீர்திருத்தம் என்று யார்தான் கூறுவர்?

இன்னும் இதுபோல் மசோதாவில் பல குறைபாடுகளும், முரண்பாடுகளும் உள்ளதென்பதை நான் சகல சீர்திருத்தவாதிகளுக்கும் எடுத்துக்காட்டி, இல்லறம் நல்லறமாக நடைபெறுவதற்கு ஆண் பெண் இருபாலாரிடையும் பரஸ்பரம் அன்பும் ஒற்றுமையும் வளரும்படி செய்யக்கூடிய திருத்தங்களைப் படிபடியாகச் செய்யும்படி யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீமதி ராதாபாயின் ஏகபத்னி விரதலட்சியத்தை மனப்பூர்வமாய் நான் ஆதரிப்பதுடன் புருஷர்களும் சட்டத்தின் வற்புறுத்தலின்றியே அதைக்கடைப்பிடிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டங்கள் போதிய பொதுஜன ஆதரவின்றேல் வெறும் ஏட்டுச்சுரைக்காயாகத்தானிருக்குமென்பதை சீர்திருத்தவாதிகள் மறக்கக்கூடாது.

## இன்பமே எந்நாளும்!

நாமார்க்குங் குடியல்லோம், நமனை அஞ்சோம்,
நரகத்திலிடர்படோம், நடலையில்லோம்,
ஏமாப்போம், பிணியறியோம், பணிவோமல்லோம்,
இன்பமே யெந்நாளும் துன்பமில்லை
தாயார்க்கும் குடியல்லா சங்கர
நற்சங்கவெண் குழை யோர்காதிற்
கோமார்க்கே நாமென்றும் மீளா
ஆளாய்க் கொய்மலர் சேவடி இணையே குறுகினோமே.

மாசில் வீணையும், மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை இணையடி நீழலே.

—அஞ்சா நெஞ்சுபடைத்த அப்பர்ஸ்வாமிகள்.



# ஹிந்து மதமும், பலதார மணமும்

டாக்டர் ஏ. எஸ். அல்டேகர்

இந்தியா சட்ட சபையின் முதலாவது ஸ்திரீ அங்கத்தினராகிய ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் ஹிந்துக்களிடை பலதார மணத்தைத் தடை செய்வதற்காக ஒரு மசோதாவை சட்ட சபையில் கொண்டுவந்திருக்கிறார். இதைப்போன்ற மசோதா ஒன்றை இராஜாங்க சபையில் (Council of State) கனம் சேத்கோவிந்தலால் எம். மோதிலால் அவர்கள் பிரேரிக்க முன் வந்துள்ளார். பிரேரிக்கப்பட்ட மசோதாவுக்கு வைதீகர்களிடமிருந்து தீவிரமான எதிர்ப்பு இருக்குமென்பதில் சந்தேகமில்லை. எனவே ஹிந்து மதமும் நாகரீகமும் பலதாரமண விஷயத்தில் எந்த விதமான மனப்பான்மையை யுடைத்தாயிருக்கிறதென்ற விஷயத்தை ஆத்திர அவசரமின்றியும், பாரபட்சமின்றியும் தீர ஆராய்வது மிகவும் விளக்கத் தக்கதாக இருக்கும். பரிசிலனை செய்வதால் விஷயத்தை யாவரும் நன்கு உணர்ந்து முடிவுக்குவர இயலும்.

ஹிந்து மதம் ஆதிகாலந் தொட்டு பலதார மணத்துக்கு அனுமதியளித்து வந்ததென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அது வேதகாலத்திலும் அனுஷ்டானத்திலிருந்து வந்தது. ருக் வேதத்தில் ஒரு இடத்தில் (1,105,8) பகைவர்களால் பல வழிகளிலும் தாக்கப்படும் ஒருவனை பொருமையும், ஆத்திரமும் கொண்ட பல மனைவிகளைக்கொண்ட ஒரு புருஷனுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. சரித்திரத்திலும், புராணங்களிலும் குறிக்கப்பட்டுள்ள அநேக அரசர்கள் பல மனைவிகளுடையவர்களாகவே சொல்லப்படுகிறது. சாதாரண காரணங்களுக்காகக் கூட மறுமணம் புருஷர்கள் செய்து கொள்ளலாமென்று ஸ்மிருதிகளும் தெளிவாகக் கூறுகின்றன. எனவே ஸ்ருதி, ஸ்மிருதிகளால் ஆதிகாலந்தொட்டு அனுமதிக்கப்பட்ட ஒரு உரிமையை பரிக்கவே தற்சமயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள மசோதா கொண்டுவரப் பட்டுள்ளது. ஹிந்து பெரியோர்கள் இந்த உரிமையை புருஷர்களுக்கு மனமுவந்து கொடுக்க முன்வரவில்லை. இந்தச் சலுகை காட்டப்பட்டதற்கு பலவித விசித்திரமான சந்தர்ப்பங்களிருந்தன. ஒருவருடைய ஆத்மார்த்த விமோசனத்துக்கு புத்திரன் அவசியமென்று சமூகம் நம்பியது. ("புத்" என்ற நரகத்தை விட்டு விடுவிக்க புத்திரப் பேரால்தான் முடியுமாம்.)

தற்காலம் பிள்ளையில்லாவிட்டால் 'தத்து' எடுத்துக்கொள்வது சர்வ சாதாரணமாக இருக்கிறது; ஆனால் ஆதிகாலத்தில் அப்படி ஸ்வீகரிக்கப்பட்ட பிள்ளையை பொது ஜனங்கள் அவ்வளவு அன்புடனும் ஆதரவுடனும் ஏற்றுக்கொள்வது கிடையாது. ஸ்மிருதி கர்த்தாக்களால் ஸ்வீ

காரம் செய்யப்பட்ட புத்திரன் ஆத்மார்த்தீக விஷயத்தில் சற்றுக் குறைவாகவே கருதப்பட்டான். அவன் மிகுந்த தாழ்வானவன் என்று ஸ்மிருதி எழுதினோர் கருதினர். அவர்களில் பலர் அவன் தன் தத்து தந்தையின் சொத்துக்குக்கூட வாரீசாக முடியாது என்று கூறியிருக்கின்றனர். இப்பொழுது எத்தனையோ ஹிந்து தந்தையர்கள் தங்கள் புத்திரர்களை பணக்காரர்களுக்கு 'தத்தாக'க் கொடுக்கத் தயாராயிருக்கின்றனர். ஆனால் மனுகாலத்தில் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பெற்றோர்கள் மிகுந்த தூண்டுதலுக்கும் வேண்டுதலுக்கப்புறம்தான் தங்கள் குழந்தைகளைப் பிறருக்கு ஸ்வீகாரம்செய்ய முன்வந்தனர். தத்து புத்திரன் சொந்த புத்திரனுக்கு எப்பொழுதும் எவ்வகையிலும் ஈடாக மாட்டான் என்று ருக்வேதம் தெரிவிக்கிறது.

மோட்ச பதவி யடைவதற்கு புத்திரன் அத்தியாவசியமென்றும், தத்து புத்திரன் சொந்த புத்திரனுக்குச் சமானமாக மாட்டானென்றும் பரிபூரண நம்பிக்கை சமூகத்தில் இருந்து வந்த காலத்தில் மனைவி ஆண் சந்ததியளிக்காவிட்டால் புருஷன் அதைப்பெறும்பொருட்டு வேறு மனைவியை மணந்துகொள்ள அனுமதிப்பது மிகவும் நியாயமானதும் அவசியமானதுமாயிருந்தது. மனைவி கடூரமான வார்த்தைகள் பகன்றால்கூட வேறு மனைவியை மணந்துகொள்ள சில ஸ்மிருதிகள் அனுமதியளிக்கின்றன. ஆனால் இவைகள் ஒரு சிலரின் அபிப்பிராயத்தையே காட்டுகின்றன. பெரும்பான்மையான ஸ்மிருதிகள் ஆண் சந்ததியில்லாது போனால்தான் வேறு மணம் செய்துகொள்ள அனுமதியளிக்கின்றன. மனைவி மலடு என்று அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிட முடியாது. குறைந்த பக்ஷம் பத்து வருஷங்களாவது ஆனால்தான் மலட்டுத்தன்மை ஸ்தாபிக்கப்படும். புத்திரிகள் மட்டும் பிறந்தால் புருஷன் பன்னிரண்டு வருஷங்கள் காத்திருக்கவேண்டும். குழந்தைகள் பிறந்து சீக்கிரம் இறந்துபோனால் இன்னும் மூன்று வருஷங்கள் அதிகமாகக் கணவன் காத்திருக்கவேண்டும். இவ்வளவு நீண்ட காலம் பொறுமையுடன் காத்திருந்த பின்னரும் கணவன் இரண்டாவது மணம் செய்துகொள்வதற்கு தன் முதல் மனைவியின் சம்மதத்தையும் அடையவேண்டும்.

மேலே கூறப்பட்டகாரணங்களைத் தவிர இதர விஷயங்களை யுத்தேசித்து இரண்டாவது மணம் செய்துகொள்ள முற்படுபவர்களை ஹிந்து தர்மசாஸ்திரப் பெரியோர்கள் கடுமையாக கண்டனம் செய்து வந்தார்கள். அப்பேர்பட்டவர்கள் நீதி மன்றங்களில் சாட்சிகளாக தோன்றுவதற்குக்கூட அருகதையற்றவர்கள் என்று நாரதர் கூறியுள்ளார். ஒரு மனைவியிருக்க மறுமனைவியை மணப்பவன் முதல்விவாக சமயத்தில் தான் பலர் முன் தெய்வ சாட்சியாகச் செய்த பிரமாணங்களை மீறி துராக்கிருதச் செய்கையைச் செய்தவனாவான் என்று மஹாபாரதம் சொல்லுகின்றது. அப்படி அவன் செய்வதாலுண்டாகும் மகாபாதகச் செயலுக்கு, பாபத்துக்கு விமோசனமே இல்லையென்று மஹாபாரதம் பறை அறைகின்றது.

நாளாவட்டத்தில் மிகுந்தயக்கத்துடன் கொடுக்கப்பட்ட இந்தச்சலுகை துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. அக்காலத்தில் இது ஏற்படாமலிருக்க ஹேதுவில்லை.





ஏனென்றால் கல்வியின்மையால் ஸ்திரீகளின் அந்தஸ்து வரவர சமூகத்தில் தாழ்ந்து கொண்டே வந்தது. ஆகவே தங்களது நியாயமான உரிமைகளையும், பாத்தியதைகளையும் மெள்ள மெள்ள கபளீகரம் செய்து வந்த ஆண்மக்களின் ஆணவத்தை எதிர்த்துப்போராட மாதர்கள் சக்தியற்றவராயினர். பால்யவிவாகமும் அனுஷ்டானத்துக்கு வந்துவிட்டது. தாங்கள் பால்யர்களாக இருந்தபொழுது தங்கள் பெற்றோர்களால் தங்கள் மீது சுமத்தப்பட்ட மனைவிகளை அங்கீகரிக்க மாட்டோமென்று பலர் வயது வந்தவுடன் கூற ஆரம்பித்தனர். அவர்களுடன் கட்டுப்பட்டு வாழ இசையாமல் பலர் புதுமனைவியரை மணந்தனர். முதல் மனைவியை புறக்கணித்தனர். சட்டகர்த்தாக்கள் யாவரும் புருஷர்களேயல்லவா? எனவே நூற்றுக்கணக்கான இளமங்கையர்களின் வாழ்க்கையை இன்னல் மிக்கதாகச் செய்த இந்த பலதாரமணக் கொடுமையை அந்த ஆண் சட்ட நிபுணர்கள் முளையிலேயே கிள்ளி எறிந்து ஒழிக்க சிறிதும் பிரயாசை எடுத்துக்கொள்ளாதது ஆச்சரியமன்று. (ஆண்மக்களின் சுயநலத்தின் பலனில் இது ஒன்று.) சமூகம், அதிலும் புருஷர்கள் சாஸ்திரம் பலதார மணத்தை அனுமதிக்கிறது என்பதை மட்டும் எடுத்துக்கொண்டார்களே தவிர அந்த அனுமதியை ஒட்டியகடுமையான நிபந்தனை விதிகளை அடியோடு மறந்துபோயினர். சென்ற பல நூற்றாண்டுகளாக சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் பெரும் கஷ்டங்களுக்கு இதுதான் காரணம்.

இந்தக் காலத்தில் பலதாரமண உரிமை சட்ட நிரூபண சபையால் பறிக்க முடியாத அவ்வளவு முக்கியமான மதசம்பந்தமான பாத்தியதை என்று சொல்லமுடியுமா? நாம் நினைக்கவில்லை. மோக்ஷம் கிட்டுவதற்கு புத்திரன் அத்தியாவசியம் என்று கருதப்பட்ட அந்தக்காலத்தில் இது அனுமதிக்கப்பட்டது. தற்சமயம் வேண்டுமென்றே முதல்மனைவியைத் தள்ளி மறுமனைவியைக் கொள்ளுபவர்களில் நூற்றுக்கு ஒருவர்கூட இந்தக் கொள்கையில் உண்மையான நம்பிக்கை யுடையவர்களல்ல. அவர்கள் வேறு மணம் செய்து கொள்வதற்கு முக்கிய காரணம் தங்கள் சுயநலமே. உண்மையிலேயே தங்கள் ஆத்மசாந்திக்கும் விமோசனத்துக்கும் புத்திரன் மிகவும் அவசியம் என்று கருதும் ஒரு சிலரும் ஸ்வீகாரம் ஏன் தாராளமாகச் செய்துகொண்டு தங்கள் லட்சியத்தை அடைந்து கொள்ளக் கூடாது? இந்தக் காலத்தில் முன்பிருந்தது போல் தத்துபுத்திரர்கள்மேல் ஒருவிதமான வெறுப்பு கிடையாது. ஒரு சந்ததியற்ற பணக்காரர் தனக்கு தத்துபுத்திரன் தேவையென்று மட்டும் பத்திரிகையில் விளம்பரம் செய்யட்டும்; மறுதபாலிலேயே ஆயிரக்கணக்கான மனுக்கள் அவரின் மேஜையின் மீது வந்து குவிவதைக்காணலாம்.

ஆதிகாலத்திலிருந்துவந்த மதசம்பிரதாயங்களினால் வேண்டாவெறுப்பாக மட்டும் பலதாரமணம் அனுமதிக்கப்பட்டு வந்தது. பரந்த நோக்கங்கொண்ட அறிவாளிகள், குழந்தைகளைப் பெறும் ஒரு புனிதவதியிருக்கும்போது மறுமனைவியை மணம் செய்து கொள்வதைப்பற்றி நினைக்கவே கூடாது என்றே முடிவான அபிப்பிராயம் கொண்டிருந்தார்கள்.

இந்த காலத்திலோ தத்து புத்திரன் மத சம்பந்தத்தில் சொந்த புத்திரனுக்கு சமானமாகவே கருதப்படுகிறான்; எனவே தன்

மனைவி மலடாக இருந்தபோதிலும் ஒரு ஹிந்து புருஷன் வேறு கல்யாணம் செய்து கொள்ள முற்படுவதற்கு இப்பொழுது ஒருவித நியாயமுமில்லை. ஹிந்துமதம் ஏக பத்னி விரதத்தையே உயர்ந்த லட்சியமாக எடுத்துக்காட்டி யிருக்கிறது. 'தம்பதி' என்ற பதமே இதை வெகு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது; இல்லறத்துக்கு உரித்தான இவர்களை மட்டுமே அது குறிக்கின்றது; எனவே மூன்றாமவர் அதில் பங்கெடுத்துக் கொள்ள இடமே இல்லையே! எல்லாகாலத்திலும் ஒவ்வொரு ஹிந்துவுக்கும் பலதாரமண உரிமை பிறப்புரிமை என்ற கொள்கையை ஆதரித்து நிரூபிக்க மத சம்பந்தமான காரணம் கொண்டு வர முடியாது. நம்மதத்தின் உண்மையான நோக்கத்துக்கு இம்முறை விரோதமானதாகவே இருந்து வந்திருக்கிறது. ஒரு சில அபூர்வமான சந்தர்ப்பங்களுக்கு இந்த வழக்கம் கடைசிப் பரிகாரமாகவே அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆதியில் மிகுந்த கட்டுப்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அனுமதிக்கப்பட்ட பலதாரமண சலுகை தற்காலம் எவ்வளவு அக்கிரமமாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டு ஆண்மக்களின் சுயநலத்தை அபிவிருத்தி செய்ய அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்பதை மனுக்களும், யஞ்ஞவல்கியர் களும் பூவுலகுக்கு வந்து பார்த்தார்களேயானால், அவர்கள் உடனே சமீபத்தில் அகப்படும் முதலாவது ஆகாய விமானத்திலேறி சமீபத்திலுள்ள ஆகாசவாணி நிலையத்துக்குச் (Broadcasting Station) சென்று தங்களால் அனுமதிக்கப் பட்ட பலதாரமண சலுகை தற்கால ஹிந்துக்களுக்கு கிடையவே கிடையாது என்று முழக்கம் செய்து அறிவித்து விடுவார்கள்! அவ்வளவு அக்கிரமமாக அவ்வுரிமை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

மத சம்பந்தமாகக்கூட பலதாரமணம் ஒழிய வேண்டியது அவசியமாக ஆய்விட்டது. ஹிந்துக்களின் விவாஹங்கள் ஹிந்து தர்மப்பிரகாரமும், பரம்பரையாக வழங்கப்பட்டு வரும் தூய மந்திரோச்சாரணத்தோடும் நடைபெற வேண்டுமென்று நாம் எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் படித்த சிலர்கள் தங்கள் பெண்களுக்கு சிவில் விவாகச் சட்டத்தின் படி (Civil Marriages Act) விவாஹம் செய்து விடுகிறார்கள். இவ்வாறு அவர்கள் செய்வதின் நோக்கம் இதன்படி விவாஹம் செய்துகொண்ட புருஷர்கள் முதல் மனைவி யிருக்கும் போது வேறு கல்யாணம் செய்து கொள்ள முடியாது. தங்கள் பெண்களின் நன்மையை யுத்தேசித்தே சில பெற்றோர்கள் தங்கள் பெண்களுக்கு இவ்வித முறையில் விவாஹத்தை நடத்திவிடுகிறார்கள். பலதாரமணம் தடுக்கப்படாவிட்டால் சிவில் விவாஹச்சட்டப்படி நடக்கும் விவாகங்கள் வரவர பெருகிக் கொண்டேவரும்; ஹிந்து விவாஹத்தின் தெய்வீகத்தன்மையும் புனிதத்தன்மையும் மறைந்து போக நேரிடும். ஆகையால் மதத்தின் நன்மையை உத்தேசித்துப்பார்த்தாலும் பலதாரமணம் வெகு விரைவில் ஒழிக்கப்படவேண்டு மென்றே தெரிகிறது.

ஹிந்து மதத்தின் ஒற்றுமைக்கும், கட்டுப்பாட்டுக்கும் கூட பிரஸ்தாபிக்கப் பட்ட சட்டம் அவசியமாக இருக்கிறது. ஹிந்து சமூகத்திலிருக்கும் தள்ளி வைக்கப்பட்ட மனைவியர்களின் எண்ணிக்கை கொஞ்ச நஞ்சமல்ல. தங்கள் கணவன்மார் இரண்டாந்தர மனைவிகளுடன் அதி உல்லாச வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்க, இந்த தள்ளிவைக்கப் பட்ட மனைவியர்கள் மனம் நொந்து, உடல் மெலிந்து, ஊண் குறைந்து கட்டாய 'வைதவ்யம்' அனுஷ்டிக்கும்படி வற்புறுத்தப்பட்ட வாழ்க்கையிலுழன்று நிற்கிறார்கள். ஹிந்து மதம் தற்சமயம் விவாகரத்து அனுமதிக்காததால் இந்த அபாக்கியவதிகள் மறுமணமும் செய்து கொள்ள முடியாது. அவர்களின் பெற்றோர்களும் எவ்வளவு காலம் தான் இந்த "வாழா வெட்டிப் பெண்களை" வீட்டில் வைத்துக்காப்பாற்ற முடியும்? இந்த சங்கடமான நிலைமையை விட்டு தப்பிக்கொள்ள பல படித்த ஸ்திரீகள் இதரமதங்களைத் தழுவி இவ்வித சமூக கட்டுகளை அருத்தெரிகிறார்கள். இதன் பயன் என்ன? இதர மதஸ்தர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், நம் புராதன புனித மதம் க்ஷீண திசையும் அடைந்துகொண்டே வருகிறது. ஹிந்து மதத்தினுடையவும், சமூகத்தினுடையவும் உண்மையான நன்மையை உத்தேசிப்பவர்கள் பல்தார மணத்தைத் தடுத்து ஹிந்து சமூகத்தின் எண்ணிக்கையும், பலமும் குன்றாது செய்ய வேண்டியது முக்கியமான கடமையாகும். ஆத்மீக விமோசனத்துக்காக புத்திரன் அவசியமென்று கருதப்பட்டு வந்த ஒரு காலத்தில் ஒருவிதமாக நியாயமானதென்று கருதப்பட்ட இந்த வழக்கத்துக்கு இப்பொழுது யாதொரு அவசியமுமில்லை. இம் முறை மிகவும் தீங்கிழைப்பதாகவே இருக்கின்றது. இது எடுபட வேண்டியதே.

சங்கீதம்

# இல்லறமும், மனத்துறவும்

திரு. ஜே. வெங்கடராம அய்யர்

அடாணா—ரூபகம்.

பல்லவி

பஜனஸேய—ராதா? ராம || பஜ.

அ. பல்லவி

அஜருத்ராதுலகு ஸததம்—ஆத்ம மந்த்ரமைன ராம || பஜ.

சரணங்கள்

(1) கருகு பங்காரு வல்வ—கடினெந்தோ மெரயக
சிருநவ்வுலு கலமோமுன—சிந்திஞ்சி, சிந்திஞ்சி || பஜ.

(2) அருண பிம்பாதரமுன—ஸுரசிர தந்தாவளினி
மெரயுக போல யுகமுனனு—நிரதமுனனு தலசி தலசி || பஜ.

(3) பாருகமானஸ! பவ—ஸாகர முனனுதரியிம்ப
த்யாகராஜு மனவினிவினி—தாரகமகு ராம நாம || பஜ.

## பொருள்

அ. பல்லவி:—அஜருத்ரா துலகு=பிரமன் ருத்ரன் முதலியோருக்கு; ஸததம்=எப்போதும்; ஆத்ம மந்த்ரமைன=ஆத்மார்த்தமான ஜபமந்திரமாகிய; ராம=தாரக நாமமாகிய.

பல்லவி:—ராமபஜன=ராமபஜனையை; ஸேயராதா=செய்யக்கூடாதா?

சரணங்கள்:—(1) கருகு பங்காருவல்வ=சொக்கத் தங்கஜரிகை மின்னும் பீதாம்பரம், கடினி=இடுப்பில்; எந்தோ மெரயக=எவ்வளவோ பிரகாசிக்க; சிருநவ்வுலுகல=புன்சிரிப்புள்ள; மோமுன=முகத்தை; சிந்திஞ்சி சிந்திஞ்சி=நினைத்து நினைத்து (த்யானம் செய்து) பஜனை செய்யலாகாதா?

(2) அருணபிம்ப=பாலசூரியகாந்தி போன்ற (சிவந்த); அதரமுன=உதடுகளிடையில்; ஸுரசிர=மிகவும் ஒளிபொருந்திய; தந்தாவளினி=பல்வரிசைகளால்; மெரயுகபோல யுகமுனனு=விளங்காநின்ற கன்னங்களிரண்டையும்; தலசி தலசி=மனதில் நினைத்து நினைத்து—பஜனை செய்யலாகாதா.



(3) மானஸ=மனமே! பவஸாகர முனனு=பாவக்கடலை; பாருக=நன்றாய்; தரியிம்ப=தாண்ட; த்யாகராஜு=த்யாகராஜனின்; மனவினிவினி=விண்ணப்பத்தைக் கேட்டு; தாரகமகு=தாரகமாகிய அல்லது ரக்ஷையாகிய; ராமநாம பஜனைசெய்வாய்.

### 5. இல்லறமும் மனத்துறவும்.

இவ்விதம் பஜனை புரிந்துகொண்டே யிருந்தால் இல்லறம் எப்படி நடக்கும்? இல்லறத்தில் பக்தி செய்ய முடியுமா? இவ்விரு கேள்விகளுக்கும் பதில் சொல்லுவது போல் புரந்தரவிட்டலரும் த்யாகராஜ ஸ்வாமிகளும் நம்முன் இல்லறத்துறவிகளாய் நிற்கிறார்கள். பாகவதமார்க்கம் இல்லறம்பூண்ட பக்திமார்க்கமே. உலகிலிருந்தும் உலகு உட்செல்லாது மனதைத் திருவடிசேர்த்து நிற்பதே பாகவத லட்சணம். அடியிற்கண்ட கீர்த்தனம் இல்லறத்துறவைப் போதிப்பதுடன் அப்படியிருந்து காட்டிய புரந்தரவிட்டலரின் சரித்திரத்தையும் சொல்லாமல் சொல்லிக்காட்டுகிறது.

ஸாவேரி—ஆதி.

பல்லவி

ஸம்ஸாருலைதே, னேமையா? சிகி—பிஞ்சாவதம்ஸுடு, எதுடனுண்டக || ஸம்.

அ. பல்லவி

ஹிம்ஸாதுலெல்ல ரோஸி—ஹம்ஸாதுலகூடி, ப்ர
சம்ஸஜேயுசுனேப்ரொத்து—கம்ஸாரினி நம்முவாரு || ஸம்.

சரணங்கள்

1. ஞானவைராக்யமுலு—ஹீனமைனட்டிபவ
கானனமுனதிருகு—மானவுடுஸதா
த்யானயோகயுதுடை, நீ—நாமமுபல்குசு
நாநாகர்மபலமு—தானமுஜேயுவாரு || ஸம்.

2. க்ரூரபுயோசனல—தூருஜேஸி, தன
தாரபுத்ருலபரி—சாருலஜேசி
ஸாரரூபுனிபாத—ஸாரஸயுகமுல
ஸாரெஸாரெகுமன—ஸாரபூஜிஞ்சுவாரு || ஸம்.

3. பாகவதுல கூடி—போகமுலெல்லஹரி
கே, காவிம்புசுனு வீணா—கானமுலதோ
ஆகமசருனி ஸ்ரீ—ராகமுன பாடுசு
த்யாகராஜநுதுனி—பாருக நம்மே வாரு || ஸம்.

## பொருள்

பல்லவி :—சிகிபிஞ்ச + அவதம்ஸுடு=மயிற்பீலியை அணியாகப்பூண்ட கண்ணன்; எதுடனுண்டக=எதிரிலேயே யிருக்க; (அப்படிப்பட்ட மஹான்) ஸம்ஸாருலே தேனு=ஸம்ஸாரியானாலும்; ஏமி அய்யா?=என்னய்யா?

அ. பல்லவி :—ஹிம்ஸாதுவ + எல்ல=துன்பங்களை யெல்லாம்; ரோஸி=தள்ளி; ஹம்ஸாதுலகூடி=பரமஹம்ஸர்களைக்கூடி; கம்ஸாரினி=கம்ஸனைவதைத்த கண்ணனை; எப்ரொத்து=எக்காலமும்; ப்ரசம்சசேயுசு=புகழ்ந்துகொண்டு; நம்மினவாரு=அவனையே நம்பியவர்கள்—சம்சாரியாகிலென்ன?

சரணங்கள் :—1. ஞானவைராக்யமுனு=ஞானமும் பற்றின்மையும்; ஹீனமைனட்டி=இல்லாத; பவகானனமுன=சம்சாரக் காட்டில்; திருகு=அலையும்; மானவுடு=மனிதன்; ஸதா=எப்போதும்; த்யானயோகயுதுடை=பகவத்யானபரனாக; நீ நாமமு=உனதுதிருநாமங்களை; பல்குசு=உச்சரித்துக்கொண்டும்; நானாகர்மபலமு=பற்பல கர்மங்களின் பயனை; தானமு சேயுவாரு=உனக்கு அர்ப்பணம் செய்பவர்—ஸம்ஸாரியாகிலென்ன?

2. க்ரூரபுயோசனல=கொடுமையான எண்ணங்களை; தாருஜேஸி=தூரவிலக்கி=தனதாரபுத்ருல=தன் பெண்டு பிள்ளைகளை; பரிசாரகுலஜேஸி=(பகவானுடைய) கைங்கர்ய பரர்களாய்ச்செய்து; ஸாரரூபுனி=அதிகச் சிறப்புவாய்ந்த உருவமுள்ள பகவானுடைய; பாதஸாரஸயுகமுல=பாதகமலங்களை; ஸாரெஸாரெகு=அடிக்கடி இடைவிடாமல், மனஸார=மனமொன்ற; பூஜிஞ்சுவாரு=பூஜிப்பவர்—ஸம்ஸாரியாகிலென்ன?

3. பாகவதுலகூடி=பாகவதர்களைக்கூடி; போகமுனு எல்ல=யாவற்று போகங்களையும்; ஹரிகே காவிம்புசுனு=ஸ்ரீ ஹரிக்கே செய்தும்; வீணாகானமுலதோ=வீணாகானங்களுடன்; ஆகமசருனி=வேதத்தில் சஞ்சரிக்கும்கண்ணனை; ஸ்ரீராகமுன பாடுசு=ஸ்ரீராகம் அல்லது அழகிய ராகத்தில்பாடி; த்யாகராஜநுதுனி=தியாகராஜனால் துதிக்கப்பட்ட கண்ணனை; பாகுக=நன்றாய்; நம்மேவாரு=நம்புவோர்—ஸம்ஸாரியாகிலென்ன?

குசேலர் ஸம்ஸாரிதான். அவரே பாகவதர்களின் லட்சியம். செய்யுந் தொழிற்பயனைக் கருதாது திருவடித்தியானத்திலமர்ந்தவர் எவ்வறமாகிலென்? "மயிற்பீலியணிந்த கண்ணன் எதிரியிலேயே யிருக்க" என்றதனால் புரந்தரவிட்டலரையே குறிக்கும். புரந்தரவிட்டலர் 16-ம் நூற்றாண்டிலிருந்த பக்தர். பரமபாகவதராக இல்லறம் நடத்தியவர். பஜனை காலத்தில் மெய் மறந்து பாடுவார். பிறரையும் மெய் மறக்கச் செய்வார். இவர் ஒரு நாள் பஜனை செய்துகொண்டிருக்கும்போது கண்ணன் தன்னிரு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு விட்டலர் முன் தோன்றினார். புரந்தரர் கண்ணனை அப்படியே தன் முன் நிற்கும்படியாகவும் எங்கும் போகக்கூடாதென்றும் வற்புறுத்திப் பணிந்து துதிக்கிறார். இப்பாட்டு மிக இனிமையாகவுள்ளது. கன்னடபாஷை செய்த புண்ணியமோவென்று நினைக்கத் தக்க பதப்ரயோகங்களும் விஷயங்களு முள்ளன. இதை அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோம்.





"ஏது பம்மாரக இட்ட் துடைக்கிறீர்களோ?"




"ஸ்ரீகிருஷ்ணன் எங்கு சென்றிருப்பான்?"

# ஸ்ரீ காளஹஸ்தி

ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள்

சிவபெருமான் எல்லா தேவர்களுக்கும் தலைவராக இருப்பதுபோல, ஸ்ரீ காளஹஸ்தி நகரமென்றும், தென் கைலாயமென்றும் கூறப்படும் ஸ்ரீகாளஹஸ்தி நகர் புண்ய நகரங்களுக்கெல்லாம் தலைமையானது. இது இருபத்தோரு காத விஸ்தீர்ணம் பெற்றதாகிய பவளமலைக்குக் கிழக்கு, திருவேங்கடத்திற்கு தெற்கு, கடலுக்கு மேற்கு, பிநாகி மலைக்கு வடக்கு என்னும் நாற்பாங்கெல்லை யுடையதாக தெரிகிறது. சரஸ்வதியின் அவதாரமாகிய ஒளவையாரால் வியந்தோதப் பெற்ற விசேஷ ஸ்தலம். செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் இலங்கும் இவ்விசேஷ ஸ்தலம் மானிட சரீரத்துக்குரிய முப்பத்திரண்டு அவயங்களைப் போல முப்பத்திரண்டு சிவஸ்தலங்களை தன்பாலுடையது. மோக்ஷ சாம்ராஜ்யத்துக்கு ஏற்ற இடமாகிய இவ்விசேஷ ஸ்தலத்தில் ஸ்ரீ காளத்தியப்பர் என்னும் பெயரேற்றுச் சிவபிரான் ஞானப் பூங்கோதை என்னும் தேவியாரோடு ஒருக்காலும் நீங்காது பஞ்ச கிருத்தியங்களை நடத்தி அடியவர்களுக்கு இஷ்டார்த்த சித்திகளை அனுக்கிரகித்து அருள் புரிகின்றனர். இதற்கு "வில்வாரணியம்" "கயாரணியம்" "தென்கைலாயம்" என மறு பெயர்களுமுண்டு. இப்புண்ய நகரில் வசிஷ்டர், அகஸ்தியர், நக்கீரர், பிரமதேவர், சிலந்தி, பாம்பு, யானை, வேடன், சிவநேசர் முதலியவர்கள் நற்கதி யடைந்தனர். இங்கு ஊர்வன, நடப்பன, தத்துவன, பறப்பன, நீர் வாழ்வன யாவும் சிவகணங்கள் என புராணம் கூறுகின்றது.

ஒரு நாள் வித்திரசகனென்னும் பார்த்திபன் வேட்டைக்குச் சென்றான். அங்கு ஒரு அரக்கனைக்கொன்றான். இச் செய்தி அவன் சோதரனுக்கு எட்டியது. ஆதலால் அவன் உடனே புறப்பட்டு அரசனுக்கு அடிமையாளாக இருந்து அரசனைக் கொல்லக் காத்துக்கொண்டிருந்தான். ஒரு கால் வசிஷ்டர் அங்கு செல்ல அவருக்கு நரமாமிசத்தை பாகஞ்செய்து படைத்தான். ஆதலால் அவர் வெகுண்டு சபித்தார். அக்காரணத்தால் அவன் உதிரனென்று பெயர் கொண்டவனாய் அரக்கனாய் வனத்தில் அலைந்துகொண்டிருந்தான். கடைசியாக இந்த க்ஷேத்ரத்தில் சாபவிமோசனமடைந்தான். வசிஷ்டருக்கும் விஸ்வாமித்ரருக்கும் பகையிருந்தமையால் விஸ்வாமித்திரர் வசிஷ்டருடைய நூறுபுத்திரர்களை கொல்வித்தார். ஆதலால் வசிஷ்டர் புத்திர சோகமுற்று உயர்ந்த மலைச்சிகரத்திலிருந்து உருண்டார். அப்பொழுது பூமிதேவி அவரை இருகரங்களாற் தாங்கி சிவபெருமானை நோக்கி தவம் செய்து தனது எண்ணத்தை பூர்த்தி செய்துகொள்ளுமாறு சொன்னாள். அவரும் அதற்கு இசைந்து, இக்கயாரண்ய மடைந்து தவம் செய்தார். இத்தவத்திற்கு மெச்சி, சிவபெருமான் ஐந்

தலை யரவ ரூபத்துடன் தோன்றினர். வசிஷ்டர் மிகவும் அஞ்சினர். பின் சிவபெருமான் தன் சுயரூபத்தைக்காட்டி, கடைக்கண்ணால் பார்த்தார். பின் அவர் விரும்பும் வரம் என்ன என்று கேட்க, அவர் இலிங்க மேனியுடன் எந்நாளுமிங்கு இருக்கவேண்டும் என்றும், தனக்கு ஞானோபதேசம் செய்யவேண்டுமென்றும் கேட்டார். சிவன் தக்ஷிணாமூர்த்தியாய் தோன்றி ஒரு மரத்தடியில் அமர்ந்து வசிட்டருக்கு ஞானோபதேசம் செய்தார். உமாதேவியார் சிவபெருமான் பிரிவை எண்ணி வருந்தி கயாரண்யம் வந்தார். அங்கு ஞானப்பூங்கோதை எனப் பெயர் கொண்டார். மற்ற சிவகணங்களும், கஜபதி, துஜபதி முதலியோரும் வந்தனர். அன்று முதல் இதற்கு தென் கைலாயமென்று பெயர் வந்தது.

முன் ஒரு காலத்தில் நீலகண்டர் இமாசலத்திலே மலையரசன் புதல்வியாயுதித்த உமாதேவியாரை மணம் செய்து கொள்ளும் காலத்தில் அகஸ்தியமுனிவரையழைத்து அவரை தெற்கே பொதியமலையில் வாசம் செய்யும்படி சொன்னர். அகஸ்தியரும் அதற்குடன்பட்டு புறப்பட்டுச் சென்றார். வழியில் அநேக சிவஸ்தலங்களில் சிவதரிசனம் செய்துகொண்டு ஸ்ரீகாளஹஸ்திக்கு வந்தார். அங்கிருந்த நாகலிங்கம் முதல் விநாயகர் வரையுள்ள தெய்வங்களை வணங்கி பின் அங்கு ஓர் நதியுமில்லாமை கேள்வியுற்றார். ஆதலால் கயாரண்யத்துக்கு நாலுயோஜனை தூரத்துக்கு அப்பால் சென்று சிவபெருமானை நோக்கி தவஞ் செய்தார். சிவபிரான் நான்முகனை அனுப்பி அவர் கேட்கும் வரங்களை கொடுக்கும்படி சொன்னர். நான்முகரும் சென்று அவர் விரும்புவதுயாது என கேட்க, அவர் நதியெனமொழிந்தார். உடனே கங்கையானவள் ஓர் நதியாய்த் தோன்றினள். அப்பொழுது அவள் பொன்போலிருந்தமையால் பிரமன் அவளுக்கு பொன்முகரி என்று பெயரிட்டார். அந்நதி அகஸ்தியமலையை விட்டிறங்கி, பலதுஷ்ட மிருகங்களை அடித்துக்கொண்டு பல ஸ்தலங்களுக்கருகே சென்று, ஸ்ரீகாளத்தி அக்கினிதிசையில் திரும்பி, ஓங்காரேஸ்வரம் என்னும் ஸ்தலத்தை சமீபித்து சாகரத்தில் சங்கமமாகிறது.

திரேதா யுகத்தில் ஒரு சிலந்தியானது தன் பூர்வ ஜனன வுணர்ச்சியால் பொன்முகரி நதியில் ஸ்நானம் செய்து, நாகலிங்கப் பெருமானை வழிபடக்கருதி, தன் நூலால் ஓர் கோயில் கட்டியது. தினமும் தவறாது தனக்கு திருப்பணி செய்யும் இச்சிலந்தியை பரமசிவன் சோதிக்க வெண்ணினர். ஆதலால் கோயிலை ஒரு விளக்கால் எரிய விட்டார். இதைக்கண்ட சிலந்தி ஆராத்துயர் கொண்டு தீயில் வீழ்ந்து மாளநினைத்து எழுந்தது. அப்பொழுது பிறைசூடிய எம்பெருமான் சிலந்தியின் முன் தோன்றி தடுத்து, "வேண்டிய வரம் யாது" எனக் கேட்டார். அது அவர் பாதத்தின் கீழ் இருக்க விரும்பு வதாய் கூறியது. அவ்வாறே திருவடித் தாமரையின் கீழ் அதனைச் சிவபெருமான் ஒடுக்கிக் கொண்டார்.

கிரேதா யுகத்தில் ஒரு பாம்பு எம்பிரான் சிவபெருமானுக்கு பொன் முகரி நதியினின்று நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்து பின் இரத்தினங்களால் அர்ச்சனை செய்யும். ஓர் யானையும் பொன் முகரியில் ஸ்நானம் செய்து தனது துதிக்கையில் நீர்





கொண்டு வந்து அவருக்கு அபிஷேகம் செய்யும். பின் வில்வம் முதலியவற்றால் இரத்தினங்களை தள்ளிவிட்டு, அர்ச்சனை செய்யும். இவ்வாறு பல நாட்களாயின. ஒரு நாள் பைந்நாகம் தனது விரோதியைப் பார்க்க வேண்டுமென்று சிறு உருவத்துடன் சிவன் தலையில் அமர்ந்திருந்தது. கஜன் (யானை) அங்கிருந்து ஜலத்துடன் வந்து அபிஷேகம் செய்து இரத்தினங்களைத் தள்ளும் சமயத்தில் பாம்பு தன் கொடிய நான்கு விஷப் பற்களால் கொட்டியது. மேலும் பாம்பு யானை வாயில் அகப்பட்டு இரண்டும் மாண்டன. இவற்றின் பக்தியைக் கண்ட உமாமகேஸ்வரன் அவற்றிற்கு முக்தி யளித்தான். ஆகையால் இந்த ஸ்தலத்திக்கு "வில்வாரணியம்" "கஜாரணியம்" எனப் பெயர் வந்தது.

நாகன் என்னும் வேட அரசன் மகனில்லாது மிக வருந்தினன். ஆனால் கூடிய சீக்கிரத்தில் ஈசனருளால் ஓர் ஆண் மகவு பிறந்தது. அதற்குத் திண்ணன் என்று நாமகரணம் செய்தனர். பின் அவனுக்கு காலக் கிரமத்தில் வில் வித்தை, வாள் வித்தை, யாவும் கற்றுக் கொடுத்து உடுப்பூர் என்ற இடத்துக்கு அரசனாக்கினன். திண்ணன் காடு சென்று வேட்டையாடி மாமிசம் கொண்டு வருவான். சிலநாட்கள் சென்றன. ஒரு நாள் தன் வேட்டையில் அகப்பட்டு ஓடிய பன்றியை துரத்திச் சென்றான். அது மலைமீது சென்றது. திண்ணன் அங்கு காளத்தி நாதரைக் கண்டு சிவபக்தனானன். இவனுடைய சிநேகிதர்கள் வீடு திரும்பினார்கள். ஆனால் திண்ணன் திரும்பவில்லை. அவன் வாயினால் பொன் முகரி நதியினின்று நீர் எடுத்துச் சென்று காளத்தி நாதருக்கு அபிஷேகம் செய்வான். பின் அங்குள்ள மரங்களிலிருந்து புஷ்பங்களைப் பறித்து காளத்திநாதர் தலையின் மீது கொட்டுவான். பிறகு மாமிசம் கொண்டு வந்து படைப்பான். இவனுடைய பக்தியைக் கண்டு பரமேஸ்வரர் அகமகிழ்ந்தார். தமது குருக்களுக்கு இவனுடைய பக்தியைக் காட்ட ஆவல் கொண்டார். தமது குருக்களை மறைவில் இருந்து பார்க்குமாறு ஆக்ஞை யிட்டார். திண்ணன் வரும் சமயத்தில் கண்களிலிருந்து இரத்தம் பெருக விடுத்தார். திண்ணன் அதைக் கண்டு தன் கண்ணைப் பிடுங்கி வைத்தான். இன்னும் பரிசோதிக்க எண்ணி மற்றொரு கண்ணினின்றும் இரத்தம் பெருகியோடும்படி செய்தார். திண்ணன் அக்கண்ணை காலால் அழுத்தி அடையாளம் வைத்துக்கொண்டு தனது மற்றொரு கண்ணை பிடுங்கினான். அப்பொழுது எம்பெருமான் சிவபிரான் அவன் பக்திக்கு மிகவும் மெச்சி, அவனைத் தடுத்து மோக்ஷ கதி கொடுத்த இடமும் இதுதான்.

நக்கீரர் என்னும் புலவர் மதுரையில் சிவபிரானுடைய சாபத்தை அடைந்து கைலாச தரிசனம் செய்ய காடு மலைகளைத் தாண்டி வடநாட்டிற்குச் செல்லுகையில் முருகக் கடவுள் தென்பட்டு தென் கைலாயமாகிய ஸ்ரீ காளத்தி மலையைத் தரிசித்து அங்கிருந்த தடாகத்தில் மூழ்கச் சொன்னர். அவர் தடாகத்தில் மூழ்கி, பொன் முகரியிலும் மூழ்கி, சுவர்ண முகியெனும் நதியில் எழுந்து சரீரத்தில் ஏற்பட்ட குஷ்ட நோய் நீங்கி "கைலைபாதி, காளத்திபாதி" என்ற பாடலைப் பாடினர்.

சிலந்தி, அரவம், கஜம், இம்மூன்றும் இவ்விசேஷ ஸ்தலத்தில் முக்தி பெற்றதால்

ஸ்ரீ காளஹஸ்தி எனப் பெயர் பெற்றது. அதாவது "ஸ்ரீ" என்றால் சிலந்தி எனப் பொருள். "காள" என்றால் ஸர்ப்பம் என்று பொருள். "ஹஸ்தி" என்று யானைக்குப் பெயர். ஆகவே ஸ்ரீ காளஹஸ்தி எனப் பெயர் பெற்றது. சகல பாபங்களையும் தீர்க்கவல்ல, காளிதீர்த்தம், அரஹர தீர்த்தம், மணிகங்கை முதலியவை இங்கு இருக்கின்றன.

இந்த விசேஷ ஸ்தலத்தில் "மஹா சிவராத்திரி" வெகு விசேஷம். அன்று பல்லாயிரக் கணக்கான யாத்ரீகர்கள் கூடுவார்கள்.

தமிழ் நாட்டு சகோதரிகள் ஸ்ரீ காளஹஸ்தி நாதனையும் ஞானப் பூங்கோதையையும் தரிசித்து சகலவிதமான ஐஸ்வரியங்களுடன் சிரஞ்சீவியாய் தேஜோமயத்துடன் வாழ்வார்களாக!

சிரத்தானத்திற் பணியாதே
    செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தா மற்றொப் பிலதான
    மலர்த்தாள் வைத்தெந்தனை ஆள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா
    நினைத்தார் சித்தத் துறையும் ஞான பூங்கேசா
திருத்தான் முத்தர்க் கருள்வோனே
    திருக்காளத்திற் பெருமானே

ஸ்ரீ பூங்கோதை சமேத ஸ்ரீ காளத்தி நாதன் கழலினை வாழ்க!

செருப்புக் காலொற்றிச் செவ்வாய் புனல்விட்டுச்
    சென்னிப் பூப்பெய்து செங்கையிலூண் வைத்து
கருப்புக் கான் மட்டுந் தின்றா யென நின்ற
    கண்ணப்பன் பணி காளத்தி வாணனே!

—:0:—



# சண்பகம்

டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை

விசாலாட்சி அம்மாள் ஓர் விதவை. பாக்கியமும் சண்பகமும் அவளது புதல்விகள். இவ்விருவரைத் தவிர அவளுக்கு அதிகமானசொத்து ஒன்றுமில்லை. பாக்கியத்திற்கு விவாகமாகிவிட்டது. ஆகையால் சண்பகமே இப்போது அவளுக்கு யாவுமாகியிருந்தாள்.

சண்பகத்திற்கு வயது பதினாறு. சுந்தர வதனமுடையவள். சண்பகத்தை சுதர்மனுக்குக் கொடுத்து வீட்டிலேயே வைத்துக்கொள்ளவேண்டும் என்பது விசாலாட்சியம்மாளின் அவா. ஆனால், கண்டி தேயிலைத்தோட்டத்திற்கு ஆள் சேர்க்க வரும் வஞ்சகன் வலையில் அகப்பட்ட பேதைகளுள் சுதர்மனும் ஒருவன்.

கண்டி தேயிலைத்தோட்டத்தில் சுதர்மனுக்கு தினம் ஆறணாத்தான் கூலி. கிள்ளிக்குவித்த கொழுந்தை பதம் செய்யும் இடத்திற்குக்கொண்டு சேர்ப்பது இவன் வேலை. முதலில் வேலை கஷ்டமாகத் தோன்றவில்லை. பின்புதான் வேலையின் கஷ்டமும், அட்டைக்கடியின் அவதியும், அதிகாரிகளின் மிரட்டலும் தெரியவந்தன.

தன் கனவும், எண்ணங்களும் இந்நிலைக்கு வந்துவிடும் என அவன் எண்ணவில்லை. கறுத்துச் சுண்டிப்போன தன் உடலைக் காணும்போதெல்லாம் அவன் மனம் குமுறும்.

'கமுகவத்தை' என்பது அப் பிரதேசத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் சிறந்தது. அதை அடுத்திருப்பது 'கன்னியப்பு.' இவ்விரு தோட்டங்களுக்குமிடையில் ஒரு சிறு நீரோட்டமும், மண்திட்டுகளும் அடர்ந்து செழித்து வளர்ந்திருக்கும் பலவகை மரங்களுமுள்ளன.

அருணன் தன் பொன்னிறக் கதிர்களுடன் தோன்றும் சமயம் புள்ளினங்கள் சப்தமிட்டுக்கொண்டு வெளிக் கிளம்பின. இளங் காற்று மெல்ல வீசி செடி கொடிகளை ஆட்டிக் கொண்டிருந்தது.

"ஏலோ.........ல............ம்........ஆ.........ஏலோ........லம்" என்ற சிங்களவப் படகோட்டியின் முரட்டுத்வனியைத் தவிர வேறு மனிதர் குரலில்லை.

சுதர்மனின் மனம் அலையாடிக் கொண்டிருந்தது. மனம் போன போக்காக நீரோட்டத்தின் கரை யோரமாக வந்து ஒரு கல்லின் மேலமர்ந்தான். வாடி, வதங்கி, வெளுத்திருந்த அவனது பிரதிபிம்பம் அங்கு தேங்கியிருந்த தண்ணீரில் தெளிவாகத் தெரிந்தது.

அவன் விழிகளிலிருந்து வழிந்து விழுந்த இரண்டு துளி கண்ணீர் அத்தோற்றத்தைக் கலைத்தது.

மந்தகாசமாக ஓடிக்கொண்டிருந்த நீரோட்டத்தின் நடுவில் ஒரு சிவப்புத் துணி தோன்றி மறைந்தது. அகஸ்மாத்தாய் அதைக் கவனித்தான் சுதர்மன். உற்று நோக்கினான். மீண்டும் தெரிந்து மறைந்தது.

பாய்ந்தான் நீரினுள். அதைப்பற்றி இழுத்துக் கரைசேர்த்தான். அவன் விழிகள் அதை நம்பவில்லை; திடுக்கிட்டு நோக்கினான். அது ஒரு பெண்ணுருவம் என்பதை உணர்ந்தான். சற்றும் தாமதிக்கவில்லை. கரங்களைப் பிடித்துக்கொண்டு 'கர கர'வென சுழற்றினான். குடித்த நீர்

வாய் வழியாகவும், மூக்குவழியாகவும் 'மட மட' வென வந்தது. ஈரத்தைத் துடைத்தான். சற்று மூச்சு ஓட ஆரம்பித்தது.

அவள் முகத்தை நோக்கி ஏதோ சிந்தித்தான். பெண்மணியின் கருவிழிகள் மெல்லத்திறந்தன. உடல் முழுதும் வியர்வை வியர்த்தது. இனிப்பயமில்லை என அறிந்து மெதுவாக தூக்கி உட்கார வைத்தான். அவளால் பேசமுடியவில்லை. கைகளால் தன் கருத்தைக் காண்பித்தாள். அவளை மெல்ல நடக்கவைத்து தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான் சுதர்மன்.

"அம்....மா...." என்று கண்ணீர் விட்டாள் அப்பெண். "அழாதே" என்று தேற்றினான் சுதர்மன்.

பகல் கழிந்தது. நன்கு இருட்டிவிட்டது. மண்ணெண்ணெய் விளக்கு கொளுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. சுதர்மன் அவளை நோக்கி, "ஏனம்மா உன் பேர்என்ன?" என்று கேட்டான்.

"சண்........ப........கம்" எனப்பதிலளித்தாள் மங்கை.

"ஆ!" என்று திடுக்கிட்டான் சுதர்மன். பளிச்சென்று தன்வாழ்வு மனக்கண் முன் தோன்றி மறைந்தது.

அடர்ந்து நீண்டிருந்த மீசையும் தாடியும், கறுத்திருந்த மேனியுமுடைய சுதர்மனை சண்பகம் எவ்வாறு கண்டு கொள்ள முடியும்?

"எதற்காக ஆற்றில் விழுந்தாய்?" என்று தொடங்கினான் சுதர்மன்.

"அதை மட்டும் கேட்காதீர்" என்றாள் சண்பகம்.

"ஏன்?" என்று சுதர்மன் கேட்டதற்குச் சண்பகம் பதில் பேசவில்லை.

"சண்பகம்! நான் உன் மாமன்...... இப்பொழுதாவது உண்மையைச் சொல்ல மாட்டாயா?" என்றதும் சண்பகம் திடுக்கிட்டு, கண்களில் நீர்ததும்ப, "ஐயோ மாமா! அம்மா விண்ணுலகம் அடைந்து விட்டாள்" என்று கதறினாள். சுதர்மனுக்குத் துக்கம் பீறிட்டது. இருவரும் அழுதனர். பின்னர் அழுகை ஒருவாறு ஓய்ந்தது.

சுதர்மன் மறுபடியும், "சண்பகம் நீ எப்படி இங்குவந்தாய்?" என்று கேட்டான்.

சண்பகம் பொங்கி வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "தாங்கள் வீட்டிற்கு விஜயஞ்செய்து போய்விட்ட இரண்டு மாதத்திற்கெல்லாம் அம்மா மலேரியா காய்ச்சலால் இறந்தாள். அதன்பின் அக்காளும் பிரசவத்தின்போது அம்மாள் போன போக்கிலேயே போய்விட்டாள். அதன் பின்னர் அக்காள் புருடன், தன்னை நான் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருந்தார். நான் இணங்கவில்லை. அம்மாளின் விருப்பத்தையும் நமது விருப்பத்தையும் அறிந்துகூட நான் அவரை விவாகம் செய்தே தீரவேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருந்தார். அதனால் யான் 'கன்னியப்பு'க்கு வரத்துணிந்து விட்டேன். கடவுள் சகாயத்தால் 'கன்னியப்பை'ச் சேர்ந்து விட்டேன் என்றாலும், இரண்டு நாள் பட்டினிகிடந்தேன். எண்ணாதனதெல்லாம் எண்ணி, கடைசியில் உயிரை மடித்துக்கொள்ளத் துணிந்தேன். ஆயினும் என் தலைவிதி இவ்வாறு முடிந்தது" என்று கூறி 'கோ' வென்றழுதாள்.

சுதர்மன் துக்கம் மேலிட்டவனாய், "சண்பகம் அழாதே! உனக்கு நான் ஒருவன் உலகத்தில் இருக்கிறேன் என்பதை நினைவில் வைத்துக்கொள். நான் அன்று விரும்பிய சண்பகம் இன்று என் கையில் வந்து சேர்ந்து விட்டது. எனக்கு இனி என்ன குறை இருக்கிறது," என்று கூறிக் கொண்டே அவளைத் தழுவினான். இருவர் "உடலும் உணர்வும்" ஒன்றாயின.



# கூந்தலழகு

திரு. சி. கனகசுந்தர தேசிகன்

மகளிர் பிறை போன்ற நெற்றியையும் விற் போன்ற புருவத்தையும் கயல் போன்ற கண்களையும் கமலம் போன்ற முகத்தையும் மேகம் போலிருண்ட கூந்தலையும் இன்னும் பிறவற்றையும் பொருந்தி அழகுடன் விளங்குவர். இவை அவர்களுக்கு இயற்கையாகவே அழகு செய்பவை. உடலிற் சிறந்தது தலை. தலையிற் றலையிடத்திலிருப்பது கூந்தல் இக் கூந்தலைக் கவிகள் "காரிற் சிறந்த மலர்க்குழல்" "கனமே குழல்" "காராரு மெல்லோதி" "கூந்தல் மழை" என்று முகிலுக்கும், "இருண்டறல் போல் நெறிவே யலங்கன் முடித்தலை" "குழல் கண்டன்ன பின்னல்லவோ வறல் னீருட்குளித்ததுவே" "நெடுந்திரை கொழித்த தெள்ளறலோ" என்று கருமணலுக்கும் உவமையாகக் கூறினர். அன்றியும் பசியசைவலத்துக்கும், தண்டலைக்கும், தூமத்துக்கும், வண்டினத்துக்கும் உவமையாகக் கூறினர். உவமான சங்கிரககாரர்

"கொண்டலுங் கூந்தற் கமுகுங்
 கொன்றைக்காயும்
இருளுந் தண்டலையுங் கார்மணலுஞ்
 சைவலமும்
வண்டினமுந் தன் குழலை யொப்பாம்"

என்று கூறிப்போந்தமையையும் ஈண்டு நோக்குதல் தகும்.

தமிழ்ப் பெண்மணிகள் கூந்தலை முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என ஐம்பாற் படுத்தி அழகுற முடிந்தனர். இவற்றுள் முடி என்பது உச்சியில் முடிப்பது. கொண்டை என்பது வலப்பக்கத்திலாவது அல்லது இடப்பக்கத்திலாவது முடிப்பது. குழல் என்பது சுருட்டி முடிப்பது. சுருள் என்பது பின்னே சொருகி முடிப்பது. பனிச்சை என்பது அழகுறப் பின்னி விடுவது. இவ்விதம் கூந்தலை அழகு படுத்தி முடிந்தமையோடமையாது அவர்கள் மலர்களையும் மலர்மாலைகளையும் சூட்டிக் கூந்தலை அழகு பெறச் செய்தனர். இதனை "விரைமலரோதி மேன் மிஞிறிரைந்தெழ" "தண்ணறுந்துளிக்குங் கூந்தல்" "துளி மதுக் கோதை" "பாட்டளிதுதைந்து பருமுகையவிழ்க்கும் பைந்துணர்த்தெரியல் கூந்தர் சூட்டுடையுச்சி" "காலையின் மாலைவார் குழன்" "முல்லையங் கோதை நல்லார்" முதலாம் மேற் கோள்கள் மூலமும் பல இலக்கிய நூற்கள் மூலமும் அறியலாம். இவ்விதமாக இவர்கள் புது மலர்களைத் தம் குழலிற் சூட்டுவதனாற் கூந்தலை அழகு பெறச்செய்தும் தமக்கும் தம் நாயகருக்கும் மன மகிழ்வையும் தேக ஆரோக்கியத்தையும் அளிப்பர். ஆனால் தற்காலம் நாகரீக நங்கையரிற் சிலர் செயற்கை மலர்களைப்புனைந்து முன் கூறப்பட்ட நன்மைகளை இழக்கின்றனர். இவர்கள் இவ்விதம் செயற்கை மலர் புனைவது முருக்க மலர் சூடுவதனை ஒக்கும். இஃது ஓர் சிறப்பிலாச் செய்கை என்பதனை நம் சகோதரிகள் அறிவார்களாக. அறிந்து அதனை நீக்குவார்களாக. நோய்க்கிருமிகளைக்கொல்லும் சக்தி மலர் மணத்துக்கு

உண்டென்று அறிஞர்கள் கூறுவதனால் இயற்கை யழகு நிரம்பப் பெற்ற நல்ல மலர் மாலைகளைத் தம் குழலிற் சூட்டுவார்களாக.

கற்புடைமகளிர் பண்டைக் காலத்தில் முல்லை மாலையைத் தம் கூந்தற்கண் சூட்டினர். இவ்விதம் அவர்கள் முல்லைமாலை சூட்டியமையை "முல்லையங்கோதை நல்லார்" என்று கூறப்பட்டிருத்தலானும் தன் தலைவி கற்புடையவளென்று அவளுக்கு முல்லைமாலையைச் சூட்ட அவளும் தன் தலைவன் சூட்டிய முல்லைமாலையுடன் தன்னைத்தன் உயிர்ப்பாங்கிக்கு கற்புடையவள் என்று அறியச் செய்யுங்காரணமாக அவள் முன் சென்றனள் என்பதனைப் பின் வரும் தஞ்சைவாணன் கோவைச்செய்யுள் காட்டும். அது

"பூட்டிய வார்சிலை வீரரை வென்றெப்
 பொருப்பினுஞ் சீர்
நீட்டிய வாணன் றென்மாறையன்
 னீரிதழ்ச் செம்மையுமை
யூட்டிய வாளின் கருமையுந்தான்
 கொண்டு மக்கிங்ஙனே
சூட்டிய வாறு நன்றூன் முல்லைமாலை
 சுனைப்புனலே"

என்பதாகும். இவ்வாறுகக்கோவைகளிற கற்புடைமகளிர் முல்லை மாலையைச் சூட்டுதல் வழக்கம் என்று கூறப்பட்டிருப்பதாலும் அறியலாம். அன்றியும், தாம் அன்புடன் வளர்த்த முல்லைக் கொடியானது தமக்கு மாலை சூட்ட வெள்ளிய மென்மையான அரும்புகளைத் தந்ததென்று கருதி அவற்றிற்கு வாத்திய முழக்கத்துடன் பண்டை மகளிர் விழாச் செய்தனர் என்பதனாலும் அறியலாம். இவ்வாறு விழா வெடுத்தமையை

"அல்லியங் கோதை மாதான் பொடு
 வளர்த்த முல்லை
மெல்லரும் பீன்ற தென்று விழாவயர்
 முழவி னோடு.
மல்லலந் திணிதோண் மைந்தர்
 மங்கையர் வதுவையாற்றும்
பல்லிய முழக்க மார்க்கும் பாவை
 யோடிகலு மாதோ"

என்னும் நைடதச் செய்யுளான் அறியலாம்.

பண்டைக்கால மகளிரும் தம் கூந்தற்கு மலர்களான் மணம் ஊட்டியமையோடமையாது வாசனைத் திரவியங்களாகிய மயிர்சாந்தினையும், கஸ்தூரியையும், புனுகையும் அணிந்தனர். கஸ்தூரி அணியும் வழக்கம் இருந்தமையை

"வானக்கதிரவன் மண்ணக மாதை
 மணந்த தன்றோ
நானக்குழலியை நானின்று பெற்றது
 நாவலர்க்குத்
தானக் களிறு தரும் புயல்வாணன்
 தமிழ்த் தஞ்சைசூழ்
கானக் கடிவரை வாய் விரை நாண்
 மலர்க் காவகத்தே"

என்ற தஞ்சைவாணன் கோவைச் செய்யுள் மூலமாகவும்,

புனுகு அணிந்தமையை

"மையார் குவளை வயற்றஞ்சைவாணனை
 வாழ்த்தலர்போல்
நையாதொழி மதி நன்னெஞ்சமே யினி
 நம்மினுந்தன்
நெய்யார் கருங்குழற் செம்மலர் வாடின
 நீலவுண்கண்
கையாலலைப்பவர் போலிமையா
 திற்குங் காரிகைக்கே"





என்னும் கோவைச் செய்யுள் மூலமாகவும்

"நெய்யொடு குங்குமம் நிறைந்த நாணிறைற்
பொய்கைகள் பூம்படாம் போர்த்த
 போன்றவே"

என்ற சிந்தாமணிச் செய்யுள் மூலமாகவும் அறியலாம்.

மயிர்ச்சாந்து அணிந்தமையை

"குரும்பை மென் முலையாராடக்
 கூந்தலினறவந் தோய்ந்த
விரும்புன லாறு பாய வெறி தரை
 சுருட்டுந் தெண்ணீர்க்
கருங்கடற் புலவு நீங்கி நறுமணங்
 கமழு மென்றூன்
முருந்துறழ் முறலார்த மிகுதியை
 மொழியலாமோ"

என்னும் நைடதச் செய்யுளானும் அறியலாம். அவர்கள் நீராடியபின் தமது கூந்தலை அகிற் புகையினாற் புலர்த்தினர். இவர்கள் இப்புகை யூட்டுவதனால் அவர்கள் கூந்தல் பரிமளம் கமழ்ந்துகொண்டே இருக்கும். அகிற்புகை ஊட்டியமையை

"நின்று புயல் வானம் பொழிந்த
 நெடுந்தாரை
யென்று மகில் கமழு மென்பரால்—
 தென்ற
லலர்த்துங் கொடிமாடத் தாயிழை
 யாரைம்பால்
புலர்த்துங் புகைவான் புகுந்து"

என்னும் நள வெண்பாச் செய்யுளானு மறியலாம். அவர்கள் கோதி வகிர்ந்து ஒழுங்காயமைந்த நுனிகளையும் மென்மையையும் பளபளப்பையும் உடைய தமது கூந்தலிலே செவ்விய அடிகளையுடைய வெட்சிப் பூக்களை விடுபூவாகத் தூவி அதற்கு நடுவே பசுந்தாளையுடைய குவளைப் பூவின் தூய்மையாகிய இதழ்களைக் கிள்ளியிட்டு முடித்தனர். சிதேவி என்னும் தலையாபரணத்தையும் வலம்புரிவடிவாகச் செய்த தலையாபரணத்தையும் வைத்தற் குரிய இடத்திலே வைத்தனர். கொண்டையிலே அழகிற் சிறந்த கோட்டுப்பூக்களாகிய சண்பகம், மகிழ், புன்னைகம் முதலிய மலர்களையும் நீர்ப் பூக்களையும், அவற்றின் மொட்டுக்களையும் மாலைகளாகக் கட்டி அணிந்தார்கள். இவ்விதம் பண்டைக்காலத் தமிழ் பெண்கள் கூந்தலைச் சிறப்புறக் கவனித்திருப்பவும் தற்கால மகளிரிற் பலர் தமது சிறப்பு மிக்க கூந்தலை ஐரோப்பிய மாதரைப் பின்பற்றிக் குறுக்கி வெட்டிவிட்டமை மிகவும் நாணந்தரு செய்தியேயாகும். ஐரோப்பிய மாதர் தமது செஞ்சடைபோன்ற செறிமயிரானது அழகு கொடாதென்றெண்ணிக் குறிக்கிவெட்டிவிட (Bob hair விடுகின்றமை) அதனைக் கண்ணுற்ற தமிழ்ப் பெண்களும் தமது அழகுமிக்க "காராரு மெல்லோதியை"க் குறுக்கி வெட்டிவிடல் பொருந்தாச் செய்கையே யாகும். ஆதலால் வருங்காலத்திலாகுதல் இவ்விதம் கூந்தலைக் குறுக்கி வெட்டிவிடும் வழக்கத்தை ஒழித்து விடுவார்களென்பது திண்ணம்.

JL
4,5m, N37
N38.2



134087

# அனந்த பத்மநாப விரதமகிமை

ஸ்ரீமதி டி. வி. ரத்னம்

பாண்டவர்கள் ஆரண்யத்தில் அதிக கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கும் காலத்தில், அவர்களைப் பார்ப்பதற்காக ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவர்களிடம் வந்தார். பாண்டவர்கள் வரிசைக்கிரமமாக நமஸ்கரித்து அவருக்குத் தக்க ஆசனத்தை கொடுத்து உட்காரச்செய்து தாங்களும் உட்கார்ந்து கொண்டார்கள்.

அப்பொழுது தர்மராஜா ஸ்ரீகிருஷ்ண பகவானைப் பார்த்து, "ஓ ஜனார்த்தனா! நான் தம்பிகளுடனும் மனைவியோடும் சேர்ந்து அதிக கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதால் இந்த முடிவில்லாத துக்கசாகரத்திலிருந்து விடுதலை அடையும்படியான ஒரு உபாயத்தை எங்களுக்குச் சொல்லவேணு"மென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டதற்கு ஸ்ரீகிருஷ்ணன், தர்மராஜாவிற்கு சொன்னதாவது:—

"ஓ தர்மநந்தனா! அனந்த விரதம் என்கிற ஒரு விரதம் உண்டு. அது சகல பாபங்களையும் போக்கடித்து ஸ்திரீ புருஷர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் கொடுக்கக்கூடியது. சாஸ்வத கீர்த்தியையும், என்றும் அழியாசம்பத்தையும், அனேக புத்ரபௌத்திரர்களையும், எல்லா இஷ்டகோரிக்கைகளையும் கொடுக்கத்தக்கது. அந்த விரதத்தை பாத்ரபத மாதம் சுக்லபக்ஷம் சதுர்தசி தினம் அனுஷ்டிக்க வேண்டியது. அந்த விரதத்தை அனுஷ்டித்த சகல மனுஷர்களும் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுவார்கள்" என்றார்.

இவைகளைக் கேட்ட தர்மராஜா கிருஷ்ணரைப் பார்த்து, "ஓ கேசவா, நீங்கள் அனந்தனென்று சொன்னீர்களே, அந்த அனந்தர் யார்? ஆதிசேஷனா, தக்ஷகனா, பரமாத்மாவா? அல்லது பரபிரம்மாவா? அந்த அனந்தனென்பவர் யார் எனக்கு உண்மையைத் தெரிவியுங்கள்" என்று கேட்டார். ஸ்ரீகிருஷ்ணர்,

"ஓ குந்திபுத்ரா, நானே அந்த அனந்தன். நானே விஸ்வரூபன் என்று உனக்குத் தெரியுமல்லவா. சூர்ய சஞ்சாரத்தினால், விநாடி, நிமிஷம், நாழிகை, முகூர்த்தம், பகல், இரவு, பக்ஷம், மாதம், ருது, அயனம், வருஷம், என்ற பேதங்களுள்ள, எந்தகாலம் ஏற்படுகிறதோ அது நானே. அப்படிப்பட்ட அனந்தனை நான் சகல ராக்ஷசர்களையும் சம்ஹாரம் செய்து பூபாரத்தை நீக்க, பூலோகத்தில் வசுதேவருடைய குலத்தில் பிறந்தேன். நானே அனந்தன், கிருஷ்ணன், இந்திரன், விஷ்ணு, சிவன், பிரம்மா, சூரியன், ஆதிசேஷன், சர்வ வியாபியான ஈஸ்வரன், சகல பிரபஞ்சமும் என்ரூபமே; நான் பெரிய ரூபமுடையவன். சிருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு, காரணபூதனும் அனந்தபத்மரூபனும் நானே; நரசிம்மவாமன அவதாரங்களெடுத்ததும் நானே; முன்னாடியே



நம்பிக்கை உண்டாவதற்காக அர்ஜுனனுக்கு என் விஸ்வரூபத்தை காண்பித்தேன். நானே பரபிரம்மஸ்வரூபி. யோகிகள் என்னையே தியானிக்கிறார்கள். இந்த பிரபஞ்சமெல்லாம் என்ரூபமே. எனக்கு முடிவு இல்லை. என்னிடத்திலேயே பதினான்கு மனுக்கள், அஷ்டவசுக்கள், பனிரெண்டு சூரியர்கள், பதினொரு குரு ருத்திரர்கள், சப்தரிஷிகள், சமுத்திரங்கள், மலைகள், நதிகள், விருக்ஷங்கள், நக்ஷத்திரங்கள், திக்குகள், பூமி, பாதாளம், பூபுவாதி லோகங்களுமிருக்கின்றன. ஓ யுதிஷ்டிரா! இந்த விஷயங்களில் உனக்கு சந்தேகம் வேண்டியதில்லை, எல்லாம் நானே" என்று சொன்னார்.

இதைக் கேட்ட தர்மராஜர் கிருஷ்ணனைப் பார்த்து "இந்த விரதத்தை செய்வதில் என்ன புண்யம், என்ன பலன்? இதற்காக என்ன கொடுக்கவேணும். எந்த தேவதையை பூஜிக்கவேண்டும்? முன் யார் இந்த விரதத்தை அனுஷ்டித்தார்கள். இது எப்படி பூலோகத்திற்கு வந்தது என்ற விவரங்களை சொல்லவேண்டு"மென்று கேட்டார். ஸ்ரீகிருஷ்ணன் சொன்னதாவது:—

பூர்வம் கிருத யுகத்தில் சுமந்தார் என்ற ஒரு பிராம்மணர் இருந்தார். அவர் வசிஷ்ட கோத்திரத்தில் ஜனித்தவர். அந்த விப்ரன் நல்ல ரூபவதியாகிய பிருகு வம்சத்தில் பிறந்த தீட்சை என்கிற ஒரு கன்னிகையை சாஸ்திர விதிப்படிக்கு விவாகம் செய்துக்கொண்டார். கொஞ்ச காலத்தில் நல்ல, லக்ஷணமும் அழகுமுள்ள சீலா என்கிற பெயருடைய பெண் பிறந்தாள். அந்த சிறுமி நன்னடைத்தையுடன் தன் தாய் வீட்டில் விருத்தியடைந்து, வளர்ந்து வந்தாள். அந்தப் பெண்ணின் தாயான தீக்ஷா என்பவளுக்கு காய்ச்சல் உண்டாகி அதிக கஷ்டப்பட்டு நாளுக்கு நாள் பலஹீனமடைந்து நதிக்கரையில் ஸ்வர்க்கலோகமடைந்தாள். பிறகு சுமந்தார் தன் அக்னிஹோத்திர கர்மைகள் இல்லாமல் போய்விடுமென்கிற பயத்தினால் கெட்ட ஸ்வபாவங்களும், க்ரூர புத்தியும் என்னேரமும் சண்டைப் பிடிப்பவளுமான கற்கசா என்று பெயருள்ள ஒரு கன்னிகையை விவாகம் செய்துக்கொண்டார்.

தன் குமாரியான சீலா யென்பவள் தன் தாயில்லாமையினால் வீட்டு வேலைகளை செய்வதில் ஸ்ரத்தையாய், சுவர்களுக்கும், ஸ்தம்பங்களுக்கும், வாசல் படிகளுக்கும் இன்னும் மற்ற கூடங்களிலும் பஞ்ச வர்ணங்களினால் செய்யப்பட்ட பொடிகளைக்கொண்டு கமலங்களையும் இன்னும் அழகான கோலங்களையும் போட்டுத் தேவ பூஜை செய்துகொண்டு வந்தாள்.

தகப்பனாராகிய சுமந்தரார் தன் பெண்ணுக்கு யௌவன வயது வந்ததை கவனித்து, "இந்தப்பெண்ணை யாருக்குக் கொடுக்கலாமென" யோஜித்துக் கொண்டிருந்தார். அச்சமயம் கௌண்டன்யர் என்ற ஒரு மஹாமுனி சகலவித்தைகளையும் கற்றுக் குருவின் அனுமதி பெற்றுக் கொண்டு கல்யாணம் செய்து கொள்ள வந்து கொண்டிருந்தார். சுமந்தரார் அவரைப் பார்த்ததும், தன் பெண்ணை அவருக் கொடுத்து விவாகம் செய்து விடலாமென்று நிச்சயித்தார். அந்த முனியை மரியாதையுடன் தன் இல்லத்திற்கு வரவழைத்து வைத்துக்கொண்டிருந்து உபசரித்து, ஒரு சுப முகூர்த்த தினத்தில்,

சாஸ்திர விதிப்பிரகாரம் அம்முனிக்கு தன் பெண்ணாகிய சீலாவை கொடுத்து கல்யாணம் செய்வித்தார்.

விவாகம் முடிந்த பிறகு மாப்பிள்ளையையும் பெண்ணையும் அனுப்பிக் கொடுப்பதற்காக சுமந்தரர் தன் மனைவியான கற்கசியிடம் போய் தம்பதிகளுக்குச் சீதனமாக கொடுத்தனுப்ப ஏதாகிலும் சாமான் இருக்கிறதா என்று கேட்டார். தட்க்ஷணமே அவள் கோபாவேசத்துடன் தன் அறைக்குள் நுழைந்து கதவை தடாலென்று சப்தத்துடன் தாளிட்டுக் கொண்டு, "போ, போ," என்று பெருங்குரலுடன் பதில் கூறினாள். சுமந்தரர் அச்சமயம் அதிக விசனமடைந்து வீட்டில் தேடிப்பார்த்ததில் கொஞ்சம் சத்துமாவு இருக்கக்கண்டு அதை எடுத்துத் தன் பெண்ணிற்குக் கொடுத்தனுப்பினார்.

புதிதாக மணம் செய்து கொண்ட சீலாவை அழைத்துக்கொண்டு முனீந்திரர் ஒரு மாட்டு வண்டியில் மெதுவாக போய்க் கொண்டிருக்கையில் நடுப்பகல் வந்ததும் தான் மாத்யானீகம் செய்வதற்காக ஓர் ஆற்றங் கரையில் இறங்கினார். முனியானவர் ஸ்நானம் செய்ய ஆற்றிற்குப்போனார். சீலாவும் அங்கு வெவ்வேறாக சிகப்பு உடைகளை கட்டிக்கொண்டு, அனந்த சதுர்தசி அன்று ஆனதால், ஸ்திரீகள் பூஜை செய்து கொண்டிருப்பதைக் கண்டாள். சீலா மெதுவாக அவர்களிடம் போய் "அம்மா, இது என்ன விரதம். இதன் பெயரென்ன?" என்று கேட்டாள். அங்குள்ள ஸ்திரீகளும், "இது அனந்த விரதம்" என்று கூறினார்கள். சீலா "இதை நானும் செய்கிறேன்" என்றாள். "இந்த விரதம் செய்வதெப்படி. எங்கே எவ்விதம் எந்த தேவதையை ஆராதிக்க வேணுமென்று எனக்கு நீங்கள் சொல்லவேண்டு" மென்று பிரார்த்தித்தாள். அதற்கு அவர்கள் "ஓ சீலா! இந்த விரதம் பாத்ரபதமாதம் (புரட்டாசிமாதம்) சுக்லபக்ஷ சதுர்தசி தினம் அனுஷ்டிக்கவேண்டியது. அந்த தினத்தில் அனந்த பத்மநாப ஸ்வாமியை பூஜை செய்து அவருடைய கதையை கேட்கவேண்டும்," என்று சொல்லி பூஜை விவரத்தையும் கூறினார்கள். பூஜையின் விவரம் எப்படியெனில் :—

"நதியில் ஸ்நானம் செய்து இஷ்டதேவதையை நமஸ்கரித்துப் பிரார்த்தித்து பரிசுத்தமான வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு, ஓர் சுத்த இடத்தில் கோமயத்தினால் மெழுகி கோலமிட்டு சர்வ அலங்காரமுள்ள மண்டபத்தை நிர்மாணித்து, அந்த மண்டபத்தின் மத்தியில் எட்டு ரேகைகளுள்ள பத்மத்தைப் கோலப்பொடியால் போட்டு அதைச் சுற்றிலும் அரிசிமாவினால் செய்யப்பட்ட பஞ்ச வர்ண பொடிகளால் கோலம் போட்டு, அந்த மண்டபத்திற்குள் குறைந்தது இரண்டு கலசங்கள் வைக்கவும். (அதாவது குங்குமம் மஞ்சள் கலந்த ஜலத்தை பஞ்சபாத்திரத்தில்விட்டு மாவிலை கொத்து மேலேவைத்து, அதன்மத்தியில் மஞ்சள் பூசின தேங்காய்வைத்து பஞ்ச பாத்திரத்தின்மேல் அனந்த பத்மனாப ஸ்வாமி என்று எழுதவேணும் சுண்ணாம்பினால்) கலசத்திற்கு சாத்தும், புதியவஸ்திர துண்டிற்குக் குங்குமத்தினால் பத்மம் எழுதி கலசத்தின்மேல் வைக்கவேணும். இவ்விதம் இரண்டு கலசங்கள் வைத்து அவைகளில் சர்வ வியாபியான அனந்த பத்மனாப ஸ்வாமியை இவ்விதம் தியானம் செய்ய வேணும்.





ஸ்வேதத் த்வீபத்திலிருக்கும்படியான அனந்தரை தர்பைகளால் ஏழுபடங்களுள்ள நாகரூபங்களாகச் செய்து பச்சை குங்குமத்தால் கண்கள் வைத்து நான்கு கைகளிருப்பதாக தியானித்துக் கொண்டு வலதுகையில் பத்மமும், கீழ்கையில் சங்கமும், இடது மேல்கையில் சக்ரமும், கீழ்க் கையில் கதையும் இருப்பதுமாக பாவித்து, மண்டபத்திலுள்ள கலசத்தை தியானித்து பூஜிக்கவேணும் என்று பிரம்மவேத்துகள் சொல்லுவார்கள். இவ்விதம் அனந்தபத்மனாபஸ்வாமியை கும்பம் மண்டலம் பிரதிமாக்களில் ஆவாகனம் செய்து திவ்யபுஷ்பங்களாலும் தூபதீபங்களாலும் பூஜித்து வெவ்வேறு விதமான பதினான்கு வித நைவேத்யம் செய்து அந்த அனந்தபத்மனாபஸ்வாமியின் முன்பாக பதினான்கு முடிகள் போட்ட குங்கும நிரதோரத்தை வைத்து பூஜிக்கவேணும். பூஜைசெய்தபின் குறைந்தது 5படி கோதுமை மாவுடன் வெல்லத்தைக் கலந்து 28அதிரசங்கள் செய்து நைவேத்யம் செய்யவேணும். அதில் பாதிபாகத்தை தானம் பிராம்மணர்களுக்குச் செய்து விடவேண்டும். மீதி பாதி பாகத்தை தாங்கள் பந்து ஜனங்களுடன் சாப்பிடவேண்டும். இந்த விரதத்தில் பூஜைக்குரிய சாமான்கள் ஒவ்வொன்றும் பதினான்கு வகை யிருக்கவேண்டும்.

இவ்விதம் பக்தியாக அனந்த விரத பூஜை செய்து உத்தம பிராம்மணர்களுக்கு போஜனம் செய்வித்து தாங்களும் போஜனம் செய்யவேண்டும்.

பிரதி வருஷமும் இந்த விரதத்தை சிரத்தா பக்தியோடு செய்து புதிய தோரங்கள் கட்டிக் கொள்ள வேண்டும். பதினான்கு வருஷம் பூர்த்தியானதும் உத்யாபனை செய்ய வேணுமென்று" அந்த ஸ்திரீகள் சீலாவிற்குச் சொன்னார்கள்.

இதைக்கேட்ட புத்திசாலியான சீலா அந்த ஸ்திரீகளின் உதவியைக் கொண்டு தானும் வெகு சிரத்தா பக்தியுடன் விரதம் செய்து புதிய தோரம் கட்டிக்கொண்டு தான் வழிக்காக கொண்டுவந்த தன் தகப்பனாரால் கொடுக்கப்பட்ட சத்துமாவை நைவேதனம் செய்து அதில் கொஞ்சம் பிராம்மணனுக்கும் கொடுத்து மீதியை தானும் தன் புருஷனுமாக பகவான் பிரசாதத்தை புசித்து பிறகு இருவருமாக தங்கள் சொந்த ஆச்ரமம் போய் சேர்ந்தார்கள். அவர்கள் தங்கள் கிரஹஸ்தாஸ்ரமத்தை சந்தோஷமாக நடத்தி வருகையில் அந்த அனந்தருடைய கிருபாகடாக்ஷத்தினால் அஷ்டஐஸ்வர்ய சம்பத்துக்கள் வர வர விருத்தியாய்விட்டன. அந்த மஹரிஷி ஆச்ரமம் அதிகப் பிரகாசமும் அதிதிகளின்வைபவமும் சாந்தமிருகங்கள் சுற்றிலுமுள்ளதாகவும் அதிக ரமணீயமாய் கொண்டாடத் தக்கதாயிருந்தது. அந்த சீலாவும் உயர்தரமானதும் அழகுள்ளதுமான ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு சாக்ஷாத் சாவித்திரி தேவிக்கு சமானமாயிருந்து வந்தாள். அவளுக்குண்டான போகபாக்யங்களைக் கண்ட பந்துக்களான அனைவரும் இவளுக்கு அனந்தபத்மனாப ஸ்வாமியால்தான் இவ்வளவு ஐஸ்வர்யங்களும் கிடைத்தன வென்று சொல்லிக்கொண்டு சந்தோஷித்தார்கள்.

இவ்விதமாக பூலோகத்தில் இந்த விரதம் பிரசித்தி அடைந்தது.

## பாலர் பக்கம்

# பணப் பெட்டி

ஸ்ரீமதி கே. கமலா

பம்பாபுரி என்னும் நாட்டை பர்குணன் என்பவன் அரசாண்டு வருகையில், ஒரு சமயம் உள்நாட்டுக் கலகம் ஏற்படவும், அரசன் தனது படையைத்திரட்டி கலகக்காரருடன் போர் புரிந்து வெற்றியடைந்ததும், எஞ்சி நின்ற கலகக்காரர்களைப் பறிமுதல் செய்து சிறையிலடைக்கும்படி உத்தரவிட்டான்.

கலகக்காரர் கூட்டத்தில் சோமேசன் என்பவனுமிருந்தான். அவனது தம்பி வ்ருஷவேசன் அரசன் கக்ஷியில் சேர்ந்திருந்தான். தனது தமயனை பிடிக்க அரசனது ஆட்கள் விரைவில் செல்லுவதை அறிந்தவனாக இருந்தும் நல்ல எண்ணமில்லாத அவன் தன் தமையனுக்கு "நீ அவசரப்படவேண்டாம். உன் பொருள்களைச் சேகரித்துக்கொண்டு செல்லலாம்" என்று இரகசியமாய்க் கடிதம் அனுப்பி வைக்கவே, அது உண்மை என்று நம்பி, அவன் தனது பொருள்களை எல்லாம் பணமாக்கி ஓர் பெட்டியில் அடக்கம் செய்துக்கொண்டிருந்தான். அச்சமயம் இரவு பத்து மணி இருக்கும். அரசனது ஆட்கள் தனது வீட்டை நெருங்கி வருவதை அறிந்த சோமேசன் தான் விரோதிகளிடமிருந்து தப்புவது கடினமென்று க்ஷணத்தில் உணர்ந்தானாயினும், தான் சேகரித்திருக்கும் பணப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஓட முடியாதென்றுணர்ந்து, அப்பெட்டியுடன் பின் தோட்டத்தையடைந்து ஓர் குறித்த இடத்தில் பள்ளந் தோண்டி அப்பெட்டியைப் புதைத்துவிட்டு, உள்ளே ஓடிவந்து, தனது ஒரே பெண் குழந்தையைத் தோளில் தூக்கிக் கொண்டு, மனைவியையும் அழைத்துக் கொண்டு தோட்டத்தின் வழியாய் இருளில் மறைந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடினான்.

ஆனால் அவர்கள் அவ்விதம் அறுபதடி தூரம்கூடச் செல்லுமுன் சத்துராதிகள் கண்களிற் தென்படவும், சத்துராதிகள் உக்கிரத்துடன் தூக்கி ஈட்டிகளை எரியவும், ஓர் ஈட்டி பின்னால் ஓடும் சோமேசன் மனைவியின் முதுகில் ஊடுருவிச் செல்ல அவள் 'ஆ' வென்றலறிக் கீழே விழுந்து பிராணனை இழந்தாள். ஆனால் தன்னுடன் அணைத்துக்கொண்டிருக்கும் பெண்ணுடன் சோமேசன் தன் சத்துராதிகளிடமிருந்து தப்பி ஓடி, இரகசியமாய் அன்னிய நாடு சென்றான்.

பிறகு, அரசன் சோமேசனது வீடு வாசல் யாவையும் தன்னிடம் சேவகம் புரியும் வ்ருஷவேசனுக் களிக்கவும், வ்ருஷவேசன் ஆனந்தமாய் வாழ்ந்து வந்தான். ஆனால் தனது தமயன் பணம் நிறைந்த பெட்டியை வீட்டினுள் எங்கயோ புதைத்து வைத்திருப்பதாய் நம்பிய வ்ருஷவேசன் வீடு முழுவதும், ஏன் தோட்டத்திலும் கூடத் தேடிப்பார்த்து விட்டான். ஆனால் அவன் தேடினது அகப்படவே இல்லை.

சிலவருஷங்கழித்து அவ்வூருக்கு ஓர் ஸாது வந்தார். அவரிடம் வ்ருஷபேசன் சென்று "ஓ ஸ்வாமி காலம் சென்ற எனது வம்சத்தினர் ஓர் பொக்கிஷப் பெட்டியைப் புதைத்து வைத்திருப்பதாக அறிகிறேன். அது எனக்கு எப்பொழுது அகப்படும்?" என்று கேட்டான்.

அதற்கு ஸாது "பொக்கிஷத்திற்கு வார்சுதாரன் தேடினால் அகப்படாது போகுமா? கட்டாயம் வார்சுதாரர் அடைவர் என்பதை நம்பு" என்று கூறினார். அதைக்கேட்ட வ்ருஷபேசன் தனக்குக் கட்டாயம் அப்பொக்கிஷம் அகப்படுமென நிம்மதியடைந்தான்.

அதன் பிறகு வ்ருஷபேசன் வீட்டருகில் ஓர் சிறிய வீட்டில் ஓர் ஏழைச் சைத்ரீகன் குடிவந்திருந்தான். வ்ருஷபேசன் சிலதினம் நடுஇரவில் தனது வீட்டு ஜன்னல் மூலமாய்ப் பார்க்கையில் தனது தோட்டத்தில் விளக்கொளி தெரிவது கண்டு வியப்படைந்தான். மறுதினம் நடு இரவிலும் தோட்டத்தில் விளக்கொளி தெரிவதைக்கண்ட வ்ருஷபேசன் பலத்த சந்தேகம் கொண்டு, அன்னியர் சிலரையும் துணைக்கழைத்துக்கொண்டு தோட்டத்தில் வெளிச்சம் வந்த இடத்தை அடைய, அங்கு தன் வீட்டருகில் புதிதாய் குடிவந்திருக்கும் சைத்ரீகனும் அவனது இளமனைவியும், அவர்களருகில் பூமியின்மேல் ஓர் பெட்டியும் இருக்கக் கண்டதும் "அடாடா நாம் இவ்வளவு வருஷங்களாகத் தேடியும் அகப்படாத பொக்கிஷப் பெட்டியை இவர்கள் தோண்டி எடுத்திருக்கின்றனரே" என்று பிரமித்து விட்டான். பிறகு கோபத்துடன் "அட திருட்டு நாய்களா, எனது தோட்டத்தில் பலவருஷமாய் புதைக்கப்பட்டிருந்த எனக்குச் சொந்தமான இந்தப் பெட்டியை நடு இரவில் திருட்டுத்தனமாய்க் களவாடிச் செல்லவா நினைத்தீர்கள்? நல்ல வேளையாய், இப்பொக்கிஷத்திற்கு நிச்சயமாய் நானே உரியவனானபடியால் நீங்கள் இதைக் கொல்டு போகுமுன் களவும் கையுமாய்ப் பிடித்துவிட்டேன். இனிமேல் இவ்விதக் களவுத் தொழில் நீங்கள் செய்யாமல் தடுப்பதற்காக உங்களைச் சிறை செய்து அரசனிடம் கொண்டு போகிறேன்" என்று உருமினான்.

அதற்குச் சைத்ரீகன் மனைவி "ஐயா அவ்வளவு பகட்டமாகப் பேசவேண்டாம். நாங்கள் கள்ளருமல்ல, பிறர் பொருளை எடுக்க எண்ணுபவருமல்ல, எடுக்கவுமில்லை. எனக்குச் சொந்தமான இப்பெட்டியையே நாங்கள் தேடி எடுத்தோம். இதைப்பற்றி உமக்கு விவகாரம் வேண்டியதில்லை. வந்த வழியே போம்" என்றாள்.

அதைக்கேட்ட வ்ருஷபேசன் மிகவும் மூர்க்கம் கொண்டு "அடீ என்ன சொன்னாய் நீ, இன்னுமொரு தடவை இப்பெட்டி உனக்கு சொந்தமென்று கூறினாயோ உனது பல்லை உடைத்து விடுவேன்" என்று கூறி ஆவலுடன் பொக்கிஷப் பெட்டியை எடுக்க முயன்றான். உடனே சுற்றிலுமிருந்த மற்றவர்களும், அத்தோட்டம் வ்ருஷபேசனது; ஆகவே அத்தோட்டத்திலகப்பட்ட அப்பெட்டி அவனுக்குத்தான் சொந்தமென்றும்,

சைத்ரீகனும் அவன் மனைவியும் நடு இரவில் வந்து அதை திருட்டுத்தனமாய் அபகரித்துச் செல்ல முயன்றபடியால் அவ்விருவரும் அரசனது தண்டனைக்குத் தப்ப முடியாதென்றும் கூறி அவர்களை இம்சிக்க முயன்றனர்.

சைத்ரீகன் மனைவி தனது மடியிலிருந்து ஓர் பத்திரத்தை எடுத்துக்காட்டி "ஐயன்மீர்! நீங்கள் சொல்லுவது சரியல்ல. இதோ அரசனது உத்திரவு பெற்றே இப்பொக்கிஷத்தை நாங்கள் அடைந்திருக்கிறோம்" என்றாள்.

வ்ருஷபேசன் அப்பத்திரத்தை வாங்கி விளக்கொளியில் படித்தான். அதில் தேசப் ப்ரஷ்டனாய் ஓடிமறைந்த சோமேசன் இறந்து விட்டபடியால், அரசன், சோமேசன் மகளை மன்னித்துவிட்டதுடன் சோமேசன் அவனது பழையவீட்டுத் தோட்டத்தில் மறைத்து வைத்திருக்கும் ரூபாய் 80,000ம் கொண்ட பொக்கிஷப் பெட்டி அகப்பட்டால் அதையடைய சோமேசன் மகளான சைத்ரீகன் மனைவி காந்திமதிக்கு பூரண உரிமை கொடுப்பதாயும், அவர்கள் அவ்வூரிலேயே வசிக்கவும் சுதந்திரம் கொடுப்பதாயும் அரசன் முத்திரையுடன் எழுதி இருப்பதைப்படித்ததும் வ்ருஷபேசன் "வார்சுதாரனுக்குக் கட்டாயம் பொக்கிஷம் அகப்படாது போகாது" என்று கூறியதின் ஆழ்ந்த கருத்தை அறியாது தான் மனப்பால் குடித்து ஏமாந்ததையும், தான் தமயனையும் வஞ்சித்து எவ்வளவோ சாமர்த்தியமாக நடந்தும் கடைசியில் கடவுள் நியாயத்திற்கே உதவிபுரிந்து, "அக்ரமஸ்தனை எனக்கு என் மனமே என்னைச்சுடும்படி தீர்ப்பளித்துவிட்டார்" என்ற எண்ணங்களும் அவன் மனதில் தோன்ற செயலற்று நின்று விட்டான். பிறகு என்றைக்கிருந்தாலும் அக்ரமம் அழிந்து போகும், தர்மத்திற்கே கடவுள் உதவுவார் என்பதை அறிந்தவனாய், தன் தமயன் மகளிடம் விசுவாசமாய் நடந்து வந்தான்.





ஸ்ரீமதி வ. சீதாமஹாலக்ஷ்மி

கிருஷ்ணா ஜில்லா ஸ்திரீகள் சங்கத்துக்கு இரண்டாம் முறை ஏகமனதாக தலைவராய் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.



ஸ்ரீமதி துர்காம்பாள், ஸ்ரீமதி உ. லக்ஷ்மீபாயம்மாள் (லேடி சூப்பரிண்டெண்டு, சாரத நிகேதனம், குண்டூர்) ஸ்ரீமதி வ. பி. ராவ்.

(சாரதாநிகேதன உதவி நிதிக்காக ஸ்ரீமதி லக்ஷ்மீபாயம்மாள் ரங்கூன் சென்றிருந்த போது மற்ற இருவர்களும் பண வசூல்செய்ய மிகவும் உதவி அளித்தனர். நிகேதனத்தின் நிதிக்காக தக்க நன்கொடை கிடைத்தது.)

# 'பர்தா'வில் வாழும் ஆடவர்கள்

திரு. கே. பி. மத்தாய்

●

சஹாராப்பாலைவனத்தில் ஒரு நாடோடி ஜாதியாரிருக்கின்றனர். அவர்களில் ஆண் மக்கள் அனைவரும் 'பர்தா' வுக்கு உட்பட்டே வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்; சாப்பிடும் போது, தூங்கும் போது கூட தங்கள் முகத்திரையை எடுக்கக் கூடாது. அவ்வளவு கண்டிப்பு. முகமட்டும் கூட மூடியிருந்தால் போதாது; தலை பூராவும் மூடப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இக்கூட்டத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் தங்கள் இஷ்டம்போல் எங்கு வேண்டுமானாலும் தங்கு தடையின்றி தாராளமாய் சுற்றி வரலாம். புருஷர்கள் தங்கள் மனைவிகளுக்குக் கூட முகத்தைக் காட்டக் கூடாது.

இந்த இனத்தாரின் பெயர் தாரேகர்கள் (Tauregs) என்பது. ஐரோப்பா முழுமையும் பனி மூடிக்கிடந்த காலத்துக்கு முன்னரே ஈடன் தோட்டத்தில் (Garden of Eden) வாழ்ந்து வந்த பழங்குடி மக்களின் நேர்சந்ததியார்கள் என்று இவர்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். சரித்திர காலத்தில் கூட தாரேகர்கள் வெற்றிக் கொடியை எங்கும் நாட்டி வந்த ரோமாபுரி, எகிப்து, கார்தேஜ் முதலிய தேசங்களின் படைகளை எதிர்த்து நின்றனர். தங்கள் தேசம் ஒரு சமயம் செழிப்பானதாக இருந்ததாக இவர்கள் கூறுகின்றனர். அது பாலைவனமாக மாறிய போதிலும் இந்த கூட்டத்தினர் தங்கள் தாய் பூமியை விட்டு வெளியேற வில்லை.

தற்கால நாகரீகம் இவர்களிடம் துளிக் கூடப்பரவவில்லை. தங்களுடைய விசித்திரமானதும் பழமையானதுமான வாழ்க்கை முறையை இன்னும் அனுஷ்டித்து வருகின்றனர். புருஷர்களை ஸ்திரீகள் அடக்கி ஆண்டு அவர்களது உத்தரவுக்கும் ஆஞ்ஞைகளுக்கும் எதிர்ப்பில்லாமல் ஆண் மக்கள் நடப்பது உலகத்திலேயே இந்த ஒரு பிரதேசத்தில்தான். தாரேக புருஷர்கள் தங்கள் முகத்தை எந்த உயிர்ப்பிராணிக்கும் காட்டுவதில்லை. தங்கள் தலையை பூராவும் மூடிக் கொண்டிருப்பார்கள். முகத்தில் மூக்கு மட்டும் திரை மூடியிருக்கும். வெளியில் செல்லும் போதும், வீட்டில் இளைப்பாறும் சமயத்தில் கூட ஆடவர்கள் முகத்திரையை எடுக்கக்கூடாது; தூங்கும்போது கூட மூஞ்சி மூடியே இருக்கவேண்டும். பிறபுருஷனோ அல்லது அவன் சொந்த மனைவியோ கூட அவன் முகத்தைப்பார்க்கக் கூடாது.

ஆனால் தாரகமங்கையர்கள் தங்கள் கணவரின் முகத்தைப்பார்க்கும் விஷயத்தைத் தவிர மற்ற இதர விஷயங்களில் தங்களிஷ்டம்போல் சர்வசுதந்தரத்துடன் திரியலாம். ஆனால் புருஷன் குரட்டைவிட்டுத் தூங்கும்போதுகூட அவன் முகத்திரையை நீக்கிப் பார்க்கக்கூடாது. இதை யொட்டிப்பல மூடநம்பிக்கைகளும், பயங்களும் இருப்பதால் எந்தப்பெண்ணும் ஆவல் மிகுதியால்கூட தன்கணவன் முகத்தைப் பார்க்க முயற்சி செய்யமாட்டாள். தாரக

ஸ்திரீகளுக்கு இந்த ஒரு கட்டுப்பாடுதான். இதர விஷயங்களில் எந்ததேசத்திலும், எந்தக்காலத்திலும் அனுபவித்திராத பாத்தியதைகளையும், சுதந்திரங்களையும் இத்தேசத்து மாதர்கள் அடைந்து ஆண்டு அனுபவித்து வருகிறார்கள். தன்கணவனுக்கு உண்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாடுகிடையாது. ஸ்திரீகள் மணம் செய்து கொள்வது புருஷர்களின் நன்மைக்காகவல்ல; தங்கள் சுகத்திற்காகவே. புருஷர்கள் எக்காரணத்தை யொட்டியும் தங்கள் மனைவியரை விவாஹரத்து செய்ய முடியாது. விசுவாசத் துரோகத்துக்காகக்கூட மனைவியை திரஸ்கரிக்கமுடியாது. ஆனால் ஸ்திரீகள் தங்கள் மனதுக்குத் தோன்றியபடி அற்ப விஷயங்களுக்கும் தங்கள் கணவரை ஒதுக்கித் தள்ளி விடலாம். தன் கணவனது உபத்திரவம் தாங்கவில்லை யென்று லேசாகக்கூறி விட்டு அவனை விலக்கித்தள்ளிவிடலாம்.

கல்யாணத்தில் புருஷர்களுக்கு யாதொரு சுதந்திரமும் கிடையாது. ஸ்திரீகளே தங்களுக்கிஷ்டமான ஆடவரைத் தேர்ந்து விவாஹம் செய்து கொள்வார்கள். தனக்கிந்தப் பெண்தான் வேண்டுமென்று ஆண்பிள்ளை சொல்லக்கூடாது. ஆனால் அவன் தான் விரும்பிய பெண்ணைச் சந்தித்துப் பேசலாம். காதல் செய்வது முதலில் ஸ்திரீயே. எந்தயுவன் அல்லது வயோதிகன் தங்களுக்கு வேண்டுமென்பதை அந்தந்த ஸ்திரீயே முடிவு செய்கிறாள். இது விஷயத்தில் தங்கள் பெற்றோரைக்கூட மங்கையர்கள் கலந்து கொள்ளவேண்டியதில்லை. இது அவர்களது தனிப்பட்ட விஷயம்; இதரர்கள் இதில் துளிக்கூடத் தலையிடக்கூடாது. ஆனால் புருஷனின் முகத்தைப்பார்க்காமலேயே தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வாலிபனை மணந்து கொள்வது என்றுமங்கை திடப்படுத்திக் கொண்டபின் அவ்விளநல்லாள் அவனுடைய பெற்றோர்களைச் சந்தித்து தன் அவாவை அவர்களுக்குத் தெரிவிக்கிறாள். புருஷர்களின் முகம் மூடியிருப்பதால், பெண்கள், அவர்களின் அந்தஸ்து, செல்வ நிலை, சாரீரம், பராக்கிரமம் முதலியவற்றை அனுசரித்தே தங்களுக்கு கணவன்மாரைக் கோருகின்றனர். கண்களைமட்டும் பார்க்கின்றார்கள்; நல்ல கருவிழிகள் உள்ள ஆடவர்களையே மாதர்கள் விரும்புகிறார்கள். அவன் அழகானவனா, குரூபியா என்று அவர்கள் கவனிப்பது கிடையாது; ஏனென்றால் தாங்கள் பார்ப்பது மூக்கின் நுனியையும், கண் விழிகளையும் தானே.

விவாகமான பிறகும் கூட பெண்களுக்கு யாதொரு கட்டுப்பாடும் கடமையும் கிடையாது. புருஷன் அவர்களை வைத்துப் போஷிக்கவேண்டியது. இவர்கள் தங்களிஷ்டம்போல் எங்கு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் போய் சுற்றிவரலாம். கேள்வி கேட்பாடு கிடையாது. அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று சொல்ல புருஷனுக்கு யாதொரு அதிகாரமுமில்லை. மனைவியின் உத்திரவுக்கு அடிபணிந்து நடக்க வேண்டியது அவன் முக்கிய கடமை.

தாரகர்கள் நங்கையரின் எழிலை அவர்களது எடையினால் நிர்ணயிக்கிறார்கள். தகப்பன் தன் புதல்வியின் மேலிருக்கும் பிரியத்தை விவாகமாகும் வரையில் அவளுக்கு வேண்டிய நல்லுணவுகளை ஏதேஷ்ட





மாகக் கொடுத்துக் கொழுக்க வைப்பதில் காட்டுகிறான். ரொம்ப அழகான மங்கை நடப்பது கூட சிரமமாயிருக்கும்; அவ்வளவு கொழுத்துப் பருத்திருப்பாள். அவள் அசையக்கூடத் தேவையில்லை. ஏனெனில் அவர்களைத் தூக்கிச்செல்ல டோலிகள் இருக்கின்றன. பணக்காரர்கள் இந்தச் சிவிகைகளைச் சுமக்க அடிமைகளை அமர்த்தியிருக்கின்றனர். ஆனால் அடிமைகளை அமர்த்த சக்தியற்றவர்கள் தங்கள் பெண்களைத் தாங்களே தூக்கிச் சுமக்கின்றனர். புருஷர்கள் ஜீவனத்துக்காக சஹாராப்பாலைவனத்தில் கடும் வெய்யிலில் கஷ்டப்பட்டு வேலை செய்து கொண்டிருப்பார்கள்; ஸ்திரீகளோ வீடுகளில் சங்கீதம், முதலிய கேளிக்கைகளிலும், விளையாட்டுகளிலும் தங்கள் பொழுதை உல்லாசமாகக் கழித்துக்கொண்டிருப்பார்கள். தாரக மங்கையர்கள் இயற்கையில் வனப்பு வாய்ந்தவர்களென்பதில் சந்தேகமில்லை; ஆனால் இவர்கள் அளவுக்குமிஞ்சி 'குறுக்கே வளர்ந்து' விடுகிறார்கள்; அதிக சதைபோட விட்டுவிடுவதால் அவர்களின் அழகு கெட்டுப்போய் விடுகிறது.

தாரகர்களுக்கு கடவுளிடத்து பரிபூரண நம்பிக்கை யுண்டு. சைத்தானும் இருக்கின்றானென்றே நினைக்கிறார்கள். ஆனால் தங்களது நித்தியப்படி வாழ்க்கை முறையை வகுக்கும் சட்டதிட்டங்களும், ஒழுக்க விதிகளும் அவர்களிடம் கிடையாது. அவர்களது பரம்பரையான விதிகள் கீழ்கண்டவைகளே :—

(1) புருஷர்கள் பாடுபட வேண்டும்; ஸ்திரீகள் அனுபவிக்க வேண்டும் (2) உன் முகத்தை ஒரு போதும் ஸ்திரீக்குக் காட்டாதே; அவள் உன் முகத்தைப் பார்த்தால் உடனே உன்னிடம் அவளுக்கிருக்கும் அன்பு போய்விடும். (3) எப்பொழுதும் உன்னாலானதுக்குப் பாதிக்குமேல் செய்து விடுவதாக வாக்குக் கொடுக்காதே. (4) உன்னால் கொடுக்கக் கூடிய சக்திக்குப் பாதிக்குமேல் கடன்வைத்துக் கொள்ளாதே. (5) நீ கடன் தரவேண்டியவனை ஏமாற்றினால் அவன் உனக்குப் பிற்காலத்தில் எவ்வித கஷ்டகாலத்திலும் கூட உதவி புரிய மாட்டான். ஆகையால் மோசம் செய்யக் கூடாது. (6) எப்பவும் ஒரு ஸ்திரீக்காக உன்னையும், உன் மனோதிடத்தையும் பரிகொடுத்து விடாதே. ஆனால் உனக்காக அவள் சகலத்தையும் இழக்கும்வரை காத்திரு.

மேற்சொன்ன புத்திமதிகளை ஒவ்வொரு தந்தையும் தன் புத்திரனுக்கு வற்புறுத்திக் கூறி அதன்படி நடந்து வரும்படி கேட்டுக் கொள்ளுகிறான். எப்பேர்பட்ட சமூகம்!




(முன் தொடர்ச்சி)

“ஏண்டாப்பா, வளர்த்த காளை மாரில் பாய்வது போல் அருமையாக உன்னைப் பெற்றெடுத்து வளர்த்த ஒரே மகனை நீ கூட என்னை எதிர்த்துப் பேசுகிறாயே! இந்த நீலித்தனப் பெண்டாட்டி வந்ததற்கு மேல்தானே உனக்கு இந்தப் பேச்சுகளெல்லாம் தெரிகிறது. இதற்கு முன்பு ஒரு கோடு கிழித்தால் அதைவிட்டுத் தாண்டாத நீ இப்படி மனைவி மோகத்தில் மயங்கி திடீரென்று மாறி விட்டாயே! என்னையும் அந்தக் கிழவரையும் அந்தி காலத்தில் இங்கு தனியே விட்டுவிட்டு உன் பெண்டாட்டியை மதறாஸுக்கு அழைத்துக்கொண்டு போய் தனிக் குடித்தனம் செய்கிறேன் என்கிறாயே. என்ன தைரியம் உனக்கு! இப்பொழுதே சொல்லி விட்டேன்; நீ அந்தச் சிறுக்கியை மதறாஸுக்கு கூட்டிக் கொண்டு போனால் அவள் தலையாலே தான் நடப்பாள். உனக்கு—” என்று இன்னும் மேலே ஏதோ சொல்வதற்குள் ராமச்சந்திரன் தடுத்து “அம்மா, வேண்டாம். நிறுத்து உன் ராமாயணத்தை. வீணை என் பொறுமையை இழக்கும்படி செய்யாதே” என்றுரைத்து விட்டு தன் மனைவியின் இருப்பிடம் சென்றான்.

வஸந்தா மிகவும் சாந்தத்துடன் “நாதா, தாங்கள் இப்படித் தம் தாயின் மீது சினந்து கொள்ளலாமா? வயதானவர்கள் இப்படித்தான் ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள். இதையெல்லாம் நாம் பொருட்படுத்தலாமா?” என்று புகன்றாள்.

“என் கண்மணி வஸந்தா! நான் உன் பெருந்தன்மையான குணத்திற்கு மெச்சினேன். உனக்கு இருக்கும் பொறுமையையும் சாத்வீக குணத்தையும் எவ்வளவு சிரமப்பட்டாலும் என்னால் அடைய முடியாது. உனக்கு கூடிய சீக்கிரம் கடவுள் ஸௌக்கியத்தை அளிப்பார்” என்று சொல்லி தன் பத்தினியை அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டான். பிறகு திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவன் போல் “ப்ரியே, உன் தகப்பனாரிடமிருந்து கடிதம் வந்ததா? உன் தம்பிக்கு உடம்பு எப்படி இருக்கிறதாம்?” என்று கேட்டான்.

வஸந்தா கண்களில் நீர் ததும்ப, “இன்று அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. தம்பிக்கு ஜாஸ்தியாகத்தானிருக்கிறதாம்; பிழைப்பது அரிது என்று டாக்டர் சொல்லி விட்டாராம். அவன் ஆகாரத்திற்கு பாலும் ரொட்டியும் வாங்கிக் கொடுப்பதற்கு கூட கையில் பணமில்லை என்று அப்பா எழுதியிருக்கிறார். யாரைக் கெஞ்சினாலும் ஒரு இரண்டணாக் கூடக்கொடுக்க மறுக்கிறார்களாம். இது போதாமல் கடன்காரர்கள் வேறு ஹிம்சை செய்கிறார்களாம்” என்று சொல்லி தேம்பித் தேம்பி அழுதாள்.



ராமச்சந்திரன் அவளைத்தேற்றி சமாதானம் செய்து, “என் அன்பே, நாம் இருவரும் இன்று சாயந்திரமே உன் பெற்றோர்களிடம் சென்று அவர்கள் நிலமையை நேரில் கண்டறிந்து நம்மாலான உதவியைச் செய்வோம். நீ அழுவதைக் காண என் மனம் சகிக்க வில்லையே” என்றான்.

நிற்க, ராமச்சந்திரன் இஞ்சினீயரிங் பரிக்ஷையில் தேறியவுடன் அவனுக்கு ரயில்வே இலாகாவில் வேலை ஆகி இப்பொழுது மாதம் 150 ரூபாய் சம்பளம் பெற்று மதறாவில் இருந்து வந்தான். அவன் பூதலூருக்கு, பத்து நாட்கள் ரஜா எடுத்துக்கொண்டு வந்திருந்த பொழுதுதான் மேற் சொன்ன சம்பவங்கள் நடந்தன.

நடேசய்யர் வீட்டில், ஒரு பாயின் மீது தனது எட்டு வயது மகனை கிடத்திக்கொண்டு கண்ணும் கண்ணீருமாய் உட்கார்ந்திருந்தாள் மீனாக்ஷி அம்மாள். அந்தப் பிள்ளையின் உடம்பில் அஸ்திதான் இருந்ததால் அவனைப்பார்த்தால் ஏதோ நீடித்த வியாதியினால் துன்புறுபவன் போல் தோன்றினான்.

“ஐயோ, என் மூடத்தனத்தை நான் யாரிடம் போய்ச்சொல்லிக் கொள்வேன். நாங்கள் வாயை ஒடுக்கி வயிற்றை ஒடுக்கிச் சிறுகச் சிறுக சேர்த்து வைத்திருந்த சொற்ப ஐவேஜையும் வஸந்தாவின் கல்யாணத்திற்காக சிலவழித்தது மன்னியில் கடன் வேறு வாங்கி வரதக்ஷிணைக்காகக் கொட்டிக்கொடுத்து, இப்பொழுது கடன் காரர்களினால் நாலா பக்கங்களிலிருந்தும் நெருக்கப் படுகிறோமே! அடகு வைத்திருந்த நகைகளும் முழுகிப் போய்விட்டன. வாங்கிய முதலுக்கு மேல் வட்டி ஏறி விட்டது. இப்பொழுது சாப்பாட்டிற்கு கூட இல்லாமல் எல்லோரும் கஷ்டப்படுகிறோமே. என் குழந்தைக்கு சரியான வைத்தியம் பார்க்கவும், வேண்டிய ஆகாரம் வாங்கிக் கொடுப்பதற்கும் கூட என் கையில் ஒற்றைக் காசு இல்லையே! இன்றோ நாளையோ வீட்டை ஜப்தி செய்ய வந்து விடுவார்களே. குடிக்கக் கஞ்சி இல்லாமல் போனதுமல்லாமல் நிற்க நிழலும் இல்லாமல் போய் விடுமே! ஈசா! இவை எல்லாம் என்னால் வந்தவை தானே. பெண் புத்திபின் புத்தி என்பது என் விஷயத்தில் சரியாக இருக்கிறது. நான் என் கணவனை தூண்டி வஸந்தாவின் கல்யாணத்தை எவ்விதமாவது கூடிய சீக்கிரம் முடித்து வைக்காவிடில் நான் அவமானத்தில் இறந்து விடுவேனென்று சாகஸம் செய்தேனே! ஊரார் வாய்க்கு பயந்து தானே நான் இப்படிச்செய்ய நேரிட்டு இக் கதிக்கு ஆளானேன். அந்த ஊரார் இப்பொழுது என் கஷ்டகாலத்தில் எனக்கு உதவி செய்ய முன் வருகிறார்களா?” என்றிவ்வாறு தனக்குத்தானே புலம்பிக்கொண்டிருந்தாள் மீனாக்ஷி அம்மாள்.

படுக்கையிலிருந்த அவள் பிள்ளை மெதுவாகக்கண்களைத் திறந்து ஹீனஸ்வரத்தில் “அம்மா, நான் செத்துப் போய் விடுவேனா? நீ ஏன் அழுகிறாய்?” என்று கேட்டான்.

அந்த சமயத்தில் நடேச அய்யர் கச்சேரியிலிருந்து வீட்டிற்கு வந்தார். “குழந்தைக்கு எப்படி இருக்கிறது உடம்பு?” என்று கேட்டார்.

“எப்படி இருக்கிறதென்ன? எல்லாம் ஒரே மாதிரிதான்” என்று சலிப்புடன் பதிலளித்தாள் மீனாக்ஷி அம்மாள்.

இத் தருணத்தில் அவர்களுடைய இரண்டாவது மகன் உள்ளே ஓடோடி வந்து “அப்பா உன்னை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்று நான்கைந்து மனிதர்கள் வீதியில் வந்திருக்கிறார்கள்” என்று கூறினான்.

இவன் இவ்வார்த்தைகளைச் சொல்லி முடிக்குமுன் அம்மனிதர்களே உள்ளே ‘தட தட’ வென்று நுழைந்து நடேச அய்யரை நோக்கி, ஒரு மனிதர் “ஐயா, நீங்கள் கொடுக்க

வேண்டிய கடனுக்காக உங்கள் வீட்டை ஜப்தி செய்ய வாரண்ட் கொண்டு வந்திருக்கிறோம்" என்று வாரண்டை நீட்டினர்.

இவ்விதச் சம்பவம் தம்பதிகளால் ஒவ்வொரு நிமிஷமும் எதிர் பார்க்கப்பட்டதாக இருந்தாலுங் கூட அத்தருணத்தில் அவர்களிருவரும் மனங் கலங்கி தவித்தனர். நடேச அய்யர் சில விநாடிகளில் சற்று சுதாரித்துக் கொண்டு "ஐயா, தற்சமயம் தயவுசெய்து நீங்கள் ஒன்றும் கலாட்டா செய்யாமலிருக்கும்படி உங்களை ரொம்பவும் கேட்டுக்கொள்ளுகிறேன். என் குழந்தை உயிருக்கு எமனுடன் போராடிக் கொண்டிருக்கிறது. நீங்கள் வீட்டை ஜப்தி செய்வதை இன்னும் இரண்டு தினங்களுக்கு அப்பால் ஒத்தி வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு ரொம்பவும் புண்ணியம் உண்டு" என்று கல்லும் கரையும்படி ப்ரார்த்தித்தார்.

இம்மனிதர்களில் மிகவும் முறட்டு சுபாவமுள்ள ஒருவர் "அதெல்லாம் முடியாது. இது கோர்ட் சமாசாரம். நாங்களாகச் செய்வது ஒன்றுமில்லை. உங்கள் சாமான்களை எல்லாம் இப்பொழுதே பரிமுதல் செய்கிறோம். வீட்டை வேண்டுமானால் பிற்பாடு ஏலம் போடுகிறோம்" என்றான்.

இதே சமயத்தில் பூதலூரிலிருந்து வந்த வஸந்தாவும் ராமச்சந்திரனும் உள்ளே நுழைந்தனர். மீனாக்ஷி அம்மாள் மகளைக்கட்டிக் கொண்டு துயரமும் அவமானமும் தாங்காமல் கதறினாள்.

தன் தாயின் பிடியிலிருந்து மெதுவாக விடுவித்துக்கொண்டு வஸந்தா தன் சகோதரன் படுத்திருந்த இடம் சென்று அவனை அன்புடன் தடவினாள். அவனும் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்து "அக்கா" என்று கூறி ஆயாசத்துடன் மறுபடியும் கண்களை மூடிக் கொண்டான்.

இதற்குள் நடேச அய்யர் மாப்பிள்ளையை ஒரு புறம் அழைத்துச் சென்று, தன் வீட்டை ஜப்தி செய்ய அவர்கள் வாரண்ட் கொண்டு வந்திருப்பதையும், தான் மொத்தம் எவ்வளவு தொகை கடன் காரர்களுக்கு கொடுக்கவேண்டுமென்பதையும் சுருக்கமாக தெரிவித்தார்.

உடனே ராமச்சந்திரன் அவ் உத்தியோகஸ்தர்களுக்கு சைகை காட்டி வீதிப்புரம் அழைத்துச்சென்று ரகஸ்யமாய் ஏதோ உரைத்தான். அவர்களும் சற்று அதிருப்தியான முகத்துடன் தயங்கித் தயங்கி கடைசியில் அவ்விடத்தை விட்டகன்றனர்.

ராமச்சந்திரன் பிறகு தன் சிறிய மைத்துனன் படுத்திருக்கும் இடத்திற்கு வந்தான். திடீரென்று அப்பிள்ளை ஒரு பயந்த கூச்சல் போட்டு, "அம்மா, அதோ யாரோ என்னைக் கூப்பிடுகிறார். நான் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே உயிர் நீத்தான். பெற்றவர்கள் மனம் பட்டபாடு விவரிக்க இயலாது. வஸந்தாவின் இன்னொரு சகோதரனும் சகோதரியும் தேம்பித் தேம்பி அழுதனர். மீனாக்ஷி அம்மாள் துக்கம் தாளாமல் அடிக்கடி மூர்ச்சையானாள். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் திரும்பி வருவாரோ? வஸந்தா பொறுமை யுடனிருந்து தன் தாயை சமாதானப் படுத்த முயன்றாள்.

ராமச்சந்திரன் பிற்பாடு ஆகவேண்டிய காரியங்களுக்கு ஏற்பாடு செய்து எல்லாவற்றையும் திருப்திகரமாக முடித்துவைத்தான்.

ஹா! என்னே வரதக்ஷிணையின் கொடுமை! ஹிந்து சமூகத்தை பாழ்படுத்தும் கருத்துடன் முளைத்திருக்கும் இத்தீயவழக்கம் எவ்வளவு குடும்பங்களுக்கு தீராகஷ்டங்களையும், அவமானங்களையும் உண்டாக்குகின்றது. உயர்தர நோக்கங்களைக் கொண்ட விவாக சமஸ்காரத்திற்கு புல்லுருவியாக நிற்கும் இக்கொடிய பழக்கம் அறவே ஒழிந்தால் நம் சமூகத்திற்கு





அளவற்ற க்ஷேமம் உண்டாகும் என்பதை மறுப்பவரும் உண்டோ? கொஞ்சம் ஐவேஜ் உள்ளவர்கள் என்னவோ அதிக சிரமம் இல்லாமல் வரதக்ஷிணை கொடுத்து விடுகிறார்கள். ஆனால் நடேச அய்யரைப் போன்ற எளியவரும் ஸம்ஸாரியுமான வர்களின் கதி என்ன!

மேலே கூறப்பட்ட சம்பவங்கள் நடந்தேறி நான்கு வருஷங்கள் ஆயின. நடேச அய்யரும் அவர் குடும்பத்தினரும் இப்பொழுது மதராஸிலேயே வசித்து வந்தனர். நடேசய்யரின் அதிர்ஷ்ட வசத்தினாலும், அவர் மாப்பிள்ளையின் பிரயத்தனங்களினாலும், அவருக்கு சென்னையில் ஒரு கம்பெனியில் 60 ரூபாய் சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்தது. மீனாக்ஷி அம்மாள் இப்பொழுது தனது இரண்டாவது மகள் மரகதத்திற்கு பதினைந்து வயது பூர்த்தியாகியும் கூட விவாகம் செய்ய வேண்டுமே என்று எண்ணவே இல்லை. மரகதம் ஐந்தாம் பாரத்தில் வாசித்து வந்தாள்.

நடேச அய்யர் வேலையையுமிழந்து ஜெயிலுக்குப் போகும்படியான நிலைமையிலிருந்து தப்பி இப்பொழுது கௌரவமான வாழ்க்கையை நடத்துவதற்கு காரணம் சற்குணசீலனான ராமச்சந்திரனின் பேருபகாரமே. ராமச்சந்திரன் இப்பொழுது ரயில்வே உதவி இஞ்சினீயராக வேலை பார்த்து மாதம் 300 ரூபாய் சம்பளம் பெற்று வருகிறான். தன் மாமனார் பொருட்டு சுமார் 2000 ரூபாய்கள் தன் சிநேகிதர்களிடமிருந்து கடன் வாங்கி அவருக்கு உதவிசெய்து அவர் மானத்தை காப்பாற்றி கஷ்டங்களை நிவர்த்திசெய்த புண்ணிய சீலன் ராமச்சந்திரனே. தன் சம்பாத்தியத்திலிருந்து அக் கடனை இப்பொழுது ராமச்சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாய் அடைத்து வந்தான். முன்பு ஒரு ஸமயம் வஸந்தாவின் கல்யாணமானவுடன் நடேச அய்யருக்கு அனாமதேயமாய் மூன்னூறு ரூபாய்கள் அனுப்பப்பட்டது ராமச்சந்திரனால்தான். இவ்வுண்மையை பிற்காலத்தில் அறிந்த நடேச அய்யரும் மீனாக்ஷி அம்மாளும் தம் மாப்பிள்ளையை அவதார புருஷன் என்று கொண்டாடினார்கள். (வரதக்ஷிணைக்காக ஏராளமாக சிலவழித்துவிட்டு பிற்காலத்தில் தவிக்கும் ஒவ்வொரு மாமனாருக்கும் ராமச்சந்திரன் போன்ற மாப்பிள்ளை கிடைக்கப் பெறுவது அசாதாரணமல்லவா? தற்காலத்தில் நாம் கண்கூடாய் பார்க்கும் மாப்பிள்ளைகள், மாமனார்களிடமிருந்து கரப்பதெல்லாம் ஒட்டக் கரந்துவிட்டு அவர் கஷ்டப்படும் காலத்தில் அவரை கண்ணெடுத்து பார்ப்பதும் அகௌரவம் என்ற நோக்கமுடையவர்களாகவல்லவா இருக்கிறார்கள். மாப்பிள்ளைகளே, நீங்களே யோசித்துப் பாருங்கள். நான் கூறுவதில் எள்ளளவேனும் பொய் இருந்தால் அதை மறுப்பதற்கு முன் வாருங்கள்.)

"அப்பா, நீ எங்களுக்குச் செய்திருக்கும் அபாரமான உதவிகளுக்கு நாங்கள் ஈடுபண்ண எந்த விதத்தில் முடியும்?" என்று நடேச அய்யர் தன் மாப்பிள்ளையை நோக்கி கேட்டார்.

ராமச்சந்திரன் மந்தஹாஸ முகத்துடன், "மாமா, நான் தங்களுக்கு உதவிசெய்வதற்கு முந்தியே நீங்கள் எனக்கு ஒரு மதிப்பிலடங்கா சன்மானத்தை அளித்திருக்கிறீர்களே. அச் சன்மானத்திற்காக நான் என்னாலான சிறிய உதவிகளை உங்களுக்கு அளித்தேன் என்று வைத்துக்கொள்ளுங்களேன்" என்று பதிலளித்தான்.

"அப்படிப்பட்ட சன்மானம் நான் உனக்கு ஒன்றும் கொடுக்கவில்லையே" என்று ஆச்சர்யத்துடன் புகன்றார் நடேச அய்யர்.

"உண்மை இல்லையா? விவேகமும் நற்குணங்களும், அழகும் ஒருங்கே அமைந்த தங்கள் பெண் வஸந்தாவை எனக்கு ஜீவியத் துணைவியாக கொடுக்கவில்லையா? இவ்வளவு பெரிய ஒப்பற்ற வெகுமதிக்கு நான் தங்களுக்கு ஒருவிதத்திலும் பூர்த்தியாக ஈடுபண்ண

முடியாது" என்று புன்னகையுடன் ராமச்சந்திரன் சொன்னான்.

இதைக்கேட்டுக் கொண்டு, இடுப்பில் தன் குழந்தையை எடுத்துக்கொண்டு உள்ளிருந்து வந்த வஸந்தா சற்று கோபமும் வெட்கமும் கலந்த சிரிப்புடன் ராமச்சந்திரனை நோக்கி, "போங்கன்னா! பேச்செடுத்தால் என்னைப் புகழுவதுதான் உங்களுக்கு வேலை. நான்என்ன அப்படி பாராட்டத்தக்கவளா? என்றாள்.

"ஆம் நீயும் உன்குணங்களும் பாராட்டத்தக்கவைகள் தான். இதில் ஒரு சந்தேகமும் இல்லை" என்று அழுத்தம் திருத்தமாய் விடை பகர்ந்தான் ராமச்சந்திரன்.

இப்பொழுது ராமச்சந்திரனின் பெற்றோர்களும் பிள்ளையிடமே வசித்து வருகின்றனர். வஸந்தாவின் நற்காலம் இப்பொழுது அவளுடைய மாமியார் ரொம்பவும் ஸாதுவாகி விட்டாள். "என்நாட்டுப் பெண்ணின் அதிர்ஷ்டம் என்பிள்ளைக்கு ரொம்பசீக்கிரம் பெரிய வேலை ஆகிவிட்டது" என்று எல்லோரிடமும் பெருமை பீற்றிக் கொள்ளுவாள். இப்பொழுது அவள் நடந்துகொள்வதைப் பார்த்தால் இவளா ஒரு சமயம் தன் நாட்டுப் பெண்ணை கஷ்டப்படுத்தினாள் என்று ஆச்சர்யப் படுவீர்கள்.

பொன்னுஸாமி அய்யருக்கோ தன் மகன் கடன்வாங்கியாவது நடேச அய்யருக்கு உபகாரம் செய்தது பற்றி இப்பொழுதும் வருத்தம் தான். ஆனால் அவர் அதை வெளிக்குக்காட்டிக் கொள்ளாமலிருந்தார். நடேச அய்யரை பார்க்கும் போதெல்லாம் அவர்முகம் ஏதோ குற்றம் செய்தவர்போல் மாறிவிடும்.


வஸந்தா சீர்திருத்த வேலைகள் பல துறைகளில் செய்து வருகிறாள். இப்பொழுது அவள் "வரதக்ஷிணைப்பேய்" என்ற ஒரு சிறிய நாடகம் எழுதியிருக்கிறாள்.

∴ சுபம். ∴





"உல்லாச மஞ்சம்"



"இந்த ஜோடிப்பு எப்படி?"



# மலேரியா ஜுரம்

## (MALARIAL FEVER)

திரு. டி. கே. கோவிந்தய்யர்

### இந்தியாவில் மலேரியா

உஷ்ண பிரதேசங்களில், மலேரியா என்னும் விஷ ஜுரம் மற்ற வியாதிகளைக் காட்டிலும் விசேஷித்துப் பரவி வருகிறது. அந்த ஜ்வரத்தினால் மனிதர்க்கு மரணம் உடனே நேரிடாமற் போன போதிலும், அந்நோவால் பீடிக்கப்பட்டு வருந்துபவர்களின் சங்கியை அதிகரித்துக் கொண்டு வருகிறது. நம் இந்தியா தேசத்தில் மட்டும், ராஜாங்கத்தாரின் கணக்கின் படிக்கே வருஷம் ஒன்றுக்கு மலேரியா ஜ்வரத்துக்கு 1,150,000 பேர்கள் இரையாகிறார்கள். மற்ற தொத்து வியாதிகளைப் போல் அல்லாமல், இந்த ஜுரம் ஓரிடத்தில் பரவ ஆரம்பித்தால், அவ்விடத்திலேயே குடிகொண்டு விடுகிறது. செழிப்பான இடங்களில் விவசாயம் ஆரம்பிக்கிற காலத்தில், இந்த வியாதியும் செழிக்க ஆரம்பிக்கிறது. ஆனால், வைத்தியர்களுடைய ஆராய்ச்சிகளுக்கும், மருந்துகளுக்கும் பிடிபடாமல் ஜனங்களை வருத்தும் சில தொத்து நோய்களைப்போலன்றி, இந்த ஜ்வரம் வைத்தியர்களுடைய ஆராய்ச்சிக்கும், சிகித்ஸைக்கும் கட்டுப்பட்டு விட்டதும் நம்மவர்களுடைய நல்லதிர்ஷ்டந்தான் என்று சொல்ல வேண்டும்.

### மலேரியாவின் பூர்வ சரித்திரம்

மலேரியா ஜ்வரம் சமீப காலத்தில் திடீரென்று கிளம்பிய வியாதியல்ல. கிரீஸ், இடாலியா, முதலிய தேசங்களில் சுமார் இரண்டாயிர வருஷங்களுக்கு முன்னமே இது குடி கொண்டிருந்ததாகத் தெரிய வருகிறது. அந்த வியாதியைப் பற்றிய பரிசோதனைப் பரீக்ஷைகள் சுமார் 35 வருஷங்களுக்கு முன்னால் தான் ஆரம்பம். ஆனால் 1640ம் வருஷத்தில் "கொயினா" என்று சாதாரணமாய் நாம் இப்பொழுது வழங்குகிற, "க்வினின்" (Quinine) எடுக்கப்படுகிற "சின்கோனா" பட்டையை அமெரிக்கா கண்டத்தில் "பெரு" (Peru) தேசத்து ராஜப்பிரதிநிதியாகியவரின் மனையாட்டி (Countess d'El Cinchon) சின்கன் பெருமாட்டி, தான் வருந்திய ஜ்வரத்துக்கு மருந்தாக உபயோகித்ததின் காரணமாக மேற்படி பட்டையை ஐரோப்பாவுக்கு அனுப்பி வைத்ததாகவும், ஆனால் 1820ம் வருஷத்தில் தான் மேற்படி பட்டையிலிருந்து "கிவினின்" என்கிற மருந்து எடுக்கப்பட்டதாகவும், நீடித்த ஆராய்ச்சி செய்து மலேரியா ஜ்வரத்தின் அம்சங்கள் எல்லாவற்றையும் கண்டு பிடித்த (Sir Ronald Ross) ராஸ் என்னும் வைத்திய சிரோமணி எழுதி வைத்

திருக்கிறார். அவருடைய ஆராய்ச்சிகளின் பலனாக நாம் இப்பொழுது மலேரியா ஜ்வரத்தைப் பற்றிய விஷயங்கள் எல்லாவற்றையும் அறிய முடிகிறது.

## மலேரியாவுக்குரித்தான இடம்

சாதாரணமாக அந்த ஜ்வரம் உஷ்ண பிரதேசங்களிலெல்லாம் வியாபித்திருக்கிறது. கோடை காலத்தில் மழை பெய்த பின் நீர் பிடிப்பினால் ஈரங்காத்திருக்கிற பூமிகளின் சமீபத்தில் மிகுதியும் உண்டாகின்றது.

## மலேரியா பூச்சிகள் பரவும் விதம்

கண்ணுக்குப் புலப்படாமல் அணுப்பிரமாணமாயிருக்கிற ஆயிரக்கணக்கான பூச்சிகள் மனிதருடைய இரத்தத்தில் வந்து சேருவதினால் மேற்படி வியாதி உண்டாகிறது. இப்பூச்சிகள் நம்முடைய இரத்தத்துக்குள் போய்ச் சேரும்படி செய்கிறது, நம்முடைய கண்களுக்குப் புலப்படக்கூடிய ஒருவகைக்கொசு என்று பரிசோதனை மூலமாய்க் கண்டு பிடிக்கப்பட்டு, எல்லோராலும் இப்போது ஒப்புக்கொள்ளப்பட்டுமிருக்கிறது. "அனோபிலிஸ்" (Anophels) என்று சொல்லப்படும் இந்த கொசு, மனிதர்களைக் கடித்து இரத்தத்தைக் குடித்து வளருகிற தன்மையுடையது. மலேரியா ஜ்வரத்தில் வருந்தும் ஒருவனைக் கடித்து இரத்தத்தை உறியும்போது அவ்விரத்தத்திலுள்ள மேற்படி ஜ்வரத்துக்குக்காரணமான பூச்சிகளையும் அது குடித்து விடுகிறது. இப்பூச்சிகள், கொசுவின் வயிற்றுக்குள் புகுந்தவுடன், சில மாறுதல்களையடைந்து, அக்கொசுவின் தொண்டைக்குத் திரும்பி வந்து சேருகின்றன. அக்கொசு மறுபடி இன்னொருவனைக் கடித்து இரத்தம் குடிக்கும்போது, மேற்படி பூச்சிகளை அம்மனிதனுடைய இரத்தக்குழாய்களில் செலுத்தி விடுகின்றது. அப்படிச் செலுத்தப்பட்ட பூச்சிகள் முதலில் சில நூறுகளாய் மட்டுமிருந்தாலும் விருத்தியடைந்து ஆயிரக்கோடிக் கணக்காகக் குஞ்சு பொரித்து விடுகின்றன. மனிதருடைய இரத்தக் கால்வாய்களில் செலுத்தப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் ஒவ்வொரு மலேரியாப் பூச்சியும் ஒவ்வொரு சிவப்பு கார்பஸ்ல் (Red Corpuscle) என்று சொல்லப்பட்ட இரத்தரேணுவில் நுழைந்து, அதையே புசித்துக்கொழுத்து வளருகிறது. நன்றாய்க் கொழுத்தவுடன் அந்தப்பூச்சி ஆயிரக்கணக்காகக் குஞ்சு பொரிக்கிறது. ஒவ்வொரு குஞ்சும், மறுபடி முற்கூறிய மாதிரியே ஒவ்வொரு இரத்த ரேணுவில் நுழைந்து, வளர்ந்து கொழுத்தவுடன் குஞ்சு பொரிக்கிறது என்றால், ஒரு மலேரியாப்பூச்சியைத் தன் இரத்தத்தில் வரவேற்ற மனிதன், வெகு சீக்கிரத்தில் தன் இரத்தரேணுவின் சத்து முழுவதையும் உறிந்து விடக்கூடிய எவ்வளவு கோடி பூச்சிகளைத் தன் உடம்பில் வளரச் செய்து கொள்ளுவானென்பதை இதைப் படிக்கும் சகோதரிகளே தெரிந்து கொள்ளலாம்.

## மலேரியா ஜ்வரம் உண்டாகிற விதம்

முதலில் கொசுக்கடியால் இரத்தத்தில் புகுந்த பூச்சிகள் எல்லாம், ஒரே சமயத்தில் குஞ்சு பொரிக்க வாரம்பிக்கின்றன. இந்தக் குஞ்சுகள் பொரிக்கப்பட்டு இரத்த ஓட்டத்தில் கலக்கிற சமயத்தில் தான்





குளிருடன் ஜ்வரமும் ஆரம்பிக்கின்றது. இந்தப் பூச்சிகளால் விடுவிக்கப்பட்ட விஷம், இரத்தத்தில் சம்பந்தமடைவதால்தான் ஜ்வரம் சரீரத்தை விட்டு, வியர்வை, மூத்திரம், முதலியவை வழியாக வெளிப்போந்த பிறகு, ஜ்வரமும் விடுகிறது. சாதாரணமாகச் சுமார் ஆறு மணி நேரத்துக்கு மேல் நாற்பது மணி நேரத்துக்குள் அவ்விஷம் தேகத்தைவிட்டு வெளியாகிறது. இந்த நாற்பது மணி நேரத்துக்குள்ளேயே மேற்படி பூச்சிகளுடைய இரண்டாவது தலைமுறைச்சந்ததிகள் வெளிப்பட்டுவிட்டால், புதிதாகவிஷம், இரத்தத்தில் கலக்கவிடப்பட்டு, ஜ்வரம் விடாமல் அடிக்கிறது.

## ஜ்வரக் கட்டி

இந்தப்பூச்சிகள், ஜ்வரத்தை உண்டாக்குவதுடன், மருந்து முதலியவைகளால் கண்டிக்கப்படா விட்டால், இரத்தமில்லாமை அதாவது சோகை (Anaemia) ஜ்வரக்கட்டி (Enlarged Spleen) முதலிய கொடிய ரோகங்களையும் உண்டாக்கிப் பிராண ஹானியையும் விளைவிக்கும்.

## மூன்று விதமான பூச்சிகள்

இப்பூச்சிகளிலும் குறைந்தது மூன்று விதம் இருக்கிறதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மூன்று நாளைக்கொரு தரம் முறைக் காய்ச்சல் உண்டாக்குகிற (நாலா முறை ஜ்வரம்) (Quartan) பூச்சி. ஒன்று விட்டொரு நாள் குஞ்சு பொரித்து முறை ஜ்வரம் (மூன்றும் முறை ஜ்வரம்) உண்டாக்குகிற (Tertian) பூச்சி. தினசரிக் குஞ்சு பொரித்து முறை ஜ்வரம் (விடா முறை ஜ்வரம்) மனிதரைத் தினந்தோறும் வருத்துகிற ஜ்வரத்தின் (Malignant) பூச்சி.

மேற்கூறிய ஜ்வரங்களில் யாதொன்றில் வருந்துகிற ஒருவனுடைய இரத்தத்தில் ஒரு துளி எடுத்து மற்றொருவன் இரத்தத்தில் ஊசி வழியாகக் குத்தி (Injection) ஏற்றினால் பிற்கூறியவனும் வெகு சீக்கிரத்தில் அதே ஜ்வரத்தினால் வருந்துவதைப் பார்க்கலாம். ஆகையால் இந்த ஜ்வரம் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவுந் தன்மையது. ஆனால் அப்படிப் பரவச் செய்ய, மத்தியில் அனோபிலிஸ் என்ற கொசு இருந்தே தீரவேண்டும்.

அனோபிலீஸ் கொசுவைக் கண்டுபிடிப்பது எளிது. இந்த மலேரியாக் கொசு கறுப்பும், வெளுப்பும் கலந்த கட்டங்கட்டமாக இருக்கும். இதனுடைய சிறகுகளில் முன் பக்கத்தில் மூன்று அல்லது நான்கு கறுப்புப் புள்ளிகள் இருக்கும். இந்தக்கொசு புல், கோரை, மண் பள்ளங்கள், அனாஸ் செடி, தாழஞ்செடி, மழை ஜலம் தேங்கியிருக்கிற புல் தரைகளில் குஞ்சு பொரித்து வளரும்.

## மலேரியாவுக்குத் தகுந்த சிகித்ஸை

மலேரியாவுக்குத் தகுந்த குணமளிக்கும் மருந்து மிகப் பிரசித்திபெற்ற கேஸரி குடீரத்தில் இருக்கிறது. "அர்க்கா" (Arka) என்ற பிரஸித்திபெற்ற மருந்தேயாகும். இம்மருந்து மலேரியா நோயாளியை குணப்படுத்துவதில் மிகச்சிறந்தது. இந்த "அர்க்கா" மருந்தையுட் கொண்டு மலேரியா சொஸ்தப் பட்டவுடன் கேஸரி குடீரத்தின் மற்றொரு பிரஸித்தி பெற்ற

"அமிருதா" (Amrita) என்ற டானிக்கை சாப்பிட மலேரியா வருவதற்கு முன்னிருந்ததை விட அதிக பலமும், தேஜஸும், புத்தி கூர்மையும் உண்டாகின்றது. இது எனது சொந்த அநுபவம். எனக்கு அடிக்கடி மலேரியா வரும். அநேக மருந்துகள் உபயோகித்துப் பார்த்தேன்; தற்கால சாந்தியே ஏற்பட்டது. பிறகு டாக்டர் திருவாளர் K. N. கேஸரி அவர்களின் அர்க்காவையும் அமிருதாவையும் உபயோகித்தேன். ஒன்றரை வருடமாகிறது எனக்கு மலேரியா இல்லை. நான்நல்ல திறமையுடனே தானிருக்கிறேன். மலேரியாவுக்கு "கொய்னா" என்ற மருந்து குணம் கொடுக்கும் என்று சொல்லக் கூடுமாயினும் அதனால் பூர்ணகுணம் ஏற்படுவதில்லை. செவியும் மந்தமாய்விடுகிறது.

## ஜ்வரம் அணுகவொட்டாமல் தடுக்க சில ஏற்பாடுகள்

இந்த மலேரியா ஜ்வரத்தை அணுகவொட்டாது தடுக்க முயற்சி செய்வது அவசியமும் சுலபமானதுமாகும். முக்கியமாக,

1. வீட்டைச் சுற்றி ஜலம் தேங்காமல் செய்யவேண்டும்.

2. அப்படிச் செய்ய முடியாமற்போன காலங்களில் தேங்கி நிற்கிற ஜலத்தில் மண்ணெண்ணை அல்லது பெனயிலை ஊற்றிக் கொசுக்களைச் சாகடிக்க வேணும்.

3. கூடுமாயின் கொசுவலை வாங்கி உபயோகப்படுத்த வேண்டும்.

4. எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும்.





# பெண்ணுலகு!

"பட்டோன்"

குங்குமத்தை வாரி இறைத்தது போன்ற செவ்விய மேகங்கள்! பொன் நிறப்போர்வையைப் போற்றிக்கொண்ட மாலை! கள்ளவிழும் பூந்துகளை அள்ளிவரும் தென்றல்! ஒள்ளிய நல்லோடைகளின் தெள்ளுதமிழோசை! வெள்ளிய மணற்பரப்பு! துண்டைவிரித்துத் துவண்டு வீழ்ந்தேன்! கதிரோன் கடலில் மூழ்கினன்! சொக்க வெள்ளிப்பொற்குடமோ வென, வட்டமதி வந்தது! வயிரக்குப்பைகள் வானெங்கும் மின்னின! ஏகாந்த இருக்கை! ஏகமனது!

அடியேன் முன்னே அழகுமின்னற்
கொடியே போன்ற கோதை வந்தாள்!
தமிழின் தெய்வம் தண்ணொளித்தாயார்!
அமிழ்தின் ருசியை அருமையா யேற்று!
கரங்கள் கூப்பிக் காக்ஷி வியந்து
சிரமே பணிந்து சிறுவன் நின்றேன்!
செந்தமிழ் விரும்பு சின்னக் குழந்தாய்!
எந்தனை நீயே எண்ணி எண்ணி
வந்தனைபுரிந்த வனப்புகண்டேன்
ஊனக்கண்ணை ஒளித்து விட்டேன்
ஞானக்கண்ணால் ஞாலம் பாராய்!
என்றேசொல்லி எழிலுறு உலகை
நன்றேகாட்ட நானுங் கண்டேன்
பெண்கள் தெய்வம்! பெண்கள்ளரசு!
பெண்மை வீரம்! பெண்ணமைச்சு!
மாதரறங்கள்! மாக்ஷிகளுற்றன!
காதலரின்பம்! கவர்ச்சிதந்தன!
கல்விச்செல்வக் கவிதைக்கலைகள்!
நல்லிசைத்தாளம் நடன ஓவியம்!
பற்பலகற்றுப் பரிதியொளியாய்
பொற்கொடியார்கள் பூவில்வாழ
பாலியமணமே பார்க்கக்கிடையா!
தாலியறுக்குந் தற்குறி இல்லை!
விதவையென்ற விளம்பரமில்லை!
கதவுக்குள்ளே கன்னிகளில்லை!
சுதந்தரமாதர் சுத்தானந்தம்!
இதமுடன்வீசு இன்னொளியுலகு!
கண்டேனங்கே! கண்டேனங்கே!
கொண்டேனுவகை! கொண்டேனுவகை!
பழையவுலகு பட்டென மனதில்
நுழைய வந்த நுகர்ச்சி பெற்று
அடிமை வாழ்வு அவனிகண்டு
துடித்தே மனது தூய உலகின்
இன்பவாழ்வு இங்கே வரவே
அன்பாயருளும் அன்னையை நினைக்க
எக்கமுறுதே ஏழைப்பெண்கள்
சீக்கிரத்தில் சிறப்புற வாழ்வர்!
நிசமே இதுவே நிச்சயமென்று
அசரீயாக அன்னை மறைந்தாள்!

## சமையல்

# பலாப்பழ பக்ஷணங்கள்

"ஜனககுமாரி"

பலாப்பழ பக்ஷணங்கள் என்றால் தமிழ் நாட்டிலுள்ள சகோதரிகளுக்கு வியப்பாகத் தோன்றும். பலாப்பழத்தில் கூடவா பக்ஷணங்கள் என்பார்கள். பலாப் பழத்தில் பக்ஷணம் செய்யும் முறை பாலக் காட்டாருக்குத் தான் தெரியும். அதை செய்து தமிழ் நாட்டாருக்குக் கொடுத்தால் சொட்டாங் கொட்டிக் கொண்டு நன்கு திங்கத்தான் தெரியும். ஆகவே இங்கு பலாப்பழத்தில் செய்யும் சில பக்ஷணங்களை எழுதுகிறேன்.

### அல்வா

பலாப்பழ அல்வா செய்வதற்கு நல்ல பழுத்த நாரில்லாத பலாப்பழம் ஒன்றும், வெல்லமும், நெய், ஜாதிக்காய், ஏலக்காய், ஜாதிபத்திரி, குங்குமப்பூ மிந்திரிப்பருப்பு, பாதாம் பருப்புக்களும் வேண்டும். முதலில் பலாப்பழத்தை துண்டு துண்டாக வெட்டி, சுளை, சுளையாக எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு அருமாமணையில் ஒவ்வொரு சுளையையும் சிறிதாக (மூன்றாக) நறுக்கி நல்ல கைக்காத வெங்கல உருளியில் போட்டு, சுளைக்கு மேல் வரும்படி சுத்த ஜலமும் விட்டு, அடுப்பில் வைக்க வேண்டும். சுளைகள் நன்றாக கொதித்து வேகும். அடிக் கொருதடவை கிளறி விடவும். ஒரு மணி நேரம் வேக வேண்டும். நன்றாக வெந்தபின்பு ஒன்றே கால் வீசை நல்ல அச்சு வெல்லத்தை அதில் போட வேண்டும். வெல்லம் போட்டது முதல் கைவிடாது கிளறிவிட வேண்டும். வெல்லம் கரைந்து சுளையும் அல்வா பாகம் (அதாவது மொத்தையாக சுருண்டு வரும்) வரும்போது $\frac{1}{2}$படி நல்ல வெண்ணெய் காய்ச்சின நெய்யை விடவேண்டும். ஜாதிக்காய், ஏலக்காய், ஜாதிபத்திரி இவைகளை நெய்யில் வறுத்து பொடி செய்து அதில் போடவும். மிந்திரிபருப்பையும், பாதாம் பருப்பையும் நெய்யில் வறுத்து போடவும். குங்குமப் பூவையும் போடவும். நன்கு கிளறி விட்டு இறக்கி விடவேண்டும். பலாப்பழ அல்வா இப்பொழுது தயாராகி விட்டது! இந்த அல்வா ஒரு வருடமிருந்தாலும் கெடாது. ருசியும் ஜாஸ்தியாகத்தான் இருக்கும்.

### பலாப்பழ பாயசம்

பலாப்பழ பாயசம் செய்வதற்கு நல்ல நாரில்லாத பலாப்பழம் ஒன்று, ஒரு வீசை வெல்லம், எட்டு தேங்காய்கள், கொப்பரைத் தேங்காய் ஒன்று, நெய் அரைக்கால் படி, காலணா ஏலஅரிசி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, குங்குமப்பூ, வேண்டும். பலாப்பழ அல்வாவுக்கு வேக விடுவது போல பிலாச் சுளைகளை வேக வைத்துக்கொண்டு ஒரு வீசை வெல்லத்தை அதில் போட வேண்டும். நல்ல எட்டுத் தேங்காயை உடைத்து துருவி, நல்ல ஈயம் பூசின பாத்திரத்தில் பால் பிழிந்து வைத்துக்கொள்ளவும். பின்பு தேங்காய்ச் சண்டியில் கொஞ்சம் சுடு ஜலம் விட்டு ஆட்டு உரலில் போட்டு தோசைக்கு அறைக்கிறது போல் அறைத்து எடுத்து மறுபடியும் அதைப் பிழிந்து, அப்பாலை அடுப்பிலிருக்கும் பாயசத்தில் விட்டு விடவேண்டும். பாயசம் 20 நிமிஷத்திற்குள் கொதித்து விடும். உடனே அடுப்பிலிருந்து பாயசத்தை இறக்கி விடவேண்டும். முன் ஈயம் பூசின பாத்திரத்தில் பிழிந்து வைத்திருக்கும் முதல் பாலை பாயசத்தில் கொட்டி விடவேண்டும். (குறிப்பு: பாயசத்தை இறக்கி வைத்த பின்பே முதல் பாலை விடவேண்டும்) பின்பு அடுப்பில் பாணலியை வைத்து அரைக்கால் படி நல்ல நெய்யை விடு. கொப்பரைத் தேங்காயை சிறிதாக பல்லுப் பல்லாக நறுக்கி, அதில் போட்டு சிவக்க வறுத்து பாயஸத்தில் கொட்டி விடவும். ஏலஅரிசி, ஜாதிக்காய், ஜாதிபத்திரியை பொடி செய்து அதில் போடு. இந்த பாயசம் கண்ணுக்கு லக்ஷணமாயும், வாசனையாயும் நமது சாதாரண பாயசங்களை விட வெகு ருசியாயும் இருக்கும். சென்ற வருடம் கோடைகாலத்துக்கு பாலகாட்டுக்கு எனது சிநேகிதி மிஸஸ். அம்மு கிருஷ்ணஸ்வாமியை அழைத்துக் கொண்டு போயிருந்தேன். இந்த பலாப்பழ பாயசத்தை ஒரு மொக்கு மொக்கினாள். நாங்கள் திரும்பி ஊருக்கு வரும் வரை என் சிநேகிதிக்கு தினந்தோறும் மத்தியானம் இந்த பாயசந்தான் டிபன்.

### பலாப்பழ நெய்யப்பம்

இதற்கு பலாப்பழம் ஒன்று, கால்படி கோதுமை, கால்படி பச்சரிசி, $\frac{1}{2}$ வீசை வெல்லம், கொப்பரைத் தேங்காய் ஒன்று, அரை வீசை நெய், ஒரு டீஸ்பூன் ஏலப் பொடி வேண்டும்.

முதலில் கோதுமையையும் பச்சரிசியையும், நன்றாக ஊறவைத்துக்கொள். ஊறினதும் கோதுமையையும், பச்சரிசியையும், ஆட்டு உரலில் போட்டு அரைக்கவும். சுமாராக மாவானதும் பலாப்பழ சுளைகளையும் வெல்லத்தையும் போட்டு நன்கு அரைக்கவேண்டும். நன்றாக வெழுமூண அரைக்கவேண்டும். அதிகப்படியாக ஜலத்தைவிட்டு அரைக்கக் கூடாது. மாவு கெட்டியாயிருக்க வேண்டும். கொப்பரைத் தேங்காயை சிறிதாக பல்லுப் பல்லாய் நறுக்கி மாவில் போடு. ஏலப்பொடியையும் போடு. பிறகு நன்றாக் கரண்டியினால் கலக்கிக்கொள். ஐந்து அல்லது ஏழு அப்பங்கள் வார்க்கும்படியான வெங்கல பாத்திரத்தில் (பாணலி போன்றுள்ள வெங்கல பாத்திரத்தில் ஐந்து அல்லது ஏழு குழிகளிருக்கும்) ஒவ்வொரு குழியிலும் நெய்யைவிட்டு அதில் இந்த மாவை கரண்டியினால் வார்க்கவேண்டும். நான்கு அல்லது ஐந்து நிமிஷம் கழிந்ததும் ஒரு இரும்பு குச்சியினால் அப்பத்தை குத்தி அதனதன் குழியிலேயே திருப்பி போடவும். 3 நிமிஷம் கழித்து அப்பத்தை எடுத்துவிடு. இப்பொழுது பலாப்பழ நெய்யப்பம் தயாராய்விட்டது. எல்லோரும் சாப்பிட வரலாம். வாசனையும் ருசியும், அதிகம். வெகு மெதுவாயிருக்கும்.

### பலாப்பழ கொழுக்கட்டை

இதற்கு பலாப்பழம் ஒன்று, பச்சரிசி ஒருபடி, ஒரு வீசை வெல்லம், நல்ல முற்றின தேங்காய் ஒன்று, வாழை இலை 5, மட்டும் வேண்டும்.

பலாப்பழத்தை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஆய்ந்து வைத்துக்கொள். பிறகு ஒருபடி பச்சரிசியை கல்லுப்போக அரித்து

ஊறவைத்து ஆட்டு உரலில் பலாப்பழச் சொளைகளேயும் பச்சரிசியையும், ஒரு வீசை வெல்லத்தையும் போட்டு மாவாக அரைத்துக்கொள். தேங்காயை பல்லுப் பல்லாய் நறுக்கி மேற்படி மாவில் போடு. அரைத்தெடுத்துக்கொண்ட மாவை அடுப்பில் வெங்கல உருளியை வைத்து கிளறி எடுத்துக்கொள். நல்ல முற்றின வாழை இலையை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி அடுப்பில் வாட்டிக்கொள். கிளறிக் கொட்டிக்கொண்டிருக்கும் மாவை இரண்டு இஞ்சு உயரமும், ஐந்து இஞ்சு நீளமும், உடையதாய் நீளவாட்டில் உருட்டி வாட்டி வைத்திருக்கும் இலைத் துண்டில் வைத்து இலையின் இருபுறமும் ஒரு வாழை நாரால் கட்டிவிடு. பிறகு அடுப்பில் இட்லி பானையை வைத்து மேற்படி குழக்கட்டைகளை ஆவியில் வைத்துவிடு. முக்கால்மணி நேரம் கழித்து பானையிலிருந்து குழக்கட்டைகளை எடு. (முக்கால் மணி நேரம் வேகவேண்டும்) குழக்கட்டை தற்போது சாப்பிட வெகு உருசியாயும் மனோரம்மியமாயுமிருக்கும். இந்த குழக்கட்டை மூன்று தினம் வரை ஊசாது. இதை ஹல்வா மாதிரி பேனுகத்தியால் துண்டு போட்டு சாப்பிடலாம். இதற்கு மலையாளத்தில் 'சக்கைப்பழ மூடக் குழக்கட்டை' என்று சொல்லுவார்கள். இதை மலையாளத்தில் விநாயகருக்கு சதுர்த்தி அன்று செய்து அதிவிசேஷமாய் நைவேத்யம் செய்வார்கள். ஆடி வெள்ளிக்கிழமைகளிலும் இந்த குழக்கட்டையை செய்து பகவதிக்கு நைவேத்யம் செய்வார்கள்.

## பலாப்பழ தோசை

இதற்கு நல்ல பலாப்பழம் ஒன்று, அரைப்படி புழுங்கல் அரிசி, ¾ வீசை வெல்லம், ஒரு தேங்காய், நெய், கொஞ்சம் ஏலப்பொடி மட்டும் வேண்டும்.

முதலில் புழுங்கலரிசியை நன்ருக ஊறவைத்து, கல்லுப்போக அரைத்து, களைந்து, ஆட்டு உரலில் போட்டு அரைக்க வேண்டும். பலாப்பழத்தை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, மேற்படி மாவுடன் முக்கால் வீசை வெல்லத்தையும் கலந்து (மூன்றுமாய்) வெழுமூண அரைத்துக் கொள்ளவும். இந்த மாவில் ஒரு டீஸ்பூன் உப்பு போடவேண்டும். ஒரு தேங்காயை துருவி, மாவில் கொட்டி நன்ருக கலந்து கொள். அடுப்பில் தோசைக் கல்லைப் போடு. (அடுப்பை அதிகமாக எரிய விடாதே.) சாதாரணமாக தோசை வார்ப்பதுபோல் மேற்படி மாவை மெல்லியதாக வார்க்கவேண்டும். எண்ணெய் விடக்கூடாது. வெகு ருசியாயிருக்கும். செய்வதும் மிகச் சுலபம், உடம்புக்கும் நல்லது.

## கார தினுசுகள்

### சக்கைச் சொளை உப்பேரி

நல்ல முற்றின பலாக்காயை கொண்டு வந்து சொளையை ஆய்ந்து எடுத்துக் கொள். சொளையை ஒரே மாதிரி ஒன்னரை இஞ்சு நீளம், முக்கால் இஞ்சு அகலமுமாக நறுக்கி வைத்துக்கொள். நறுக்கும்போது சொளைத் துண்டுகள் விழுவதை பலாக்காய் கரி அல்லது கூட்டு செய்ய வைத்துக்கொள். அடுப்பில் பாணலியை வைத்து தேங்காயெண்ணெயை காயவை. எண்ணெய் காய்ந்தவுடன் நறுக்கி வைத்திருக்கும் சொளையை போடு. இதற்குள் நல்ல ஈயம் பூசின பாத்திரத்தில் கொஞ்சம் உப்பை ஜலத்தை





விட்டு கரைத்து வைத்துக்கொள். கரண்டியினுல் வறுவலை கிளறினுல் கலகல என்று ஓசைப்படும். அப்பொழுது உப்பு ஜலத்தை தெளிக்கவும். ஓசையடங்கினவுடன் வறுவலை பாணலியிலிருந்து எடுத்துவிடு. இந்த வறுவல் கரகரப்பாயும், ருசியாயும், சாப்பிட தொட்டுக்கொள்ளவும் உதவும். எட்டு தினங்கள்வரை கரகரப்பாயிருக்கும்.

### சக்கை அப்பளாம்

சக்கைச் சொளை உப்பேரிபோல காயை நறுக்கி ஆய்ந்து வைத்துக்கொள். பிறகு சொளையை பொடிப் பொடியாக நறுக்கு. ஆட்டு உரலை அலம்பி அதில் உப்பு, மிளகாய், பெருங்காயம், போட்டு பொடிப் பொடியாய் நறுக்கி வைத்துக்கொண்டிருக்கும் சொளைகளையும் போட்டு வெழுமூண நன்ருய் அரைத்து எடுத்துக்கொள். நல்ல வாழை இலையை துண்டு துண்டாக நறுக்கி, ஒவ்வொரு துண்டுக்கும் ஒவ்வொரு அப்பளாம் வீதம் மெல்லியதாக பரத்தி (வடை தட்டுவதுபோல், ஆனல் மெல்லியதாய் பரப்பவேண்டும்) வெய்யலில் காயவை. நன்ருக காய்ந்தவுடன் இலையிலிருந்து அப்பளாம் தனியாக வந்து விடும். இந்த அப்பளாத்தை நல்ல டின் ஒன்றில் எடுத்து வைத்துக்கொண்டு அடுப்பில் அனலில் சுட்டு உபயோகப்படுத்த வேண்டும். இந்த அப்பளாம் அதிக நன்ருயிருப்பதுடன் வெகுநாளைக்குமிருக்கும்.

### சக்கை வற்றல்

நல்ல பலாக்காயை சக்கை உப்பேரிக்கு நறுக்குவதுபோல் 1½ இஞ்சு நீளமும், ¾ இஞ்சு அகலமுமாக ஒரே மாதிரி நறுக்கிக்கொள். அடுப்பில் 3 டீஸ்பூன் மஞ்சள் பொடி போட்டு ஜலத்தைக் கொதிக்கவை. ஜலம் நன்கு கொதி வந்ததும் நறுக்கி வைத்துக்கொண்டிருக்கும் சொளையை கொதிக்கும் ஜலத்தில் கொட்டிவிடு. சொளையை போட்ட பாத்திரத்தில் ஜலம் தாராளமாயிருக்க வேண்டும். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம், ஒரு நல்ல புதுக் கூடையில் மஞ்சள் ஜலத்துடன் கூடிய சொளையை கொட்டி விடவும். ஜலம் பூருவும் வற்றி விடும். பிறகு முற்றத்திலோ மாடியிலோ வெய்யில் உள்ள இடத்தில் காயவைக்கவும். இரண்டு மூன்று தினங்கள் வெய்யிலில் காயவைக்க வேண்டும். பிறகு வற்றலுக் குத்தகுந்தாற்போல் உப்பை எடுத்து பொடி செய்து கொஞ்சம் சுடு ஜலத்தில் கரைத்து காய்ந்த வற்றலில் தடவி இரண்டு மணி நேரம்வரை அப்படியே வைத்திரு. பிறகு வெய்யிலில் ஒரு தினம் மட்டும் காயவை. இந்த வற்றலை எண்ணெயில் போட்டு வறுத்தால் நன்கு பொரிந்து கொண்டு வாய்க்கு ருசியாயும் இருக்கும். ஒரு வருடம் வரை இந்த வற்றல் கொஞ்சமும் கெடாது. நம் தமிழ் நாட்டில் கொத்தவரங்காய் வற்றல், தளிவடாம், அவரை வற்றல், வெண்டைக்காய் வற்றல், முதலியன செய்து வருஷக் கணக்காய் வைத்துக் கொண்டு உபயோகிப்பது போல் மலையாளத்தில் இந்த வற்றலை வருஷக் கணக்காய் உபயோகிக்கிருர்கள். நீங்களும் செய்து பாருங்கள். அப்பொழுது தெரியும் அதன் ருசி!

———:o:———

# நரதேவதைக்குப் பெண் பலியா?

## ஸ்ரீமதி ராஜம்

பட்டுவுக்கு வயது 15 ஆகி விட்டது. அவள் சிறு குழந்தையாயிருக்கும் பொழுதே அவள் தாயார் இறந்துவிட்டாள். தகப்பனார் கோபாலய்யர் விசாலாக்ஷியை மறு விவாகம் செய்து கொண்டார். விவாகப்பலன் வீண் போகாமல் வருஷத்திற் கொன்றாய் ஆறு பெண்களையும் நாலு பிள்ளைகளையும் பெற்றுத்தள்ளி விட்டாள். அந்த அம்மாளின் அமுலும் ஆடம்பரமும் சொல்லிமுடியாது. அவள் வைத்தது தான் சட்டம். கோபாலய்யரோ பரமசாது. கட்டின பசுப்போலிருப்பார்.

ஊரிலிருக்கும் அண்டை அசல் வீட்டுக்காரர்களெல்லாம் பெண்ணிற்கு இவ்வளவு வயதாயும் கல்யாணம் செய்யாமல் இருப்பதைப் பற்றிப் பலவிதமாய்ப் பேசி உபத்திரவப்படுத்தினார்கள். பாவம், கோபாலய்யர் தன் மனதை தைரியப்படுத்திக் கொண்டு தர்மபத்தினியிடம் இந்த வருஷம் எப்படியாவது பட்டுவுக்கு கல்யாணம் செய்து விடவேண்டுமென்று ரொம்பவும் கெஞ்சிக்கூத்தாடினார். விசாலத்தின் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்க, "கல்யாணம், கல்யாணம் என்று முட்டிக் கொள்ளுகிறீர்களே. பண எழவுக்கு எங்கே போகிறது. அடுக்கடுக்காய் ஆறுகுழந்தைகள் நிற்கிறது. கண்ணான குழந்தைகளுக்கு ஒரு நகைசெய்து போட வகையைக் காணோம். கலியாணம் செய்துவிட்டு மறுகாரியம் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறீர்கள். இந்தக் காலத்தில் ஆனைப்பட்டவர்கள் எல்லாம் திண்டாடச்சே அழுகப்பூசனிக்காய் எம்மாத்திரம். பெரிய பெரிய உத்யோகஸ்தர்களும், பணக்காரர்களும் பெண்ணை வைத்துக் கொண்டு சரியான வரன் அகப்படாமல் முழித்துக் கொண்டிருக்கச்சே உங்கள் மூஞ்சிக்கு யார் வந்து கட்டிக்கப் போரான்; ஏதாவது கிழடு கட்டைக்குப் பார்த்துத்தள்ள வேண்டியது தான். செலவு கைப்பிடிப்பில்லாமல் போகும்; ஊர் உபத்திரவமும் தொலையும்" என்று ஒரு விதமாகத் தீர்மானம் செய்தாள்.

கோபாலய்யருக்குத்தன் பெண்ணைக் கிழமாப்பிள்ளைக்குக் கொடுக்க இஷ்டமில்லாவிட்டாலும் எப்படியாவது கல்யாணம் செய்யச் சம்மதித்ததே போதுமென்று சந்தோஷம் கொண்டார். மறுநாள் குளக்கரையில் சாமா சாஸ்திரி குளித்து விட்டுப் பரபரப் போடு விபூதி இட்டுக் கொண்டிருக்க, விசாலாக்ஷி அம்மாள் தோளில் மூட்டை துணியைச் சுமந்துகொண்டு வந்து சேர்ந்தாள். "என்ன சாஸ்திரியளே!, உங்களைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது" என்றாள்.

சாஸ்திரிகள் "ஒரு வார்த்தை சொல்லியனுப்பினால் அந்தக்ஷணமே ஓடிவர மாட்டேனா? கல்யாண மாஸமோன்னோ? ஒரு நாழி நின்ன இடத்திலே நிக்கமுடியல்லே. நம்மாத்துக் குழந்தைக்கும் கல்யாணம் ஆகணும்" என்று சொல்லிமுடித்தார். விசாலாக்ஷி குடத்தையும் துணிகளையும் ஓரிடத்தில் வைத்து விட்டு நிதானமாய் "சாஸ்திரிகளே, எங்காத்து நிலைமை உங்களுக்குத் தெரியும். அவர் மண்ணுமில்லை, சாம்பலுமில்லை. அவரால் ஒன்றும் முடியாது. உருவாரம் போல் உட்கார்ந்திருப்பார். நான் அவருக்கு வாழ்க்கைப்பட்ட சவரணைக்கு மூத்தாள் பெண் ஒன்று பாக்கியாயிருந்தது. அதற்கு வயது 15 ஆகிவிட்டது. குதிர்போல் நிற்கிறது. காசுமில்லை, பணமுமில்லை. ஊர்க்காரர்கள் ஒரு பக்கத்தில் பிடுங்கித்தின்று விட்டுப்போகிறார்கள். ஏதோ நீங்கள்தான் தயவுபண்ணி நம்முடைய நிலைமைக்கேற்றாப் போல் ஓர் வரனைப்பார்த்து முடிக்கணும். வயது கொஞ்சம் கூடக்குறைய இருந்தாலும் குற்றமில்லை" யென்று சாடையாய்ச் சொன்னாள்.

சாஸ்திரிமுகத்தில் புன்னகை தாண்டவமாடிற்று. "சரி, அகத்திற்குப் போனவுடன் ஜாதகத்தை அனுப்புங்கள், நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். நாளைக்கே முடித்துவிடுகிறேன். என்னை மறக்கக் கூடாது" என்று ஒரு வார்த்தையையும் நடுவில் போட்டு வைத்தார். விசாலாக்ஷி அம்மாள் "நன்றாய் இருக்கு. இந்த உபகாரத்தை ஒரு நாளும் மறக்கமாட்டேன்" என்று சாஸ்திரிகளுக்கு முகஸ்துதி செய்துவிட்டு விடைபெற்றுக்கொண்டு குளித்துவிட்டு வீடு சென்றாள்.

சாயங்காலம் 5 மணிக்கு சாஸ்திரி கோபாலய்யரைப்பார்க்க வந்து சேர்ந்தார். விசாலாக்ஷி அம்மாளும் கோபாலய்யரும் மிகுந்த ஆவலோடு "என்ன சாஸ்திரிகளே. ஜாதகம் பொருந்தியிருக்கிறதா. பிள்ளை எந்த ஊர்" என்று அடுக்கடுக்காய்க் கேட்கவும், சாஸ்திரி தொண்டையைக் கனைத்துக்கொண்டு "ஒண்ணாம் நம்பர் மாப்பிள்ளை. தகுந்த ஐவேஜி உடையவர்" என்றார். கோபாலய்யர் "வயது என்ன— ரொம்ப ஆச்சோ?" என்று இழுத்தார். சாஸ்திரிகள் "அட, ராமா, அப்படியெல்லாம் நான் கொண்டு வருவேனா? அதிபால்யமின்னா, 50க்குக் கொஞ்சம் அதிகமிருக்கும், பார்வைக்குத் தத்ரூபம் மன்மதனாகவே யிருப்பார். குணமோ சொல்லவேண்டியதில்லை. தங்கக்கம்பியென்றே சொல்ல வேண்டும்," என்று சரமாரியாய் வர்ணித்துக்கொண்டு போனார்.

கோபாலய்யர் ஜாதகத்தைப் பார்த்தார். மாப்பிள்ளைக்கு வயது 65 ஆகி இருந்தது. அவர் மனமும் வயிறும் பகீரென்றது. "என்ன சாஸ்திரிகளே, வயது 65 ஆகிறதே" யென்று ஆரம்பித்தார். சாஸ்திரிகள் "அட பரமசிவா! ஆண்பிள்ளை சிங்கமல்லவா? அவர்களுக்கு இது ஒரு வயசா? இன்னும் பத்து கல்யாணம் செய்யலாமே" யென்று வாயடியடித்தார். விசாலாக்ஷி அம்மாளும் சாஸ்திரி சொல்லுவதை ஆமோதித்து "அவர் கிடக்கிறார்; உலக விஷயம் தெரியாமல் உளறுகிறார். இந்த வரனையே நிச்சயித்து விடும். பாக்கி விஷயங்கள் எல்லாம் சொல்லு" மென்று மெல்லக்கேட்டாள். ஆயிரம் கையில் கொடுத்து பெண்ணிற்கு நகை நட்டு செய்து போடுவதாகச் சொல்ல, விசாலாக்ஷி அம்மாள் இரண்டாயிரத்திற்குக் குறைந்து முடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்ல, முடிவாய் இரண்டாயிரத்திற்கு ஒப்புக்கொண்டு அடுத்த வெள்ளிக்கிழமை கலியாணத்திற்கு முகூர்த்தம் வைக்கப்பட்டது.

ஆத்தில் பட்டுவைத் தவிர மற்றெல்லோருக்கும் ஒரே குதூகலமும் கொண்டாட்டமும். பட்டு முகத்தில் ஈயாடவில்லை. கிழ மாப்பிள்ளை எப்படி இருக்கிறாரோ, யார் கண்டார்கள்? வீட்டிலிருப்போர் குசு குசு வென்று பேசிக் கொள்வதிலிருந்து வயதானவரென்று தெரிந்து கொண்டாள். தந்தை வாய் திறக்கவில்லை. சின்னம்மாளைக் கேட்க பயந்தாள். வெட்கத்தை விட்டுக் கேட்டாலும் என்ன சொல்லுவாளோ வென்ற பயம் ஒரு பக்கத்தில்.

பட்டு நல்ல புத்திசாலி. ஏழு கிளாஸ் வரையிலுமே படித்திருந்தாலும் படிப்பில் மிகுந்த ஆர்வமும் ஆவலும் உள்ளவள். பட்டு என்ற பெயருக்கேற்றாப்போல் சிவந்த மேனியும், அழகிய முகமும், நீண்டு அடர்ந்த கூந்தலும், நல்ல சௌந்தர்யவதி யென்றே சொல்ல வேண்டும். சிற்றன்னையின் மனம் கோணாமல் நடந்து கொண்டு வேலையை ஒழுங்காய்ச் செய்துகொண்டு ஒழிந்த நேரங்களில் தனக்குத் தெரிந்த சிநேகிதிகளிடமிருந்து பத்திரிகைகளை வாங்கிப்படித்து, உலக விஷயங்களைத் தெரிந்து கொள்வாள். அவள் உடுத்தும் உடைகள் அவள் கைராட்டினத்தால் நூற்ற

வைகளே. காந்தி மஹாத்மா வென்றால் கை கூப்பிக் கண்ணீர் விடுவாள். இப்போது அவள் மனம் ஒன்றிலும் நாடவில்லை. தனக்கு வரப்போகிற புருஷன் எப்படி இருப்பானோ வென்ற எண்ணமும் கவலையும் அவளை வதைக்கத் தொடங்கியது.

புதன்கிழமை நிச்சயதார்த்தமும் வெள்ளிக்கிழமை கலியாணத்திற்கு நாளும் குறிப்பிட்டிருந்தது. புதன்கிழமை காலை எட்டு மணிக்கு நிச்சயதார்த்தமானதால் வீட்டில் ஒரே சிரிப்பும் ஜனக்கூட்டமும் கொம்மாளமுமாய் இருந்தது. மேளகாரன் ஒரே அபஸ்வரமாய் நெரித்துத்தள்ளிக் கொண்டிருக்க, சாமாசாஸ்திரிகள் நாலைந்து பெண்களுடன் வெற்றிலை பாக்கு பழம் புஷ்பம் கற்கண்டு புடவை ரவிக்கை முதலானவைகளைத் தட்டில் வைத்துக்கொண்டு வெகு ஆடம்பரத்துடன் வந்து சேர்ந்தார். சாஸ்திரியின் அதிகார அட்டகாசத்திற்குக் கேட்க வேண்டுமா? "எங்கே பொண்ணு, நாழியாய் விட்டது. இன்னும் சிங்காரிக்க வில்லையா? நல்ல அசமந்தங்கள், கொண்டு வந்து உட்கார்த்துங்கள். இதோ வந்துவிட்டார் மாப்பிள்ளை. இந்தப் பெண்டுகளே இப்படித்தான்" என்று கூப்பாடுபோட்டுப் பெண்ணை அழைத்து வந்து மணையில் உட்கார வைத்தார்கள். ஒரே கொண்டாட்டம்.

அங்கிருப்போரெல்லாம் "மாப்பிள்ளை வந்து விட்டார். இப்படி அமரச்செய்யுங்கள்" என்று பரபரப்போடு மாப்பிள்ளையை உபசரித்தார்கள். பூமியைப் பார்த்துத் தலையைக் குனிந்து கொண்டிருந்த பட்டு, மாப்பிள்ளை வந்துவிட்டார் என்றதைக் கேட்டு மிகுந்த ஆவலோடு வாசல் புறத்தைப் பார்த்தாள். "ஐயோ, ஈசுவரா, இந்த கோரத்திற்கா என்னைத் தள்ளப் போகிறார்கள். கொள்ளிக்கட்டைக்குத் திருமஞ்சனம் செய்தாற்போலிருக்கிறதே. பருமனை சொல்ல முடியாது. சின்னமலை அசைந்து வருவது போலிருக்கிறது. முகத்தழகைக் கேட்கவேண்டுமோ? கண் இருக்கிற இடம் தெரியவில்லை. மூக்கு ஒரு சாண் நீண்டு நுனியில் வளைந்திருக்கிறது. வாயழகை வர்ணித்து முடியாது. வில்போன மணிபர்சு என்று சொல்லலாம். முன் பக்கத்தில் தலை ஒரே வழுக்கையாயும் பின் பக்கத்தில் தேய்ந்த பிரஷ்ஷைப் போலும் ஒவ்வோரிடத்தில் சில ரோமங்கள் செங்குத்தாய்க் காணப்பட்டது. ஒரு கால் பருத்தும் ஒரு கால் சின்னதாயும் காணப்படுவதால் வாதரோகமென்று தோன்றுகிறது. அட, அநியாயமே, இந்த அவலக்ஷணப் பழுத்த கிழத்துக்கா என்னை பலி கொடுக்கப் போகிறார்கள். ஐயோ, பார்க்க சகிக்க வில்லையே. இந்தக் கரும் பூதத்தை மாப்பிள்ளை யென்று அழைக்கிறார்களே. அட வெட்கக்கேடே இதென்ன அக்ரமம். இதைக்கேட்பார் ஒருவரு மில்லையா?" என்று பலவாறு எண்ணமிட்டுத் தவித்துக் கண்ணீர் விட்டாள்.

கோபாலய்யர் நிலைமையைச் சொல்ல வேண்டாம். மாப்பிள்ளையைப் பார்த்தவுடன் ஸ்தம்பித்து மரம் போல் நின்று விட்டார். "அடபாவி, தத்ரூபம் மன்மதனைப் போலிருப்பானென்று அவ்வளவு ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசினானே. சண்டாளன் சாஸ்திரி யென்று பேர் வைத்துக் கொண்டு பணத்துக் காசைப்பட்டு இல்லாததும் பொல்லாததும் சொல்லி என்னை ஏமாற்றி விட்டானே! இனி மேல் முடியா தென்றால் என்னைக் கொஞ்சத்தில் விட மாட்டார்களே. விசாலாக்ஷியிடம் யார் சொல்லிப் பிழைக்கிறது. ஐயோ! என் குழந்தையின் தலைவிதி இப்படியா ஆகவேண்டும்" மென்று தைரிய மற்றவராக முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு மூலையில் போய் உட்கார்ந்து விட்டார். எப்படியிருந்தாலும் பெற்ற தந்தையல்லவா?

விசாலாக்ஷி இரவல் நகைகளை வாங்கிப் போட்டுக்கொண்டு தானும் தன் குழந்தைகளும் வித விதமான புதுப்புடவை, பாவாடை, முதலானதுகளைக் கட்டி அலங்காரம் செய்து கொண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அங்கு மிங்கும் ஒரு காரணமுமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தார்கள். விசாலாக்ஷி அம்மாளுக்கு மாப்பிள்ளை, எப்படி இருந்தாலென்ன? பணம் இரண்டாயிரம் அல்லவா வருகிறது. என்ன நகை செய்யலாம், என்ன புடவை வாங்கலாம் என்ற யோசனையில் அவள் மனம் சென்று கொண்டிருந்தது.





சாஸ்திரி பரபரப்போடு வெகு ஆடம்பரத்துடன் கிழமாப்பிள்ளையை அழைத்து வந்து பெண்ணின் பக்கத்தில் உட்கார வைத்து மந்திர மென்று ஏதோ வாயில் வந்ததை உளறிக் கொட்டத் தொடங்கினார். அங்கு வெற்றிலை பாக்குக்கு வந்திருக்கும் வைதீகர்களும் தொண்டை கிழிய கூடக்கத்தினார்கள். கிழ மாப்பிள்ளையின் பெயர் பஞ்சநாதய்யர். அவர் பேசும் போது ஐந்து ஸ்வரம் கிளம்பும். பேருக்குத் தகுந்தாற்போல குணம் அமைவது கஷ்டம். பஞ்சு பெண்ணைப் பார்த்தார். அப்படியே திகைத்து விட்டார். தன் கீரை விரைக் கண்ணைத்திறந்து மூடி உருட்டி விழித்துக்கொண்டு "என்ன அழகு, சொர்ண விக்ரகம் போலிருக்கிறதே. ரூபாயைக் கொடுத்தாலும் பச்சைக்கிளி மாதிரி எனக்குப் பணி விடை செய்யப் பெண் கிடைத்து விட்டதே. இனிமேல் காலுக்குத்தைலம் போட்டு உருவவும், மொடக்கித்தான் ரசம் வைக்கவும், முதுகு சொரியவும் அத்தை, கருப்பாயி, முதலியவர் தயவு வேண்டா" மென்றும்; இன்றே மன்மத சிந்தாமணி லேகியத்திற்கு ஆர்டர் செய்து விடவேண்டு மென்றும் பலவாறு எண்ணங்கள் தோன்றி மறைய பரம சந்தோஷத்தோடு பொய்ப் பல் தெரியும்படி வாயைத்திறந்து கொண்டு கிழமாப்பிள்ளை உட்கார்ந்திருந்தார்.

நிச்சயதார்த்த முகூர்த்தம் முடிந்தது. விசாலாக்ஷி அம்மாள் பேசியபடி சாஸ்திரிக்கு கமிஷன் போகப் பணத்தை எண்ணிப் பார்த்து வாங்கிக்கொண்டாள். வந்தவர்களுக்குத் தாம்பூலம் கொடுத்தனுப்பப்பட்டது. பட்டுவின் துயரம் சொல்லி முடியாது; அழுதழுது கண் சிவந்து வீங்கி விட்டது. ஏனென்று கேட்பார் யாருமில்லை. விசாலாக்ஷி அம்மாள் கல்யாண ஏற்பாடு செய்வதிலும் அங்கு மிங்கும் ஓடி ஆர்பாட்டம் செய்து கொண்டிருந்தாள். தனியான ஓரிடத்தில் படுத்துக்கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள் பட்டு.

"பெற்ற தாயாயிருந்தால் என்னை இந்த அநியாய விவாகத்திற்கு உட்படுத்துவாளா? இப்பவோ பின்னையோ எமலோகத்தை எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கும் கிழ பூதத்திற்கு என்னை இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்கத் துணிவாளா? பத்து மாதம் சுமந்து பெற்ற தாய்க்கல்லவோ தெரியும் பிள்ளையினருமை. தாயில்லாக் குழந்தை என்று சொல்லுகிறார்களே யொழிய தகப்பனில்லாக் குழந்தை யென்று சொல்வதில்லை. அதுபோல் தாய் நாடென்று சொல்லுகிறார்களே யொழிய தந்தை நாடென்று அழைப்பதைக்காணோம். 'அம்மா பிச்சை' யென்று கேட்கிறார்களே யொழிய அய்யா பிச்சை யென்று கேட்பதைக் காணவில்லை. பெற்ற தாய் மறைந்த போதே ஸர்வமும் போய்விட்டது. தாயின் உயர்வும் பெருமையும் அளவிடமுடியுமோ? தந்தையிருந்தும் இளையாள் வலையில் அகப்பட்டுக் கொண்டு எதிர்த்துச் சொல்ல சக்தியற்றவராய்த் தத்தளித்துக் கொண்டிருக்கிறார். என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுவார் ஒருவராவது இல்லையே.

இந்த அக்ரம விவாகத்தைக் கண்டித்துப் பேசுவாரில்லையே. இந்த எழுபது வயதுக் கிழத்தைக் கலியாணம் செய்து கொள்ளக்கூடாதென்று தடுக்க ஒருவராவது முன் வரவில்லையே. இதைத்தடுக்க ஒரு சட்டம் கிடையாதா? அவசரச்சட்டம், ஆபத்துச்சட்டம் என்று எவ்வளவோ கிளம்பிவிடுகிறதே. அவ்

யாணமென்ற பேரால் இப்படிப் பெண்களைப் பலியிடுவதைத் தடுக்க நம் தேசத்தில் ஒரு சட்டம் கொண்டுவரக் கூடாதா? இதுவரை இப்பாழும் கலியாணத்திற்கு பலியாகி மனமிடிந்து வாழ்க்கை துறந்து வருந்திக் கண்ணீர் விட்டு மடிந்த பெண்களைக் கணக்கிட முடியுமா? பணத்திமிர் பிடித்த கிழங்கள் ஆஸ்த்மாவுக்குத் தைலம் தடவுவதற்கென்றும் வாதரோகத்திற்குத் தைலம் தடவிக் கையைப் பிடித்து அழைத்துப் போவதற்கும், அந்திய காலத்தில் தண்ணீர் கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்றும் சாக்குப்போக்குச் சொல்லிக் 'காடு வா வா' என்கிற காலத்தில் பெண்ணாசை பிடித்து சுயகாரியப்புலியாய் நெஞ்சில் சிறிதும் இறக்கமின்றி உலகமறியாப் பெண்குழந்தைகளின் வாழ்க்கையை வேரறுத்து அவர்கள் மீளா வண்ணம் படுகுழியில் தள்ளி விடுகிறார்கள். பெண்களென்றால் கிள்ளுக்கீரையா? ஆணுக்கொரு நியாயம் பெண்ணுக்கு வேறொரு நியாயமா? இருபாலர்களையும் சமமாகத்தானே பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கிறார்கள். வெளித்தோற்றத்தில் வித்யாசமே ஒழிய ஆசை அன்பு, மனோ உணர்ச்சி இவையெல்லாம் இருவருக்கும் சமம்தானே? இவ்வுலக சுக துக்கங்களில் இருவர்க்கும் பங்குண்டல்லவா? புருஷர்கள் மட்டும் எத்தனை வயதானாலும் மனைவி உயிரோடிருந்தாலும் இறந்து மடிந்தாலும் எத்தனை விவாகம் வேண்டுமானாலும் பண்ணிக்கொண்டே யிருக்கலாமென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லி யிருக்கிறதோ தெரியவில்லை? பெண்களுக்குப் பதிவிரதா தர்மம் எவ்வளவு முக்கியமோ அதே போல் புருஷர்களுக்கும் ஏக பத்தினி விரதம் அவசியமல்லவா? அதை மறந்து விட்டு கிருஷ்ணாவதாரத்தைத் தங்களுக்கனுசரணையாகக் கையாண்டு நடத்தி வருகிறார்களே. இந்த அநியாயத்திற்கு எங்கே போயழுவது. தாய் தந்தையர்களோ வரதக்ஷிணைக்குப் பயந்து கலியாணம் செய்து கொடுக்க வழியில்லாமல், வைத்துக்கொள்ளவும் தைரியமில்லாமல், ஊர் உபத்திரவம் தாங்க மாட்டாமல் தலைவிதி யென்று அதன் மேல் பாரத்தைப்போட்டு விட்டு மூன்றாம் தாரமாகவோ நாலாம் தாரமாகவோ கிழப்பேய்களிடம் தள்ளி விடுகிறார்கள். புருஷர்கள் பிரம்மசாரியாய் இருந்து விடலாம். பெண்கள் கன்னிகையாக இருக்கக்கூடாது. வீடு குட்டிச்சுவராய்ப் போய்விடும். இருந்த இடம் தெரியாமல் அஸ்தமித்துப் போய் விடுமாம். நாளைச்சாகிற கிழம் தொட்டுத்தாலி கட்டி மறைந்து விட்டாலும் குற்றமில்லை. அப்பெண்ணின் தலைவிதி அதுதானென்று அலங்கோலம் செய்து ஆயுள் பரியந்தம் சகலமும் துறந்து கண்ணீர் விட்டு மடிய வேண்டுமாம். இதுதான் சாஸ்திர சம்மதமென்று வைதீகர்கள் சொல்லுகிறார்கள். இப்படி ஒரு சாராரை மட்டும் சின்னா பின்னப் படுத்தி ஜீவ நாடியை வேரறுக்கக்கூடிய ஒரு சாஸ்திர மிருக்குமானால் அதைக் குப்பைத் தொட்டியில் தான் போட வேண்டும். ஐயோ, ஜகதீசா, இந்த பயங்கர வாழ்வைக் காட்டிலும் இப்படியே கன்னிகையாயிருந்து தேசத்துக் குழைப்பதில் என் வாழ்நாளைக்கழித்தால் எவ்வளவு நிம்மதியாயிருப்பேன்" என்று பலவாறு எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணிக் கண்ணீர்விட்டுக் கதறி அழுதாள்.

விசாலாக்ஷி குழந்தைகளெல்லாரையும் அழைத்துக்கொண்டு புடவை பாவாடை முதலான சாமான்கள் வாங்கக் கடைக்குப்போய் விட்டாள். பாவம் கோபாலய்யர் என்ன செய்வார். அவருக்குத் தன் பெண்ணை இந்தக் கிழமாப்பிள்ளைக்குக் கொடுக்க துளிக்கூட இஷ்டமில்லை. விசாலாக்ஷியின் சட்டத்தை அவரால் எப்படி மாற்ற முடியும்? பட்டுவின் பரிதாபத்தைக்கண்டு சகிக்க மாட்டாமல் தர்மஸங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்.

அப்படியும் இப்படியும் இரண்டு நாளும் ஓடி மறைந்தது. வீட்டில் கல்யாண ஆர்ப்






பாட்டம் சொல்லத்தரமில்லை. சமையற்காரர்கள் ஒருவரோடொருவர் இரைச்சலிட்டுக்கொண்டு பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருக்கிறார்கள். பாட்டிமார்கள் ஒன்று கூடி ஊர்வம்பை உழக்காலளந்துகொண்டு "அடி பொன்னே பட்டு, உனக்கு நலங்கு பத்தியம் பூலாச்சென்று தெரியுமா? இந்த நாளிலே பாட்டுப் பாடென்றால் சட்டென்று பாடுகிறது கிடையாது. பூதமாட்டமா ஒரு பெட்டியைக் கொண்டு வருகிறதும், அது காச்சு மூச்சென்று காதைத் துளைக்கிறதுமாயிருக்கிறது. சம்மந்திப் பாட்டே போய்விட்டது. எல்லாம் கலிமுற்றி வரவரக்காலம் கெட்டுப்போச்சு" என்று ஒரு அடுக்குத்தோசையும், அரைப்படி மிளகாய்ப் பொடியும் போட்டுக்கொண்டு ஒரு அடுக்கு எண்ணையை விட்டுக்குழைத்துக்கொண்டு விடிய விடியப் பலகாரம் செய்துகொண்டு ஊர்க்கலியாணங்களைப்பற்றி 'அப்படி இப்படி' யென்று வக்கணை பேசிக்கொண்டிருந்தார்கள்.

பட்டுவுக்கு இவர்கள் வம்பு ஒன்றும் காதில் படவில்லை. கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளலாமென்று இரண்டு தடவை கிணற்றுக்குப் போனாள். சமயம் வாய்க்கவில்லை. யாராவது வந்துகொண்டே யிருந்தார்கள். இதற்குள் வெள்ளிக்கிழமை பொழுது விடிந்து விட்டது. பட்டு புலம்பித் தவிக்கிறாள். "யாராவது இந்தக் கலியாணத்தை நிறுத்திவிட மாட்டார்களா? எவ்வளவோ கதைகளில் வருகிறதே, நல்ல சமயத்தில், யாராவது தோன்றி கதாநாயகியின் துயரத்தைத்தீர்த்து மீட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறதே! அது நடக்கக்கூடியதா? எல்லாம் வீண் பைத்தியம்—எல்லாம் பகற்கனவுதான். இப்படியே தவித்துக் கண்ணீர்விட்டு என்போல் எத்தனை பெண்கள் இந்தக்கொடிய விவாக பலிக்கு இரையாகி மடிந்தார்களோ கணக்கிட்டுச் சொல்லி முடியாது. நாகரிகம் முதிர்ந்த இக்காலத்திலும் இதை ஒழிப்பாரில்லையே" என்று தீயில் விழுந்த புழுவைப் போல தவித்து கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

ராமா சாஸ்திரியின் அதிகார தோரணைக்குக் கேட்க வேண்டுமா? "என்னம்மா, எல்லாம் தயாராயிருக்கிறதா. பெண்ணை அழைத்து வாருங்கள். இதோ மாப்பிள்ளை வந்து விட்டார். அடே மேளகாரா என்ன தூங்கி வழிகிறாய்" என்று அங்குமிங்குமோடி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இருந்தார். இரண்டு பெண்கள் பட்டுவை 'சரசர' வென்று இழுத்துவந்து "நன்னா இருக்கடி கல்யாணப் பெண் இப்படித்தான் இருப்பாளா? அழுகை என்னடி? ஆம்படையான் வரப்போகிறான். கல்லுக்கல்லாய் நகையும் நாணயமும் பட்டுப் புடவையும் வாங்கியிருக்கிறார். பணம் காசுக்கு குறைச்சலா? கொஞ்சம் வயசானாலும் உன்னை தங்கமின்னு தாங்கி ஏலமின்னு ஏந்தி வைச்சுக் கொண்டு இருப்பார். சின்னப் பிள்ளைகளுக்கு வாழ்க்கைப் பட்டு சோத்துக்கும் துணிக்கும் திண்டாடி நிற்பதைப்பார்த்து பெரிய உத்யோகமும் தகுந்த ஐவேஜியுமிருந்தால் என்ன வயசானாலும் அதை யார் கவனிக்கிறார்கள். அடி பைத்தியமே, நாளைக்கே முத்து முத்தாய் குழந்தைகள் பிறந்துவிடும். ஆம்படையான் மன்மதனென்று சொல்லிக்கொள்வாய்" என்று ஒவ்வொருவரும் தனக்குத்தோன்றியபடி பேசி சமாதானம் சொல்லிக்கொண்டு பட்டுவை அழைத்து வந்து மணையில் உட்கார வைத்தார்கள். பட்டு என்ன செய்வாள் பாவம்! தன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் கிழ மாப்பிள்ளையை ஒரு தரம் மெல்லத் திரும்பிப்பார்த்தாள். அவள் மனம் பகீரென்று பற்றி எரிந்தது. "ஐயோ கோரமே, சாகப்போகிற வயதில் இப்படியும் ஒரு பெண்ணாசை பிடித்தலைவாருண்டா? புருஷர்கள் மறுவிவாகம் செய்துகொள்ளலாமென்றால் இத்தனை வயதுவரையில் இவ்வளவுதரம் இன்ன வயதுள்ள பெண்ணைத்தான் கலியாணம் செய்துகொள்ளலாமென்ற நியதிவரையறை கிடையாதா? இவர்

கள் மனம்போனபடி எதைவேண்டுமானாலும் செய்து கொள்ளும்படி சாஸ்திரமும் சட்டமும் அனுஸரணையாக இருக்கின்றதே. அதுவும் வயது ஏற ஏற அவர்கள் செய்கிற அட்டூழியம் சொல்லி முடியாது. என்போன்ற சிறு பெண்களின் வாழ்க்கையை நிர்மூலமாக்க 4000 ரூபாய், 5000 ரூபாய் என்று பாழாக்கி வாரி யிறைப்பதை அந்திய காலத்தில் ஓர் நல்ல காரியத்தில் செலவிடக்கூடாதா? எத்தனை ஏழைக் குடும்பங்கள் உண்ண உணவின்றி உடுக்கத் துணியின்றித் தவிக்கின்றன. எத்தனை தாய் தந்தையற்ற குழந்தைகள் ஆதரிப்பாரின்றி அனாதைகளாய் நிற்கின்றன. எவ்வளவு திக்கற்ற பால்யவிதவைகள் பிழைக்க வழியறியாமல் புலம்பித்தவிக்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து, பத்து கொடுத்தாலும் எத்தனையோ குடும்பங்கள் பிழைக்குமே. தன் சுய நன்மைக்காக ஒரு ஏழைப் பெண்ணின் வாழ்க்கையை அதோகதியாக்க இவ்வளவு பணத்தைக் கொட்டவேண்டுமா? ஐயோ, ஜகதீசா யாரைச்சொல்லி என்ன பயன். வரதக்ஷிணை, சீர் வரிசை, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் ஒழிந்தாலொழியப் பெண்களுக்கு விமோசனமில்லை. ஏழைத் தாய் தந்தையரின் பரிதாப நிலைமை சகிக்க முடியாததாய் இருக்கிறது இதுதான் சமயமென்று கர்வம் பிடித்த கிழவர்கள் தாராமின்றி பண மென்ற வலையை வீசி அதில் சிக்கிக்கொள்ளும் பெண் பக்ஷிகளை கொடிய வேடர்போல மனதில் ஈவு இரக்கமின்றி கலியாண மென்ற பெயரால் அபகரித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். இதை ஏனென்று கேட்பாரில்லையே. எத்தனை வைதீகர்கள் எத்தனை கனபாடிகள் எவ்வளவு சாஸ்திரிகள் கூடி தொண்டைகிழியக் கத்துகிறார்களே! இதில் ஏதாவது நமக்கு அர்த்தம் புரிகிறதா? வாயில் வந்ததை குறும்பாடுபோல உளறிக் கொட்டிக் கிளறிக்கொண்டு போகிறார்கள். என் ஆசை சந்தோஷ மெல்லாம் இன்றோடு முடிந்தது. நான் கட்டின ஆகாசக் கோட்டை எல்லாம் அரை நிமிஷத்தில் இடிந்து தூளாய் விட்டதே. ஹே, பாரத புத்திரர்களே, தேசபக்தர்களே! காளி, கருப்பன் முதலான துர்த்தேவதைகளுக்கு ஆடுமாடு பலி கொடுக்கக் கூடாதென்று தடுத்துவரும் நீங்கள் இக்கிழ நரதேவதைக்கு இரையாகும் பெண் பலியைத் தடுக்க மாட்டீர்களா" வென்று கண்ணீர் பெருக நாலாபக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்துப் பரிதவித்தாள். தன்னெதிரில் நடப்பதெல்லாம் அவளுக்குக் கனவாய்த் தோன்றிற்று. சித்தப்ரமை கொண்டவள் போல் ஆகாசத்தை நோக்கிக்கொண்டிருந்தாள். ஜெகஜ் ஜோதியாய் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்த ஆகாசத்தில் திடீரென்று மேகம் சூழ்ந்து கொண்டது. கிழமாப்பிள்ளை தன் கையால் நடுக்கத்தோடு பட்டுவின் கழுத்தில் மாங்கல்ய சூத்ரத்தைக் கட்டினார். உடனே அங்கிருந்த ஓர் பெண் முகாரி ராகத்தில்—"என்றைக்கு சிவக்ருபை வருமோ, ஏழை எங்கள் மனச்சஞ்சலம் அறுமோ" என்று பாடத் தொடங்கினாள். "பெண்களின் வாழ்க்கையை நிர்மூல மாக்கும் ஏ பாழும் சமூகமே! இதோ நினக்கு பலியானேன்" னென்று பிரலாபத்தோடு ஓர் பூங்கொடி பூமியில் சாய்ந்தது.





கோஜு மண்டபம்



“ அல்லிக்குளத்தருகே ஆழ்ந்த யோசனை ஏன்? ”

# ஜியார்ஜியா

ஸ்ரீமதி ஜி. கிரிஜா

ஜியார்ஜியா ஐரோப்பாவிலுள்ள ஒரு சிறிய தேசம். இதன் பரப்பளவையோ எல்லைகளையோ திட்டமாகக் குறிக்கமுடியாது. இது கருங்கடல் ஆர்மீனிய, அஸர்பீஜன் குடியரசுகள், தாகஸ்தான், காகாஸஸ் மலைகளால் சூழப்பட்ட நாடு. மஹாயுத்தத்துக்குப் பின் 1919ம் வருஷம் மார்ச்சு மீ சர்வஜனப் பிரதிநிதி சபையார் இதை ஒரு ஜனநாயகக் குடியரசாக ஸ்தாபனம் செய்தனர். அதன் பிற்பாடும் அது ரஷ்யர்கள், துருக்கியர்கள், ஆர்மீனியர்கள் முதலியவர்களால் பலதடவைகள் தாக்கப்பட்டிருக்கிறது. பலபகுதிகள் அந்த நாட்டினரால் கைப்பற்றப்பட்டன.

இந்த சிறிய தேசத்தின் ஜனத்தொகை சுமார் அரைக்கோடி. இந்நாடு மிகவும் அழகும் வசீகரமான காட்சிகளும் நிறைந்தது; நிலவளம் மிகுந்தது; பலவித உலோகப் பொருள்கள் இங்கே எதேஷ்டமாகக் கிடைக்கின்றது. இதன் சீதோஷ்ணமும் வாழ்க்கைக்கு ஒத்ததாக அமைந்திருக்கிறது. இந்நாட்டைச் செழிக்கச் செய்வது ரையோன், கூரா என்ற இரு பெருநதிகளே. பலமலைகளும் உண்டு. முக்கிய உலோகப் பொருள்கள் செம்பும், இரும்பும். காடுகள் எதேஷ்டம். மரச்சாமான்கள் மலிவு. சோழம் முதலிய தானியங்களும், பலவித இன்கனி வர்க்கங்களும் பயிர் செய்யப்படுகின்றன. முக்கிய எற்றுமதிப்பொருள் திராட்சைரசம்.

இந்நாட்டுக்கு தலைநகரம் டைப்ளிஸ் (Tiflis). இது ஜனநாயக ஆட்சி முறைக்குட்பட்டதாயிருந்தது. தங்கள் அரசியல் தலைவரை தாங்களே தேர்ந்தெடுத்து சட்ட நிருபண சபைக்குட்பட்டு அரசியல் நிர்வாகம் நடத்தி வந்தனர். தற்சமயம் இது ஒருவாறு ரஷ்யாவின் ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

ஜியார்ஜியா புருஷர்கள் பலசாலிகள்; நல்ல உயரமும், முகவிலாசமும் படைத்தவர்கள். தங்கள் நாடு சுதந்திரத்துடன் திகழ வேண்டுமென்ற ஆவல் கொண்டவர்கள். பொதுவாக நல்ல குணமும், விருந்தினர்களிடம் அன்புடனும் நடந்து கொள்ளும் பான்மையினர். விருந்தினர் தெய்வதூதர்கள் என்று மதிக்கப்பட்டு உபசரிக்கப்படுகின்றனர். இவர்களின் நாகரீகம் பெர்ஷிய நாகரீகத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறது. சங்கீதத்தில் இவர்களுக்கு அதிக ஆசை. இவர்கள் உழுவதற்கு ஒரு எருக்கு 10 ஜோடி எருதுகள் கட்டுகிறார்கள்.

## ஸ்திரீகள்

ஜியார்ஜிய மங்கையர்கள் வெகு வனப்பும் வசீகரமும் உள்ளவர்கள். தூயமனமும், குளிர்ந்த உள்ளமும் படைத்தவர்கள். அவர்களுக்கு சூது வாது தெரியாது. அந்த நாட்டின் சீதோஷ்ண ஸ்திதி, இயற்கை யமைப்புக் கேற்றவாறு அவர்கள் நல்ல தேககட்டும் பலமும் உடை

யவர்களாயிருக்கின்றனர். சுதந்திரமாகத் திரிவார்கள். ரொட்டிசுடுவது, வீட்டு வேலைகளை கவனிப்பது முதல் வயல் வெளிகளிலும் ஜியார்ஜிய மாதர்கள் ஈடுபடுகிறார்கள். புருஷர்களைவிட இவர்கள் அதிக சுறுசுறுப்பாயிருப்பது மன்னியில் பொறுப்பான காரியங்களையும் கவனித்துச் செய்து வருகின்றனர். ஜியார்ஜியாவில் ஆண் பிள்ளைகள்பாடு யோகம்தான். சுகஜீவிகளாய் வாழ்ந்து வருகிறார்கள். அனேக குடும்பங்களில் புருஷர்கள் உலாத்துவதற்காக வெளியே சிறிது நேரம் செல்வதைத் தவிர மற்ற நேரமெல்லாம் வீட்டுக்குள்ளேயே இருந்து உல்லாசமாகப்பொழுது போக்குவார்கள். ஸ்திரீகள் ஆகவேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் செய்து கொள்கிறார்கள். தங்கள் வேலைகளை இம் மங்கையர்கள் வெகு உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் செய்து கொள்வதைப் பார்க்க நம்மனம் ஆனந்தமடையும். அவர்கள் அவ்வளவு சாமர்த்திய சாலிகளாக இருக்கின்றனர்.

பெண்களுக்கு இயற்கையான சுபாவமான அழகிய வர்ண ஆடைமீதுள்ள ஆசை இவர்களுக்கும் உண்டு. தங்களை பலவித கலர் துணிகளால் செய்யப்பட்ட ஆடைகளைக்கொண்டு அலங்கரித்துக் கொள்ளுவார்கள். இத்தேசத்து மங்கையர்கள் காலையில் நதிகளில் ஸ்நானம் செய்துவிட்டு நம் நாட்டு நங்கையர்களைப் போலவே ஆற்றில் துணிமணிகளையும் துவைத்துக்கொள்ளுகிறார்கள். ஸ்திரீகள் வெள்ளியால் செய்யப்பட்ட ஒட்டியாணங்கள் அணிந்து கொள்ளுகிறார்கள். தலையில் ஒரு வெல்வெட் பட்டை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப் பட்டையில் ஒரு முகத்திரையும், இரண்டு சவுரி மயிர் குஞ்சங்களும் தொங்கிக்கொண்டிருக்கின்றன. விவாஹ சமயத்திலும் பெண்கள் வெண் முகத்திரை அணிகின்றனர். விதவைகளும், குழந்தைகளைச் சாகக் கொடுத்தவர்களும் ஆபரணங்களைக் களைந்து வெண்ணிற முகத்திரை போட்டுக்கொள்ளுகிறார்கள். கல்யாணப் பெண்ணும் அவளது ஆண் உறவினர்களும் ஒரு ஜாரட் வண்டியில் ஏறிக்கொண்டு அதை நாலா பக்கமும் கண்டபடி வேகமாக ஓட்டுவார்கள். ஊர்வலத்தில் நண்பர்களுக்கு ரொட்டி, மாமிசத்துண்டம், திராட்சை ரசம் முதலியன கொடுக்கப்படுகிறது. பின் கச்சேரிகள் நடைபெறுகின்றன. ஊர்வலம் முடிந்து தம்பதிகள் வீட்டுக்குள் நுழையும்போது மணமகன் மணப் பெண்ணைத் தோளில் தூக்கிக்கொண்டு செல்லவேண்டும்.

——(o)——



# பத்மினி

ஸ்ரீமதி எஸ். கண்ணம்மாள்

பதிமூன்றாவது நூற்றாண்டில் இந்தியாவில் படையெடுத்து வந்த முகம்மதிய அரசர்களில் அல்லாவுதீன் கில்ஜி என்பவர் மிகவும் கீர்த்திபெற்றவர். அவர் தென்னிந்தியா முழுவதும் தன் வசப்படுத்திக் கொண்டார். கி.பி. 1303வது வருஷத்தில் அல்லாவுதீன் ராஜபுதனத்தில் உள்ள சித்தூரை முற்றுகை செய்தார். அப்பொழுது சித்தூரில் ரஜபுத்திர வீரராகிய பீம்ஸிங் என்பவர் அரசாட்சி செய்து வந்தார். அவருடைய மனைவி பத்மினி ஒப்பில்லா ரூபவதி. பத்மினியின் அழகைப் பற்றி நாடெங்கும் அனைவரும் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இதைக் கேள்விப்பட்ட அல்லாவுதீன் அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்று எண்ணினார். முக்கியமாக அந்தக் கெட்ட எண்ணமே அவர் சித்தூரை முற்றுகை செய்ததற்குக்காரணம்.

அல்லாவுதீன் தான் சித்தூரை எளிதில் ஜெயித்து விடலாம் என்று கர்வம் கொண்டிருந்தார். ஆனால் அந்த காலத்தில் ஆண்மையும் தேசபக்தியும் பெற்றிருந்த ராஜபுத்திர சுத்த வீரர்களை ஜெயிப்பது அவ்வளவு சுலபமல்ல. வெகு தீரத்துடன் சண்டை செய்த பீம்ஸிங்கைத் தோற்கடிக்க முடியாமல் போனதால் அல்லாவுதீன் அவருடன் சமாதானம் செய்து கொண்டார்.

அல்லாவுதீன் பத்மினி தேவியின் திருமுகத்தை ஒரு முறை பார்த்து விட்டுத் திரும்பிப்போய் விடுவதாக சொல்லி அனுப்பினார். அதற்கு அரசர் சம்மதிக்கவில்லை. பிறகு அல்லாவுதீன் அவளுடைய பிரதி பிம்பத்தையாவது கண்ணாடியில் தனக்கு ஒரு முறை காட்ட வேண்டுமென்று மிகவும் நயந்து கேட்டு கொண்டார். கடைசியாக பீம்ஸிங் உடன்படவும் முகம்மதிய அரசர் பத்மினியின் மதிவதனத்தைக் கண்ணாடியில் கண்டு பிரமித்துப்போனார். எவ்விதத்திலாவது அக்கட்டழகியை அடைய வேண்டுமென்ற துராசை அவருக்கு அதிகமாயிற்று. அல்லாவுதீன் கோட்டையை விட்டு திரும்பிப் போகும்போது வஞ்சகமாக பீம்ஸிங்கை சிறிது தூரம் அழைத்துச் சென்று திடீரென்று அவரை சிறை பிடித்து விட்டார்.

அல்லாவுதீன் பத்மினி தன்னிடம் வந்து சரண் புகுந்தாலொழிய பீம்ஸிங்கை விடுவிக்க முடியாதென்று ராஜபுத்திரர்களுக்குத் தெரிவித்தார். ராஜ்யத்தில் எல்லோரும் இதைக்கேட்டு என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து போனார்கள். அப்பொழுது புத்தி கூர்மையுள்ள வீரமங்கை பத்மினி ஒரு உபாயம் செய்தாள். பலாத்காரத்தினால் வெல்லக்கூடாத பகைவனை யுக்தியினால் ஜெயிக்க வேண்டுமென்று தீர்மானித்தாள். தீர புருஷராகிய தன்கணவனை சிறைப்படுத்திய சங்கதியைக் கேட்க அவள் மனம் ஆழ்ந்த துயரமடைந்தது. சிறந்த போர்வீரர்களும் மந்திரிமார்களும் அரசருக்கும் பத்மினிக்கும் எதிர்பாராத ஆபத்து நேரிட்டதைப் பற்றி கவலையுற்று தப்பும் மார்க்கம் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பத்மினியோ தன் துயரத்தையும் மறந்தவளாய் மேலும் நடக்க வேண்டிய காரியத்தில் கவனம் செலுத்தினாள். அல்லாவுதீனைத் தான்

மணப்பதாக செய்தி சொல்லி அனுப்பினாள். தன்னுடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி அவள் தாதிப் பெண்களுடன் மூடு பல்லக்குகளில் வருவதாகவும் அறிவித்தாள். அல்லாவுதீன் இச்செய்தி கேட்டு அளவில்லா ஆனந்தமடைந்து அவ்வாறே தன் நகரத்துக்கு வரும்படி சொல்லியனுப்பினார்.

எழுநூறு பல்லக்குகள் தயாரிக்கப்பட்டன. ஒவ்வொன்றிலும் ஒரு ராஜ புத்திர போர்வீரனை பெண் வேடத்துடன் அமர்த்தி பத்மினி தானும் ஒரு பல்லக்கில் ஏறிக்கொண்டாள். ஒவ்வொரு பல்லக்கையும் அரண்மனை சிப்பாய்கள் போகிகளைப்போல் வேடந்தரித்து தூக்கிச் சென்றார்கள். பல்லக்குகள் அல்லாவுதீன் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தன. பத்மினி கடைசி முறையாக ஒரு தடவை தன் கணவனைக் கண்டு விடைபெற்று வருவதாக அல்லாவுதீனுக்குச் சொல்லி அனுப்பினாள். அவர் அதற்கு சம்மதிக்க பல்லக்குகள் பீம்ஸிங் வைக்கப்பட்டிருந்த சிறைக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

பத்மினி தன் கணவனை அழைத்துக் கொண்டு ஒரு பல்லக்கில் ஏறி இருவரும் ரகசியமாக ஊரைவிட்டுக் கடந்தார்கள். உடனே மாறு வேடந்தரித்திருந்த ராஜ புத்திர வீரர்கள் முகம்மதியர்களை எதிர்த்துச் சிதர அடித்தார்கள். அல்லாவுதீனுக்கு சங்கதி தெரிவதற்குள் அனைவரும் தப்பி ஓடிவிட்டார்கள். அல்லாவுதீன் இதைக் கேள்விப்பட்டதும் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைப்பற்றி வெட்கி வருத்தமடைந்தான். தப்பியோடியவர்களைத் திரும்பப் பிடிக்க அவன் செய்த முயற்சிகள் வீணாயின. சித்தூரில் அரசரும் ராணிபத்மினியும் திரும்பவந்து சேர்ந்ததை பிரஜைகள் திருவிழாவைப்போல் கொண்டாடினார்கள். ராணி பத்மினியின் சாமர்த்தியத்தையும், மனோதைரியத்தையும் பற்றி அனைவரும் புகழ்ந்து பேசிக் கொண்டார்கள்.

அல்லாவுதீன் ஒரு பெண்மணி இவ்வித சூழ்ச்சி செய்து தன்னை அவமானப்படுத்தி விட்டதை நினைத்து அளவில்லாத கோபமடைந்தான். ஆனால் பத்மினியின் சுந்தர வதனமும், வசீகர தோற்றமும் அவனுடைய மனதில் வேரூன்றி விட்டதால் அவள்மீது கொண்ட மோகத்தை மறக்க முடியாதவனாக துடிதுடித்தான். திரும்பவும் ஒரு பெரும்படையைச் சேகரித்து வீராவேசத்துடன் சித்தூரை முற்றுகை செய்தான். பிறகு நடந்த கோரமான யுத்தத்தில் பீம்ஸிங் இறந்து வீர சொர்க்கம் அடைந்தார்.

பீம்ஸிங் இறந்தார் என்ற செய்தியைக் கேட்ட பத்மினி இடியுண்ட நாகம்போல் பயந்து மனமுடைந்தவளாய் நாதனை இழந்த தனக்கு இனி வாழ்வு வேண்டாமென்று தீர்மானித்து அக்னிப்ரவேசம் செய்தாள். ராஜ புத்திரர்களைத் தோற்கடித்த அல்லாவுதீன் இனி பத்மினி தன் கையில் சிக்கிக்கொண்டாள் என்று வெகு ஆவலுடன் கோட்டைக்குள் நுழைந்து அரண்மனையில் பத்மினியைத் தேடினான். அம்மங்கை உயிர் நீத்தாள் என்று அறிந்து திடுக்கிட்டு அவளுடைய கற்பின் சிறப்பை நினைத்து வியப்படைந்தான். ராஜ புத்திரர்கள் சரித்திரத்தில் பத்மினி அழியாப் புகழை நிலைநாட்டினாள். அவளுடைய வீரம் ததும்பும் மனோதைரியமும், ஆபத்து வந்த காலத்தும் சற்றும் மனங் கலங்காது நின்ற புத்திகூர்மையும், தேசபக்தியும், உயர்ந்த கற்பும் நமது பாரத சகோதரிகளுக்கு ஒரு சிறந்த உதாரணமாக விளங்குமென்பது நிச்சயம்.



# முடக்கொற்றான்

(முடக்கத்தான்)

திரு. ஸி. எஸ். ஜகதீச சுந்தரம்

தமிழ் நாட்டில் முடக்கொற்றான் என்னும் கொடியின் கீரையைப்பற்றி அறியாதார் எவருமிலர். இது எங்கும் கிடைக்கக்கூடியது. சகல வித வாதரோகங்களுக்கும் குணந்தரவல்லது; சினைப்பு, கிரந்திகரப்பான், மலக்கட்டு, கீல்வாயு, கை கால் பிடிப்பு, இடுப்புவலி, சூலை, பக்கவலி, வயிற்றுவலி, வயிற்று உப்பசம், வாதகுன்மம் முதலிய ரோகங்களைத் தீர்க்கவல்லது. ஸ்திரீகளுக்கு மாதாந்த ருதுகாலத்தில் ஏற்படும் வயிற்றுவலியையும் விலக்கி, கருப்பையையும் சுத்தமாக்கி, தேகாரோக்கியத்தையும் உண்டாக்க வல்லது. ஆதலின் சூதகவாய்வுடைய பெண்கள் இதனை வாரத்திற்கொரு முறையேனும் உபயோகித்து வந்தால் சூதக சம்பந்தமான வியாதிகள் தீர்ந்து சுகமடைவர். வாயுவினால் கஷ்டப்படும் மக்கள் முடக்கொற்றான் சாற்றோடு பூண்டு (வெள்வெங்காயம்) சேர்த்து $1\frac{1}{2}$ அல்லது 2 அவுன்ஸ் சிற்றாமணக்கெண்ணெயில் தாளிதஞ் செய்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் நான்கு ஐந்துமுறை பேதியாகும்; வாயுவைக் கண்டிக்கும். அவரவருக்குத் தகுந்தபடி எண்ணெயையும் சாற்றையும் குறைத்தோ மிகுதிப்படுத்தியோ சேர்க்கலாம்.

இளங்கீரையை நல்லெண்ணெயிலாவது விளக்கெண்ணெயிலாவது வதக்கி, அதனோடு இஞ்சி, பச்சை மிளகாய், கொத்தமல்லிக்கீரை, உப்பு இவை சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துத் துவையல் செய்யலாம். பச்சை மிளகாய் பிடிக்காதவர்கள் மிளகாய் வற்றலை உபயோகிக்கலாம். பொரித்தகாயமும் கொஞ்சம் சேர்க்கலாம். முடக்கொற்றானை வதக்கும்போதும் தாளிதஞ் செய்யும் போதும் நெய் சேர்க்கவே கூடாது. நெய் சேர்த்தால் அதன் குணம் கெட்டுப்போகும்.

எண்ணெயில் வதக்கிய முடக்கொற்றானைப் பருப்புடன் கூட்டிச் சாம்பார் செய்யலாம். வதக்கிய கீரையை அரைக்காமல், அகத்திக்கீரைப் பருப்புச் சாம்பார் செய்வது போலச் செய்யலாம். மிளகு, பூண்டு, சீரகம், புளி இவற்றைச் சேர்த்து கீரையை ரசம் வைத்துக்கொள்ளலாம். முருங்கைக் கீரையும் பருப்பும் தேங்காயும் சேர்த்துப் பொரியல் செய்வது போல இதனையும் செய்து உண்ணலாம், கூட்டும் செய்யலாம்.

சூலைப்பிடிப்பு சொறிசிரங்கு வன்கரப்பான்
காலைத் தொடும்வாதம் கன்மலமுஞ்—சாலக்
கடக்கத்தா னோவிடுங் காசினியை விட்டு
முடக்கத்தான் றன்னை மொழி

# செய்தித்திரட்டு

## உலகத்தின் பெரிய நகரங்கள்

பரப்பளவில் உலகத்திலேயே மிகவும் பெரிய நகரம் பிலிப்பைன் ஆர்ச்சிபிலாகோவின் தென்கோடியிலுள்ள ஜம்போங்கா (Zamboanga) என்பதுதான். அதன் பரப்பளவு 1059 சதுரமைல்கள். ஆனால் ஜனத்தொகை மிகவும் குறைவுதான்; ஒரு லட்சம்தான். லண்டன் நகரத்தின் பரப்பளவு 699 சதுரமைல்கள். ஜெர்மனியின் தலை நகரமான பெர்லினின் பரப்பளவு 348 சதுரமைல்கள். ஜனத்தொகையிலும், செல்வவளத்திலும் உலகத்திலேயே முதன்மையான ஸ்தானம் வகிக்கும் நியூயார்க் நகரத் (ஐக்கிய அமெரிக்காவின் தலை நகரம்) தின் பரப்பளவு 348 சதுரமைல்கள்.

... ... ...

## கலாசாலை மாணவிகளுக்கு கட்டாய தேகப்பயிற்சி

அலஹபாத் யுனிவர்ஸிடியார் பி. ஏ, பி. எஸ். ஸி, முதலிய வகுப்புகளில் படிக்கும் மாணவிகளுக்கு கட்டாய தேகப்பயிற்சி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். 'வாலிபால்' 'பாஸ்கட்பால்' 'பாட்மின்டன்', டென்னிஸ் முதலியவைகள் பயிலவேண்டும். மேல் வகுப்புக்கு தேரிப் போவதற்கு தேகப் பயிற்சி வகுப்புக்கு 50 நாளாவது குறைந்தது ஒவ்வொரு மாணவியும் ஆஜராயிருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

## அனாதை ரக்ஷக நிலையம்

ரீவா சமஸ்தானத்தில் திக்கற்ற பெண்களை ரட்சிக்கும் பொருட்டு அனாதை ரக்ஷக நிலையம் ஏற்படுத்த ரீவா மஹாராஜா 45000 பெருமான நன்கொடை அளித்துள்ளார்; ரொக்கம் 25000 மும், கட்டடங்கள் 20,000 ரூபாய் பெறுமானதும். திக்கற்ற பெண்களும், விதவைகளும் இங்கு உதவி பெறுவர். இதை நிர்வஹிக்க பிரபலஸ்தர்கள் அடங்கிய ஒரு கமிட்டியும் நியமிக்கப் பட்டிருக்கிறது.

... ... ...

## ரேடியோ உத்தியோகத்துக்கு மாதர் போட்டி

திருச்சி ப்ராட்காஸ்டிங் ஸ்டேஷன் டைரக்டர் பதவிக்காக போட்டியிட்டவர்களில் 9 பேருக்கு அகில இந்திய பப்ளிக் செர்வீஸ் கமிஷன் பேட்டியளித்தது. அதில் இருவர் ஸ்திரீ அபேட்சகர்கள். டாக்டர் ஸி. மீனாக்ஷி என்ற சரித்திர ஆராய்ச்சியாளரும், டில்லி ஸ்ரீமதி கல்யாண சுந்தரி சீதாராமனும் மனுப் போட்டு பேட்டிகண்டனர்.

... ... ...

## மதமற்றவருடன் மணம் செய்யாதே!

ஒருவர் மதமற்றவருடன் செய்து கொள்ளும் மணம் செல்லுபடியாகுமா



என்ற பிரச்சினை கல்கத்தா ஹைக்கோர்ட் நீதிபதி கனம் சேன் அவர்களால் தீர்த்து வைக்கப்பட்டது. அதன் விவரமாவது:-

ரத்தன் என்பவர் மார்கரெத்ஹே என்ற ஜெர்மனிய மங்கையை 1936ம் வருஷம் நவம்பர்மீ 3வ. ஸ்பெஷல் விவாகச்சட்டபடி (Special Marriage Act of 1872) மணம் செய்து கொண்டார். ரத்தன் விவாகரிஜிஸ்திரார் முன் தான் ஹிந்து என்று கூறினார். மார்கரெத்ஹே தான் எம்மதத்தையும் சேர்ந்தவளல்ல வென்று சொல்லியிருந்தாள். ரிஜிஸ்திரார் விவாஹத்தைப் பதிவு செய்து கொண்டார். இது பற்றிய வழக்கில் தீர்ப்புக் கூறும்போது மேற்படி சட்டத்தின் 2வது பிரிவுப்படி ஒரு ஹிந்துவுக்கும், மதமற்ற ஒருவருக்கும் நடக்கும் விவாகம் சட்டப்படி செல்லுபடி யாகாதென்று திரு. சென் கூறிவிட்டார். ரிஜிஸ்திரார் 2வது பிரிவின் தாத்பர்யத்தை உணராதபடி மணத்தை பதிவு செய்தது பிசகு என்றும் கூறினார். தீவிர சமூக சீர்திருத்தவாதிகளே உஷார்!

... ... ...

## தொழிலாள ஸ்திரீகளுக்கு நன்மைகள்

ஒரிஸா சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீமதி லக்ஷ்மி தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஸ்திரீகளுக்கு, பிரசவத்துக்கு முன் 7 வாரமும், பின்னர் 4 வாரமும் 8 அணச் சம்பளத்துடன் லீவு கொடுக்க வேண்டுமென்றும், இந்த சமயத்தில் ஸ்திரீயை வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தக் கூடாதென்றும், இதை மீறும் தொழிற்சாலை முதலாளிகள் ரூபாய் 250 வரை அபராதத்துக்குள்ளாக்கப்படவேண்டு மென்றும் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கிறார். நம் மாகாண ஸ்திரீ பிரதிநிதிகள் கைகாட்டி மரங்கள் போலிருக்காமல் உருவான மசோதாக்கள் இனியாவது கொண்டுவர முன்வருவார்களா?

... ... ...

## பெண்களுக்கு நூற்றல் பயிற்சி

படித்த ஸ்திரீகளிடையும், முக்கியமாக மணமாகாத யுவதிகள், விதவைகள், முதலியவர்களிடையும் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக பாட்னாவில் உள்ள மாதர் சங்கத்தார் ஒரு கைத்தொழிற்சாலை ஆரம்பித்துள்ளனர். அங்கு ஸ்திரீகளுக்கேற்ற தொழில்களாகிய நூல் நூற்றல், நெசவு முதலியன கற்றுக் கொடுக்கப்படும். இத்திட்டத்தை ஆதரித்து சர்க்காரும் 600 ரூபாய் 'க்ராண்டு' கொடுத்திருக்கிறார்கள்.

... ... ...

## பொம்மை "லைப்ரரி"

அமெரிக்காவைச் சேர்ந்த அட்லாண்டாவில் குழந்தைகளுக்கு யாதொரு கட்டணமுமில்லாமல் விளையாட்டு பொம்மைகள் இரவல் கொடுக்கும் "லைப்ரரி" (பொம்மைச்சாலை) ஒன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. குழந்தைகளின் பெற்றோர் அங்கு சென்று வேண்டிய பொம்மைகளை (ஒரு குறிப்பிட்ட நம்பர்) வாங்கிவந்து குழந்தைகளுக்கு கொடுக்கின்றனர். பொம்மைகள் உடைந்து போனால் மட்டும் அதற்குரிய விலையை அவர்கள் சாலை அதிகாரிக்குக் கொடுத்து விடவேண்டும். இதனால் ஏழைக் குழந்தைகளும் விலையுயர்ந்த பொம்மை விளையாட்டுச் சாமான்களை வைத்து விளையாட சந்தர்ப்பம் கிடைக்கின்றது. நல்லயோசனை!

# கதம்பம்

## மீன் மழை

பழைய சுக்கூரில் மங்களி என்ற வயது முதிர்ந்த வேலைக்காரிக்கு மீன் புசிக்க வேண்டுமென்று ஆசையாயிருந்தது. ஆனால் காசு கிடையாது. பகவானை மீன் கொடுக்கும்படி உருக்கத்துடன் வேண்டி வீட்டு வேலையிலீடுபட்டாள். மழை திடீரென பெய்தது. அதில் அவளிருந்த இடத்தில் செகப்புக் குறியுள்ள ஏழு மச்சங்கள் விழுந்தன. ஊர் ஜனங்களெல்லாம் ஆச்சர்யப் படுகின்றனர். காரைக்காலம்மையார் மாங்கனி வரவழைத்தால் மங்களி மச்சங்களை பகவத் கிருபையால் பெற்ருள். வேண்டுவோர் வேண்டுவதை ஈவோன்கண்டாய்!

... ... ...

## 315 கோடி விளம்பர செலவு

ஐக்கிய அமெரிக்க வியாபாரிகள் தங்கள் பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்காகமட்டும் 315 கோடி ரூபாய்கள் வருஷா வருஷம் செலவு செய்கிருர்கள். ஏன் அந்த சாமான்களைப் பார்த்து நாம் ஏமாறமாட்டோம்?

... ... ...

## கீரையின் குணம்

கீரைகளுக்கு ஜீரணசக்தியை அதிகப்படுத்தும் குணம் மட்டுமில்லை. கீரை தினுசுகளில் வைட்டமின் 'ஸி' அதிகமாகக்காணப்படுவதால் க்ஷயரோகக் கிருமிகளைக் கொல்லும் சக்தி கீரைக்கு அதிகமென்று ஜெர்மன் டாக்டர் பெர்ன்ஹார்டு ஹால்ஸ் என்பவர் முப்பது வருட ஆராய்ச்சியின் அனுபவத்தின் பேரில் கூறுகின்ருர்.

## பிரம்மச்சாரிகளுக்கு சனியன்

இத்தாலியில் பிரம்மச்சாரிகளுக்கு மேலும் மேலும் தொல்லைகள் உண்டாகின்றன. அவர்களுக்கு சர்க்கார் ஏற்கனவே அதிகவரி போட்டு வருகின்றனர். விவாகம் செய்துகொள்ளாதவனைக் கண்டால் இத்தாலியில் எல்லோருக்கும் ஒருவித வெறுப்பு. விவாஹம் செய்து கொண்டு முசோலினி படைக்கு சிப்பாய்களாக உழைக்க குழந்தைகள் பெற்றுத் தரவேண்டிய பாஸிஸ்ட் கடமையை அவர்கள் செய்யவில்லை என்பதே அவர்களின் மீதுள்ள ஆத்திரத்துக்கு முக்கிய காரணம். பிரம்மச்சாரிகள் யாரும் இத்தாலியில் மேயராகவோ, சர்க்காரில் பெரிய பதவிகள் வகிக்கவோ கூடாதென்றும் சமீபத்தில் முசோலினி ஒரு உத்தரவு பிறபித்துள்ளார். மனைவிகளை இழந்து, குழந்தையும் பெருத ஏகாங்கிகளுக்கும் இத்தடை உத்தரவு உண்டு. ஏற்கனவே பெரிய வேலையிலுள்ள பிரம்மச்சாரிகளும், ஏகாங்கிகளும் அப்பதவிகளை இப்போது காலி செய்து விடவேண்டும். ராவணதர்பார்!

... ... ...

## தவளை மழை

துருக்கியிலுள்ள புருஸா என்னும் இடத்தில் சென்ற மாதம் தவளை மழை பெய்தது. லட்சக் கணக்கான செத்த தவளைகள் ஆகாயத்திலிருந்து விழுந்தன. தவளை மழை பெய்வது அபசகுனமென்றும், பஞ்சம் வருவதற்கு அது ஓர் அறிகுறி என்றும் துருக்கி மக்கள் கருதுகிருர்கள்.





## ஹரிஜன பெண்கள் ஆசிரமம்

ஹரிஜன அனுதை மகிளாசிரமத்தின் திறப்பு விழா அவுந்து சமஸ்தானதிபதியால் பூனு நகரில் நடத்திவைக்கப்பட்டது. ஹரிஜன அனுதைப் பெண்களின் நன்மைக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் மேற்படி ஆசிரமம் நடந்துவரும். சபாஷ் சமஸ்தானதிபதியே!

... ... ...

## விசித்திர விதவா விவாஹம்

நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த செஸ்டர் பேன் என்ற வாலிபனின் தந்தை திடீரென்று தன் சொத்தைப் பூராவும் இழந்துவிட்டார். பேன் கவலை மிகுதியால் ஓர் நாள் இரவு தன் தோழர்களுடனிருக்கும்போது தான் தனக்கு 10 லட்சம் டாலர் கொடுக்கும் முதல் ஸ்திரீயை அவளின் வயது எப்படி இருந்தபோதிலும் கல்யாணம் செய்துகொள்வதாக சவால் கூறினன். அவன் தோழர்கள் அவன் அப்படிச் செய்தால் இவ்வளவு டாலர்கள் பந்தயம் கட்டுவதாகச் சொன்னுர்கள். உடனே 10 லட்சம் டாலர் பெண்ணைத் தேடிக்கொண்டு பிரான்சுக்கு கப்பல் யாத்திரை வந்தார்கள். பிரான்சில் சீர்பரோவில் அவர்கள் இறங்கியவுடன் பேன் முதலில் பார்த்தவள் மேடம் வென்யூ மாலட் என்ற 60 வயது விதவை. பேனின் நண்பர்கள் அவன் அவளை மணந்துகொள்ளத் தயாராவென்று கேட்டார்கள். பேனுக்கு வயது 20 இருந்தாலும் அவள் இஷ்டப்பட்டால் தான் அவளை மணந்துகொள்ளத் தயார் என்று சொல்லிவிட்டான். நண்பர்கள் கிழவிக்கும், குமரனுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடத்தினுர்கள். இருவரும் சந்தித்தனர். கிழவியும் குமரனை மணந்துகொண்டாள். பேன் பந்தயத்தில் நண்பர்களை வென்ருன். விருத்த விதவையையும் மணந்தான். மேல்நாட்டு நாகரிக விசித்திரங்களில் இது ஒன்று!

... ... ...

## துப்பாக்கி முனையில் மணம்!

ஆல்பர்ட் ஜெரி என்ற ஹங்கேரிய சிப்பாய் 1916-ம் வருஷம் யுத்தக் கைதியாக்கப்பட்டுப் பின் தப்பி ரஷ்ய துருக்கிஸ்தானத்தில் ஒலஸ்கா பவ்லோவ்னு என்ற மாதின் பணியாளாக அமர்ந்தான். வேலைக்கமர்ந்த சில மாதங்களுக்குள்ளேயே எஜமானி, ஜெரியைத் தன்னை மணந்துகொள்ளும்படி வற்புறுத்தினுள். அவன் மறுக்கவே ரிவால்வரைக் காட்டி சுட்டுவிடுவதாக பயமுறுத்தினுள். அவன் பயந்து அவளை மணந்துகொண்டான். ஆனால் மனநிம்மதி கிடையாது. ஏனென்ருல் பவ்லோவ்னு எப்பொழுதும் தன் இடுப்பில் ஒரு ரிவால்வரை மாட்டிக்கொண்டே ஜெரியை பயமுறுத்திக்கொண்டுவந்தாள். சென்ற வருஷம் அவன் தன் நாட்டுக்குப் போகவேண்டுமென்று சொன்னதற்காக அவனை அவள் குத்தி படுகாயப்படுத்தி விட்டாள். அவன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும்போது அவள் இறந்தாள் என்ற "நற்செய்தி" கேட்டு சந்தோஷமடைந்தான். 'விடுதலை' யாகி வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டான்!

# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

### நோய் தீர்க்கும் குன்றுகள்

பாஞ்சாலத்திலுள்ள பேரா என்ற ஊருக்கருகிலுள்ள அமராவாலி, சுரக்கான் வாலி, ஹர்மல்வாலி, ரட்டாபிண்டுவாலி என்ற நான்கு குன்றுகளும் ஒன்றுக்கொன்று அரை மைல் தூரத்தில் இருக்கின்றன. இவைகளுக்குச் சமீபத்திலுள்ள கங்கா என்ற இடத்துக்கு சுக்கிலபட்ச ஞாயிறுகளில் போனவர்களுக்கு கீல் வாத நோய் பரிபூரணமாய் குணமாய் விடுகிறதாம். இதர வியாதிகளும் தீர்ந்து விடுகின்றனவாம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் இங்கு சென்றுவருகின்றனராம்.

... ... ...

### கறுப்பரை வெள்ளையராக்கலாம்

அமெரிக்கடாக்டர் விரோகாயர் என்பவர் கறுப்புநிற நீக்ரோக்களையும் வெள்ளை நிறத்தவராகச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அதற்காக அவர் ஒரு நூதன மருந்தும் கண்டுபிடித்து விட்டாராம். இம்மருந்தை பிரயோகித்து 'அட்டக்கரி' யாக இருந்த ஐந்து நீக்ரோக்களை வெளுக்கச் செய்து விட்டாராம். தான் கண்டுபிடித்திருக்கும் மருந்தை மூளைக்கடியிலிருக்கும் சதைக்கோளத்தில் செலுத்துவதன் மூலம் சர்மத்தின் நிறத்தை மாற்றிவிடலாமென்று அவர் கூறுகிறார்.

### பால் துணி

பாலிலிருந்து நூல் திரித்து அந் நூலைக் கொண்டு நெய்த உயர்தர துணிமணிகள் ஜெர்மனியில் வெகு சீக்கிரத்தில் கிடைக்குமென்று பேருத்தில் நடைபெற்ற சாஸ்திர ஆராய்ச்சி மகாநாட்டில் பல விஞ்ஞானிகள் அறிவித்தனர்.

... ... ...

### பேசும் தபால் கடிதம்

ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில், நண்பர்களுக்கு கடிதம் எழுதுவதற்கு பதிலாக சொந்தவாய்வார்த்தைகளையே தத்ரூபமாக அனுப்புவது சாத்தியமாக்கப்பட்டிருக்கிறது. நகர தபாலாபீஸில் ஒரு கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் குறித்த கட்டணத்தைப் போட்டுவிட்டு அதிலிருக்கும் ஒரு குழாய்க்குள் 100 வார்த்தைகள் வரை பேசவேண்டும். பேசி முடிந்த சில நிமிஷங்களில் கிராமபோன் ரிக்கார்டுபோலிருக்கும் ஓர் உலோகத் தகட்டை இயந்திரம் வெளியே தள்ளுகிறது. இத்தகட்டை எடுத்து தபால் மூலம் அனுப்பிவிடவேண்டியது. அதை அடைந்தவர் கிராமபோனில் அந்த தகட்டை வைத்து ஓட்டினால் முதலில் பேசிய பேச்சு அப்படியே கேட்கிறது!



### அற்புத வாகனம்

ரஷ்யாவைச் சேர்ந்த கேப்டன் விக்டர் திபோஸ்கி என்ற ஆகாயவிமானி ஒரு நூதன 'மோட்டார்கார்' கண்டு பிடித்திருக்கிறாராம். அது நிலம், நீர், வானம் மூன்று இடங்களிலும் சஞ்சரிக்கும் திறமையுடையதாம். முன் பக்கமாகவும் செல்லக்கூடியதாம். பின் புறமாகவும் பிரயாணம் செய்யுமாம். இது நீரில் மணிக்கு நான்கு 'நாட்' தூரமும் (Knots), ரோடில் 60 மைல் வேகமும், ஆகாயத்தில் 120 மைல் வீதமும் செல்ல கூடியது. இதன் நீளம் 12 அடி. தரையில் மூன்று சக்கர மோட்டார் மாதிரி யிருக்கும். ஆகாயத்தில் இது நேரேயே எழுந்து செல்லும். கொஞ்சதூரம் தரையில் ஓடி பின் மேலே எழும்பவேண்டுமென்ற அவசியம் இந்த அற்புத வாகனத்துக்கு இல்லையாம்.

... ... ...

### கடல் பைத்தியம்

லண்டனைச் சேர்ந்த மேஜர் எச். இ. லாங் என்ற மாஜி ராணுவ உத்தியோகஸ்தருக்குக் கடல் பைத்தியம் மிகவும் அதிகம். ஆகையால் அவர் தன் மீதிக் காலத்தை கிரேட் பிரிட்டனுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் கப்பல்களில் மாறி மாறி பிரயாணம் செய்துகொண்டு கடலிலேயே கழிக்கப்போகின்றாராம்!

——:o:——

## மதிப்புரை.

### சிறுவர்களின் விவாகங்களை தடுக்கும் சட்டம்

பால்ய விவாகத் தடை சட்டமாகிய சாரதா சட்டத்தை, அதன் திருத்தங்களுடன் காஞ்சீபுரம் வக்கீல் திரு. கே. அனந்தாச்சாரி பி. ஏ; முகவுரை, பிரிவுகளுக்கு குறிப்புகளுடனும், தமிழில், (இங்கிலீஷில் சட்டமும்) வெளியிட்டிருக்கிறார். இது சமூக சீர்திருத்தவாதிகள் ஒவ்வொருவருக்கும் மிக அவசியமான புஸ்தகம்.

விலை 2 அணாத்தான்.

### லோகசக்தி மலர்கள்

திரு. கே. ராமநாதன் அவர்களால் எழுதப்பட்ட லோகசக்தி மலர்கள் "விடுதலை முரசு"ம், "கோவிந்தவல்லப பந்த்" என்ற இரு சிறு புத்தகங்கள் வரப்பெற்றோம். "விடுதலை முரசு" அரிய கருத்துக்கள் நிறைந்த கதைகளடங்கியது. மற்றொன்று தேசபக்தர் கோவிந்தவல்லப பந்தின் சரித்திரச் சுருக்கம். "முரசின்" விலை அணா 2. "பந்த்" விலை அணா 1. வேண்டுவோர் லோகசக்தி ஆபீஸ், சௌத் கூவம் ரோட், சென்னை என்ற விலாசத்திற்கு எழுதவும்.

# சினிமா செய்திகள்

## பாலசன்யாசி

கன்னிவாடி வந்தேமாதரம் பிக்சர்ஸ் கம்பெனியார் "பாலசன்யாசி" என்ற தேசீய சமூக சீர்திருத்தப்படம் எடுக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்து வருகிறார்களாம். இப்படத்தை ராஜா சந்தர் டைரக்ட் செய்வாரெனச் சொல்லப்படுகிறது.

## மன்மத விஜயம்

சென்னை பிரஸிடென்ஸி அமெச்சூர்ஸ் சங்கத்தார் "மன்மத விஜயம்" என்ற புராணக்கதையை சிறந்த நடிகர்களைக்கொண்டு சினிமாப்படம் பிடிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்து விட்டார்களாம். திரு. சுப்ரமண்யம் இதில் முக்கிய நடிகர். இதில் உயர்குடும்ப ஸ்திரீகளும் நடிப்பாரென்று சொல்லப்படுகிறது.

## நளின சேகரன்

கோவை பிரீமியர் ஸினிடோன் கம்பெனியார் "நளின சேகரன்" என்ற நாவல் கதையை தமிழ்படமாக எடுத்துவருகின்றனர். இதில் எஸ். பி. எல். தனலட்சுமி முக்கிய நடிகை. திரு. ஸி. கே. சாச்சி படத்தை டைரக்ட் செய்கிறார்.

## சுகுணசரஸா

ஓரியண்டல் பிலிம்ஸ் கம்பெனியாரின் "சுகுணசரஸா" அநேகமாய் பூர்த்தியடைந்து விட்டது. கொத்தமங்கலம் சீனிவாசன், எம். எஸ். விஜயாள் முதலியோர் நடிக்கின்றனர்.

## ரம்பையின் காதல்

கோவை முருகன் டாக்கிபிலிம் கம்பெனியார் "ரம்பையின் காதல்" என்ற படத்தை கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவில் வெகு மும்மரமாக தயாரித்து வருகின்றனர். விரைவில் பல ஊர்களிலும் காண்பிக்கப்படும்.

## இடிமுழக்கம்

பம்பாய் இந்தியன் ஆர்ட்பிளேயர்ஸின் முதல் தமிழ்படம் "இடிமுழக்கம்" விஷ்ணு ஸினிடோனில் எடுக்கப்படும். எம். எம். சிதம்பரநாதன், டி. வி. கிருஷ்ணசாமி முதலியவர்கள் நடிக்கின்றனர்.

## ராமதாஸ்

ஏ. எல். ஆர். எம். கம்பெனியார் வேல் பிக்சர்ஸ் ஸ்டூடியோவில் "ராமதாஸ்" படம் எடுக்கப்போகின்றனர். எச். எம். ரெட்டி டைரக்டர், காளி என். ரத்னம், ராஜலக்ஷ்மி பிரதமநடிகர்கள்.

## தியாகபூமி

மதரூஸ் யுனைட்டெட் ஆர்ட்டிஸ்ட்ஸ் கார்பொரேஷன் "தியாகபூமி" என்ற தேசீய கதையை சினிமாப்படமாக மோஷன் பிக்சர்ஸ் கம்பைன் லிமிடெட் ஸ்டூடியோவில் தயாரிக்கின்றனர். இதில் மிஸ். எஸ். டி. சுப்புலக்ஷ்மி, பேபி சரோஜா, பாபநாசம் சிவன் முதலியோர் நடிக்கின்றனர். திரு. கே. சுப்ரமண்யம் டைரக்ட் செய்கிறார்.

# ஆசிரியர் குறிப்புகள்

## தேவதாசி முறை தடை மசோதா

தேவதாசி முறை அல்லது பொட்டுக்கட்டும் வழக்கம் ஆதிகாலத்தில் ஏதோ நல்ல எண்ணத்துடன் பகவத் கைங்கர்யத்தை உத்தேசித்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அந்த முறையை ஆதியில் ஏற்படுத்தினவர்களின் நோக்கம் புனிதமாக இருந்திருக்கலாம். அப்படியல்ல என்று நாம் சொல்ல முன் வரவில்லை. ஆனால் அந்த வழக்கம் நடைமுறையில் இன்று எந்தவிதமான ஆபாச நிலையிலிருந்து வருகிறதென்று நாம் அதிகமாக விஸ்தரிக்க வேண்டியதில்லை. ஆதிகாலத்தில் விரும்பப்பட்ட தூய திருத்தொண்டில் தற்காலம் தேவதாசிகள் மனப்பூர்வமாக ஈடுபட்டிருக்கிறார்களென்று கூற எவரும் முன் வர மாட்டார்கள். பொது மகளிராக (Public Women) விரும்புபவர்களும், அவ்வித ஜீவனத்தை ஓட்டிப்பிழைப்பவர்களும் "பொட்டுக் கட்டிக்கொள்வது" அதாவது குறிப்பிட்ட தெய்வத்தை மணந்து கொண்டு அந்த தேவதா ஆலயத்துக்கு குறிப்பிட்ட பணிகளைச் செய்து வருவது என்ற போர்வையை போர்த்துக் கொண்டு விபசாரத்திலீடுபட்டிருக்கின்றனர் என்ற விஷயம் யாவரும் அறிந்ததே. ஒரு சிலர் இப்பொதுப்படையான நிலைக்கு மாறாக உண்மை பகவத் பக்தைகளாக இருக்கலாம். ஆனால் அபூர்வம்.

எப்பொழுது விபசாரம் சட்டப்படி தடுக்கப்பட்டுவிட்டதோ அப்பொழுது தேவதாசி முறையும் ஒழியவேண்டியது தான். இதை ஒழிக்கவேண்டுமென்று அகில இந்திய மாதர் சங்கத்தினர் முதலிய மாதர் பிரதிநிதி சபைகளும், ஸ்ரீமதிகள் முத்துலக்ஷ்மி ரெட்டி, அமிர்தகௌரி, டாக்டர் தாராபாய் முதலியோர் வெகுகாலமாக கிளர்ச்சி செய்து வருகின்றனர். இம்முறை பெரும்பாலும் தென்னாட்டில்தான் மிகவும் கையாளப்பட்டு வருகிறது. சமீபத்தில் இதை ஒழிக்க சென்னை பிரதமந்திரியின் பார்லிமெண்டு பிரதம காரியதரிசி திரு. ஏ. காளேஸ்வர ராவ் ஒரு மசோதா கொண்டுவரப் போவதாக நாம் பத்திரிகைகளில் வாசித்து மகிழ்ச்சிகொண்டோம். ஏது சென்னை சர்க்கார்கூட இதுபோன்ற மாதர் முன்னேற்ற சட்ட திட்டங்கள் கொண்டுவரத் துணிந்துவிட்டார்கள் போலிருக்கிறதே; இனி சென்னைக்கு நல்ல காலம்தான் என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தோம். மசோதா ஆகஸ்டு 17உ சட்ட சபைக்கூட்டத்தில் பிரேரிக்கப்படும் என்றும் பத்திரிகைகளில் செய்தி பறந்தது. ஆனால் திடீரென்று பிரதம காரியதரிசி தனிப்பட்ட அங்கத்தினர் ஹோதாவில் மசோதா கொண்டுவருவது சரியல்ல என்ற நொண்டிச் சாக்கைக்கூறி நவம்பர் மாதம் கூடப்போகும் சட்ட சபைக் கூட்டத்தில் அதே மசோதாவை ஸ்ரீமதி லக்ஷ்மி சங்கரய்யர் கொண்டுவர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம். இந்த நொண்டிச் சாக்கை அறிவுள்ள எவரும் உண்மையென்று ஒப்புக்கொள்ளமுடியாது. பிரதம பார்லிமெண்டு காரியதரிசி தனிப்பட்ட ஹோதாவில் மசோதாகொண்டு வரக்கூடாதென்ற விதியை அப்பெரியார் உணராமலா இது கால பரியந்தம் அப்பதவியை வகித்து வருகிறார்? அப்படிக்கின்றி அதுமாதிரி ஒருவிதி யிருக்கிற தென்பதை அவர் சட்ட சபைக் கூட்டம் கூடிய பின்தான் தெரிந்துகொண்டாரா? இம் மசோதாவின் விவரம் அவருடைய பேரில் ஆகஸ்டு 13-ம்

தேதி "ஹிந்து"வில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதே. இந்த தடங்கல் திடீரென்று தோன்றியதா என்ன? அல்லது "திரைக்குப்பின்" ஏதாவது சம்பவங்கள் நடந்தனவா? நம் பிரதம மந்திரி, மாதர்கள் சீர்திருத்த விஷயங்களை ஒத்திப்போடுவதிலேயே கருத்தாயிருக்கிறாரென்று ஒரு வதந்தி யிருந்து வருவதே இந்த ஒத்திவைப்புக்கும் காரணமாயிருக்குமோவென்று பல மாதர்களிடை சந்தேகம் உண்டாகி யிருக்கிறது.

ஏதோ எப்படியிருந்தாலும் மசோதா பொட்டுக் கட்டும் வழக்கத்தை அடியோடு தடைசெய்யும் நோக்கத்துடன் அமைந்திருக்கிறது. தவிர பொட்டுக்கட்டுபவர்களுக்கும், கட்டிக்கொள்ள உதவி புரிபவர்கட்கும் 500 ரூபாய் அபராதம் அல்லது ஒரு வருஷ சிறை தண்டனை (Simple imprisonment) அல்லது இரண்டும் விதிக்க வேண்டுமென்று மசோதா கோருகிறது. பொட்டுக் கட்டிக்கொண்ட பெண்கள் மணம் செய்துகொண்டால் அது சட்டப்படி அங்கீகரிக்கப்படுமென்றும், அவர்களின் சந்ததிகளும் சட்டப்படி அங்கிகாரம் பெறுவார்களென்றும் மசோதா சொல்கிறது. ஏதோ இன்னும் வீண் காலந் தாழ்த்தாது அடுத்த கூட்டத்திலாவது இதைச் சட்டமாக்கும்படி சட்டசபையிலுள்ள நம் மாதர் பிரதிநிதிகளை நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## விருத்தர்—யுவதி விவாகத்தடை மசோதா

வயோதிகர்கள் வாலிப மங்கையரை மணக்கும் வழக்கம் அம் மங்கையரின் வாழ்க்கையை பாழ்படுத்துவதாகும் என்று நாம் கூறுவோம். நாம் இவ்விதழில் பிரசுரித்திருக்கும் "நரதேவதைக்கு பெண் பலியா?" என்ற கட்டுரையில் இதைப் பற்றிய விஷயங்கள் விளக்கப்பட்டிருப்பதால் நாம் இங்கு அதைப்பற்றி அதிகம் கூற விரும்பவில்லை. இந்த வழக்கத்தை சட்ட பூர்வமாகத் தடை செய்யும் நோக்கத்துடன் ஒரு மசோதாவை பம்பாயில் ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி (பம்பாய் உள்நாட்டு மந்திரியின் மனைவி) கொண்டுவந்திருப்பது இம் முறையை மக்கள் எவ்வளவு தூரம் வெறுக்கின்றனர் என்பதையும், மாதர்களிடை சீர்திருத்த ஆர்வம் எவ்வளவுதூரம் ஓங்கி நிற்கின்றது என்பதையும் காட்டுகிறது. ஸ்ரீமதி முன்ஷியின் ஊக்கத்தையும், ஆர்வத்தையும் நாம் போற்றுகின்றோம். அவர் மசோதா 45 வயதுக்கு மேற்பட்ட ஆடவர்கள் 18 வயதுக்குட்பட்ட கன்னியரை மணம் செய்யக்கூடாதென்று கூறுகிறது. இப்படிப்பட்ட தாரதாரமில்லாத விவாஹம் கூடாதென்று கூறுகிறார். இச்சட்டத்தை மீறி விவாகம் செய்பவர்கட்கும், செய்ய உதவி செய்யும் இதரர்கட்கும், அதில் கலந்துகொள்ளும் புரோகிதருக்கும் ரூபாய் 1000 வரை அபராதம் அல்லது ஒருவருஷ சிறைதண்டனை அல்லது இருதண்டனைகளும் விதிக்கலாம் என்று மசோதா கூறுகிறது. மசோதாவின் சில பிரிவுகள் தீவிரமானதாகத் தோன்றலாம். ஆனாலும் சமூக ஊழியர்களிடை இந்த வழக்கத்தின் மீது அவ்வளவு ஆத்திரம் இருந்து வருகிறதைக் காண யார்தான் இந்த உத்வேகத்தைத் தடைசெய்ய முடியும்? இது போன்ற சட்டங்களை பரோடா, மைசூர், கோட்டா முதலிய இந்து சமஸ்தானங்கள் நிறைவேற்றி யிருக்கின்றனவென்று ஸ்ரீமதி லீலாவதி தனது விளக்கத்தில் குறிப்பிட்டிருப்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டுகிறோம். சமூக ஊழல்கள் லகுவில் தாங்களாகவே தீருவதற்கு வழியில்லையானால் தீவிர சீர்திருத்த வாதிகள் சட்டத்தின் உதவியை நாடுவார்களென்பதை எல்லோரும் உணர்ந்து அந்தமாதிரியான வற்புறுத்தல் உண்டாகு முன்னமே அவைகளைக் களைந்தெறிவார்களாக!



# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1938ஞு செப்டம்பர்மீ பகுதான்யஞு ஆவணி-புரட்டாசி. திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| செப்டம்பர்மீ 1 | ஆவணிமீ 17 | வியா | ஸப் 10-13, அநு 46-52, குலச்சிறையார். |
| 2 | 18 | வெ | அஷ் 15-2, கேட் 53-42, தி 2-28, நந்தநவமி. |
| 3 | 19 | சனி | நவ 20-49, மூல 60-0, தி 16-11, குங்குலியக்கலயர். |
| 4 | 20 | ஞாய | தச 27-2, மூல 1-9, சே 0-39, தி 28-9, க்ஷீரவிரதம். |
| 5 | 21 | திங் | ஏகா 33-5, பூரா 8-38, ரா 0-27, பரிவர்த்தனைகாதிசி. |
| 6 | 22 | செவ் | துவா 38-32, உரா 15-44, தி 26-47, வாமனஜயந்தி. |
| 7 | 23 | புத | திர 43-4, ஸ்ரீவ 22-4, ரா 2-27, ஓணம், பிரதோஷம். |
| 8 | 24 | வியா | சசி 46-32, அவி 27-21, ரா 16-10, அனந்த விரதம். |
| 9 | 25 | வெ | ○ 48-57, சத 31-37, ரா 18-2, உமாமஹேஸ்வர விரதம். |
| 10 | 26 | சனி | பிர 50-14, பூட் 34-47, மஹாலயமாரம்பம். |
| 11 | 27 | ஞாய | துவி 50-34, உட் 36-58, சே 3-39. |
| 12 | 28 | திங் | திரி 49-59, ரே 38-15, தி 7-37, கௌரீ விரதம். |
| 13 | 29 | செவ் | சது 48-29, அசு 38-39, தி 28-35. |
| 14 | 30 | புத | பஞ் 46-10, பர 38-13, தி 2-29, மஹாபரணி. |
| 15 | 31 | வியா | ஷஷ் 42-58, * கிரு 36-56, தி 7-34, சந்திரஷஷ்டி, கிரு. |
| 16 | 1 | வெ | ஸப் 38-57, ரோ 34-49, தி 15-31, ரா 17-54, கன்யா ரவி 20-41. |
| 17 | புரட்டாசிமீ 2 | சனி | அஷ் 34-7, மிரு 31-52, ரா 21-22, மத்தியாஷ்டமி. |
| 18 | 3 | ஞா | நவ 28-31, ஆரு 28-9, ரா 25-49. |
| 19 | 4 | திங் | தச 22-11, புந 23-48, ரா 12-4. |
| 20 | 5 | செவ் | ஏகா 15-29, பூச 19-0, ரா 18-16, சன்யஸ்தமஹாலயம். |
| 21 | 6 | புத | துவா 8-37, ஆயி 14-4, ரா 11-37, பிரதோஷம். |
| 22 | 7 | வியா | திர 1-56, உப 53-46, மக 9-18, தி 27-53, அருணந்தி. |
| 23 | 8 | வெ | ● 50-15, பூர 5-4, தி 21-54, துலாயனம் 41-9, மஹாலய அமாவாசை. |
| 24 | 9 | சனி | பிர 45-58, உத் 1-41, உப 57-52, தி 21-57, ஆசுவீஜம். |
| 25 | 10 | ஞாய | துவி 43-10, சித் 58-57, தி 19-21, பிரீதிதுவிதியை. |
| 26 | 11 | திங் | திரி 42-6, ஸ்வா 60-0, தி 13-12. |
| 27 | 12 | செவ் | சது 42-52, ஸ்வா 0-4, தி 14-45. |
| 28 | 13 | புத | பஞ் 45-30, விசா 2-57, தி 13-44, பெரிய திருமலைநம்பி. |
| 29 | 14 | வியா | ஷஷ் 49-43, அநு 7-35, தி 22-59. |
| 30 | 15 | வெ | ஸப் 55-6, கேட் 13-35, ரா 6-8, ஸத்தியநாராயணர். |

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரி௴ 1௳ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர்௴ 8௳ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்ப்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]


| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |

Printed and Published by Dr. S. Seshagiri Rao at the Lodhra Press, Royapettah, Madras.


மதராஸ் டி. சி. என். கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய

## கழுத்து செயின்கள்



அசல் தங்க செயின்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல. கறுக்காது.

2 வருஷம் உத்தரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

செயின்கள் விலை விபரம்

| | | | |
|---|---|---|---|
| பெரிய சைஸ் ஒத்தபேட்டை | 1-க்கு | ரூ. | 7—0—0 |
| ,, ரெட்டபேட்டை | ,, | ரூ. | 14—0—0 |
| ,, மூன்றுபேட்டை | ,, | ரூ. | 21—0—0 |
| ,, நான்குபேட்டை | ,, | ரூ. | 28—0—0 |

வி. பி. செலவு 1 பேட்டை முதல் 4 பேட்டை வரையில் 8 அணா

பேபி சைஸ் (சின்னது) ஒத்தபேட்டை 1-க்கு ரூ. 5—0—0
,, ரெட்டபேட்டை ,, ரூ. 10—0—0

வி. பி. செலவு 1-க்கு 8 அணா

குறிப்பு:—"கிரஹலக்ஷ்மி" பெயரைக் குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும். மேலும் 2 அணா பெருமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனாம்.

டி. சி. நாகலிங்கப்பா அண் கோ., 280, வால்டாக்ஸ் ரோடு, பார்க்டவுன் மதறாஸ்.

## "கிரஹலக்ஷ்மி"


பைண்ட் வால்யூம் 1. :: வெளிவந்து விட்டது

1937ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் டிசம்பர் முடிய வெளிவந்த பன்னிரண்டு இதழ்களும் வெகு நேர்த்தியாகவும் அழகாகவும் பைண்ட் செய்யப்பட்ட "கிரஹலக்ஷ்மி" பைண்ட் வால்யூம் 1. ஒவ்வொரு கிரஹ தலைவியின் கையிலும் இருக்கவேண்டியது. தமிழ் நாட்டு ஸ்திரீகள் அனைவரும் படித்து பயனடையத்தக்கது. சொற்ப பிரதிகளேயுள்ளன.

விலை ரூ. 5—0—0.

"கிரஹலக்ஷ்மி" காரியாலயம்
தபால் பெட்டி நெ. 655,
ராயப்பேட்டை, :: மதறாஸ்.

134 e 87
சென்னை-600 008.




# ஜுரங்களுக்கு

ரோகங்களில் முதன்மையானது ஜுரம். பலவித ஜுரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜுரம், பித்த ஜுரம், கப ஜுரம் முதலிய எல்லாவித ஜுரங்களையும் ஆச்சரியப்படும்படி நிவர்த்தி செய்வதில் முதன்மையானது

# அர்க்கா

இந்த அர்க்காவை கடந்த இருபத்தைந்து வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணாதிசயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளூவென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜுரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| இதன் விலை | 6 | அவுன்ஸ் புட்டி | ரூ. 2 8 0 |
| „ | 3 | „ | „ 1 8 0 |
| „ | 1 | „ | „ 0 8 0 |

**கேஸரி குடீரம் - ராயப்பேட்டை - மதராஸ்**



**ஏன் நீங்களும் இன்றிருந்தே இதைக் கையாண்டு இதன் அபார மான பலனை அடையக்கூடாது?**

அநேக தங்கமெடல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

# கேசரியின் பற்பசை

சகல விதமான பல் வியாதிகளையும் அறவே நீக்கி, பற்களை பளிங்குபோல் வெண்மையாக்கி, அழகு செய்வதுமன்றி யில் பற்களுக்கு வசீகரத்தையும், பிரகாசத்தையும், மதுரத்தையும், அரிய பலத்தையும், தேகத்திற்கு சுகத்தையும் தருகிறது.

விலை டியூப் 1-க்கு அணா 8

# QUEEN OF TONICS

ஸ்திரீகளுக்கு ஒரு வரப்பிரசாதம்




# லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி.